
மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

மாலை—17




உரையாசிரியர்:

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

(சங்கரனடிமை)

உ

விநாயகர் துதி



திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

மொழிக்கு மொழி தித்திக்கும்
மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச்செய்த
தேவாரத் திருப்பதிக வெளியிடு)

மாலை—17

உரையாசிரியர் :
சிவபுராண ஞானபூஜகர், சாஸ்த்ர பிரசார பூஷணம்,
சிவபுராணக் காவலர், சிவபுராணச் சக்கரவர்த்தி

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா
(சங்கரன் அடிமை)



ரக்தாக்ஷி ஆண்டு
மாசிமக நன்னாள் வெளியீடு
6-3-1985

பிரசுரம் :

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா
5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,
மேலமாம்புலம். சென்னை - 600 033.

 1985 [விலை ரூ. 3-00

சைவ சமயாசாரியர்

நால்வர் துதி



திருஞான சம்பந்தர்   திருநாவுக் கரசர்   சுந்தர மூர்த்திகள்   மாணிக்க வாசகர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே.

5-D

திருஞான சம்பந்தர்



காழிவருந்தவவேந்தர், கவுணியர் தம்
குலதிலகம், ஞாலமெலாம் உய்திபெற
ஞானபோனகமுண்டான், மன்னியசீர்ச்
சண்பை முத்தமிழ் கெழுவிரகன், நான்மறையின்
நற்பொருளை நற்றமிழில் விரித்தபிரான்

திருஞானசம்பந்தர்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்



ஸமர்ப்பணம்

ஓம் ஸ்ரீ பக்தவத்ஸலாய நம:

சிவபெருமானின் அஷ்டோத்தரசத நாமங்கள் எனப்படும் 108 அருச்சனைத் திருநாமங்களுள் பக்த வத்ஸல: (பக்தவத்ஸலன்) எனப்படுவது 17வது திரு நாமமாகும். பக்தர்களிடம் வாத்ஸல்யம் கொண்டவன் என்பது இதன் பொருளாகும். வாத்ஸல்யம் என்ற வடமொழிச் சொல் பொதுவாக அன்பு என்ற பொருளைத் தருமாயினும் சிறப்பாகப் பெற்றோருக்குத் தங்கள் குழந்தைகளிடம் உள்ள அன்பையே புலப்படுத்தும். ''அம்மையப்பரே உலகினுக்கு அம்மையப்பர்'' எனச் சாத்திரமுங்கூறும்.

எனவே தாயும் தந்தையுமாகித் தன்னடியார்களுக்குத் தண்ணளி புரியும் அம்மையப்பரின் திருவடிகளில் ஓம் பக்தவத்ஸலாய நம: என்ற 17வது திருநாமமந்திரத்தால் அருச்சித்து இந்தப் பதினேழாவது ஞானத்தமிழ் மாலை யினைச் சமர்ப்பிக்கும் பேற்றினை முந்தைய பிறவிகளில் செய்த புண்ணியத்தால் பெறுகின்றனன்.

இங்ஙனம்

ஆங்கீரஸ வேங்கடேச சர்மா

உரையாசிரியர்

சிவம்



புகழ் பெற்ற திரைப்பட
இயக்குனர் — தயாரிப்பாளர்

திரு. T. R. சுந்தரம், B.A., B.Sc., (LEEDS)

தோற்றம்: 16-7-1907 : : சிவலோக பிராப்தி: 29-8-1963

இவரது நினைவு மலராக இம்மாலையினைத் தமது செலவில்
வெளியிட்டவர் திரு. R.C. கதிர்வேல், B.A.,
அலுவலர், விஜயகுமார் மில்ஸ் லிமிடெட்,
கலயம்புத்தூர் — பழநி.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

பிரபல திரைப்பட இயக்குனர்

காலஞ்சென்ற

உயர்திரு T. R. சுந்தரம்

B.A., B.Sc., (LEEDS)

அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்

(R. C. கதிர்வேல், B. A., அலுவலர்
விஜயகுமார் மில்ஸ் லிமிடட், கலயம்புத்தூர், பழநி)

தோற்றுவாய்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றுமை நன்று. (திருக்குறள் : 236)

தெய்வப் புலவர் திருவள்ளுவரின் மேற்காட்டிய பொய்யா மொழிக்கு இலக்கியமாகத்தோன்றியவர்—பிரபல திரைப்பட இயக்குனராகத் திகழ்ந்த உயர்திரு. T. R. சுந்தரம் B. A., B. Sc., (LEEDS) அவர்கள் எனது சிறிய தகப்பனுர் ஆவர். எனது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்குத் தேவை யான உயர்கல்வியைப் பெறவும், இல்வாழ்க்கை அமையவும் பெருமளவில் உதவி புரிந்தவர். எனவே அவருக்குச் செய்யும் நன்றிக்கடனுக அவரது நினைவாக ஏதேனும் ஒரு புண்ணியச் செயல் செய்ய வேண்டும் என்ற எண்ணம் திருவருளால் தோன்றியது. தோன்றவே அத்திருவருளின் வழியே சிந்தித் துப் பார்த்துப் பரம உத்க்ருஷ்டமான திருமுறைகளை பாரி லுள்ளார் அனைவரும் படித்துச் சிவனடியே சிந்திக்கும்

திருப்பெருகு சிவஞானம் பெறச்செய்யும் முயற்சியில் திரு T.R. சுந்தரம் அவர்களுடைய நினைவாக ஒரு பணியில், சிவப் பணியில், ஈடுபட உறுதி பூண்டேன். அவ்வுறுதியின் விளைவு இந்த மூவர் தமிழ் மாலை—17 திரு. T. R. சுந்தரம் அவர்களது நினைவாகப் பிரசுரிக்கப்படுகிறது. சீகாழியில் தோணியப்பரின் திருவருள் ஆணைப்படி அன்னையார் அருளிய ஞானப்பாலமுதமே திருஞானசம்பந்தரின் வாய் வழியாகத் தேவாரத் திருப்பதிகங்களாக வந்தது. அத்தகைய ஞானத் தமிழைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ள எனது கெழுதகை நண்பர் திரு. ஆங்கீரஸ வேங்கடேச சர்மா அவர்களின் 108 தமிழ் மாலை வெளியீட்டு முயற்சியில் ஒரு தமிழ் மாலைக்கு முழுமையாகப் பணம் உதவி செய்வதன் வாயிலாக திரு. T. R. சுந்தரம் அவர்கட்கு நான் செலுத்த வேண்டிய நன்றிக் கடனைச் செலுத்துகிறேன். அவரது ஞாபகார்த்த மாலையாக இந்தத் தமிழ் மாலை—17 வெளியிடப்படுகிறது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (திருக்குறள் : 110)

என்பதும் தெய்வப் புலவரின் அருள் மொழியேயன்றோ?

குடும்பச் சிறப்பு

முருகப்பெருமானின் இளவலான வீரபாஹுத்தேவரின் வழித்தோன்றல்களாகக் கருதப்படுபவர்கள் செங்குந்தர்கள் ஆவர். ஈட்டி எழுபது என்னும் அரிய நூலைப் பாடியவரும், தக்கயாகப் பரணி என்ற சிறந்த பரணி நூலைப் பாடியவரு மான கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் செங்குந்த மரபினரே யாவர். இவர்கள் நல்ல ஒழுக்கத்தைக் கைக்கொண்டவர் களாகையால் கைக்கோளர்கள் என்றும் பெயர் பெறுவர் (கை—ஒழுக்கம்). இங்ஙனம் பெருமைகள் பல பொருந்திய செங்குந்தர் குலத்தில் திருச்செங்கோட்டில் பிரபல நூல் வியாபாரியாக விளங்கியவர் திரு. V. V. காவேரி முதலியார்.

அவர் காலமாகி இப்பொழுது சுமார் 80 ஆண்டுகள் ஆகியிருக்கலாம். அன்னாரது குமாரர் V. V. C. ராமலிங்க முதலியார் அவர்களே எனது சிறிய தந்தையாரான T. R. சுந்தரம் அவர்களின் தந்தையாவார். தாயார் பெயர் கணபதி அம்மாள் என்பதாம். இவர்களுக்கு நான்கு பெண்களும் ஐந்து மகன்களும் பிறந்தனர். திரு T. R. சுந்தரம் கடைசி மகனாவார். நானும் எனது தகப்பனாருக்குக் கடைகி மகன் ஆவேன். எனது சிறிய தகப்பனாருக்கும் எனக்கும் இது ஒரு பொருத்தம் போலும்! திரு V. V. C. ராமலிங்க முதலியாருடைய மூத்த குமாரர் திரு V. V. C. R. கந்தப்ப முதலியார், இரண்டாவது எனது தகப்பனாரான V. V. C. R. சின்னப்ப முதலியார். மூன்றுவது V. V. C. R. வையாபுரி முதலியார் (இவர் PULLECOR MILLSஐ ஏற்படுத்தியவர்.) நான்காமவர் சைவப்பெருவள்ளல் எனப் பெயர் பெற்ற V.V.C.R. முருகேச முதலியார். இவர் பழநி ஞானதண்டாயுதபாணி தேவஸ்தான அறங்காவலர் குழுவின் தலைவராக இரண்டு முறை இருந்தவர். சுவாமிக்கு தங்கரதம், தங்கசப்பரம் செய்தவர். அடுத்த ஐந்தாமவரே எனது சிறிய தகப்பனார் T. R. சுந்தரம் B.A., B.Sc., (LEEDS) ஆவர். இவரது ஞாபகார்த்தமாகவே இந்தத் தமிழ் மாலை வெளியீட்டுக்கு என்னால் பண உதவி செய்யப்பட்டது.

இளமையும் கல்வியும்

திரு V.V.C. ராமலிங்க முதலியாருக்கும் திருமதி கணபதி அம்மாளுக்கும் கடைசிக் குமாரனாக 1907-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் தேதி பிறந்தார். அவர் பிறந்த நக்ஷத்திரம் தெரியவில்லை. எனினும் அவர் சிறந்த ராஜயோக ஜாதகத்திற்கு உரியவராயிருத்தல் வேண்டும். அவரது பள்ளிப் படிப்பு திருச்செங்கோட்டில் முடிந்த பிறகு சென்னை அரசினர் கல்லூரியில் 1925-ம் ஆண்டு முதல் 1929-ம் ஆண்டு வரை படித்து B. A. (PHILOSOPHY) பரீட்சையில் வெற்றி பெற்றார். பின்னர் இங்கிலாந்து சென்று அங்கு (LEEDS)

ஸர்வகலாசாலேயில் CHEMISTRY AND DYEING துறையில் B.Sc. பரீட்சையில் தேர்ச்சி பெற்ருர். 1929 முதல் 1932 வரை இங்கிலாந்தில் இருந்தார். அவர் சினிமாத் துறையில் சென்றதைவிட DYEING துறையில் போயிருந்தால் இன்னும் பெரிய பணக்காரர் ஆகியிருக்கலாம். இன்னும் பெருவாரியாகப் பலர்க்கு வேலே வாய்ப்பளித்து ஆதரித்திருக்கலாம். எனினும் சினிமாத் துறையிலும் அவர் பெரும் வெற்றியே பெற்ருர்.

குடும்பம்

திரு T. R. சுந்தரம் அவர்கள் இங்கிலாந்தில் தங்கியிருந்தபோது அங்கு ஒரு ஆங்கிலேய மாதினே மணந்து கொண்டார். அவருக்கு இரண்டு மகன்கள் பிறந்தனர். அவர்களில் ஒரு மகன் R. சுந்தரம் B.E., தந்தையார் விட்டுச் சென்ற மாடர்ன் தியேட்டர்ஸ்ஸை நிர்வாகம் செய்து வருகிருர்.

திரைப்படத் தொழிலில் சிறந்து விளங்குதல்

நான் முன்னமே கூறியது போல் திரு T. R S. அவர்கள் Dyeing துறையில் பிரவேசித்திருந்தால் ஒரு வேளே இன்னும் பெரிய பணக்காரராகவும் மேலும் பல பேரையும் ஆதரித்தவர்களாகவும் ஆகியிருப்பார். ஆனல், ஈச்வரசங்கல்பம் அவரைத் திரைப்படவுலகில் புகும்படிச் செய்தது. அத் தொழிலிலும் அவர் பெரும் வெற்றியே பெற்ருர் என்பது குறிப்பிடத் தக்கது. மாடர்ன் தியேட்டர்ஸ் (MODERN THEATERS) என்ற நிறுவனத்தை 1936ம் ஆண்டு ஆரம்பித்து அதன் மூலம் தமது திரைப்படத் தொழிலே நடத்தினர். பிரபல திரைப்பட இயக்குனராகவும் தயாரிப்பாளராகவும் (FILM DIRECTOR & PRODUCER) திகழ்ந்தார். அந்தக் காலத்திலேயே ஆண்டுக்கு 50,000 முதல் 1,00,000 ருபாய் வரை சம்பாதித்தார். திரைப்படத் தொழிலில் அவரது

சில குறிப்பிடத் தக்க சிறப்புக்களை மட்டும் கீழே கொடுத்துள்ளேன்.

1. மலையாளத்திலும் சிங்கள மொழியிலும் முதன் முதலாகப் படம் தயாரித்தவர்.

2. தமிழில் கேவா கலர் படத்தை முதன் முதலாகத் தயாரித்தவர். இன்றைய முதலமைச்சரான மாண்பு மிகு திரு. M. G. ராமச்சந்திரன் அவர்களைக் கொண்டு அன்று முதன் முதலாகத் திரு T.R. சுந்தரம் அவர்கள் எடுத்த முதல் கலர் படம் ''அலிபாபாவும் நாற்பது திருடர்களும்'' என்பதாகும். திரு. M. G. ராமச்சந்திரன் அவர்களுக்கும் இதுவே முதலாவது கலர் படம்.

3. 1955ம் ஆண்டு தமது முதலாவது ஆங்கிலப் படத்தை ஹாலிவுட் நடிகர்களைக் கொண்டு எடுத்தார். அந்தப் படத்தின் பெயர் JUNGLE என்பதாகும்.

இப்படி அநேக FIRSTகள் இவருக்குப் பெருமையளிப்பனவாகும். விரிவஞ்சிப் படத்துறை பற்றி மேலும் விளக்கவில்லை. கலைஞர் கருணாநிதி, சங்கீதமேதை G. ராமநாதன், கவியரசு கண்ணதாசன் இவர்களுக்குப் பெரும் ஆதரவு அளித்தார். திரு. T. R. S. ன் படங்களுக்குத் திரு கண்ணதாசன் அவர்கள் கடைசிவரை பாடல்கள் எழுதினார், ''என் முதலாளி, என் முதலாளி'' என்று தான் கண்ணதாசன் திரு T. R. S. ஐக் குறிப்பிடுவாராம். இன்னும் பல பேர்கள். நடிகையர்களில் சிரிப்பு நடிகை திருமதி மனோரமாவும் திரு T. R. சுந்தரம் அவர்களால் முன்னுக்கு வந்தவர். திருமதி மனோரமாவும் என்னைப் போலவே T. R. S. செய்த நன்றியை இன்றும் சமயம் வாய்க்கும் பொழுது நினைவு கூறுகிறார்.

எனக்குச் செய்த உதவி

எனது தந்தையார் 1914 — 1918 யுத்தத்தின் போது நிறைய சம்பாதித்தாராம். அவர் அம்மாதிரி பொருள் ஈட்டிய

தால்தான், இங்கிலாந்து சென்று தான்படிக்க முடிந்தது எனத் திரு. T. R. சுந்தரம் அவர்கள் எண்ணியதாலோ அல்லது அண்ணன் மகன் முன்னுக்கு வரவேண்டும் என்ற தயை காரணமாகவோ எனக்கு உதவி செய்திருக்கலாம்.

எனது 16-வது வயதிலேயே என்னை வியாபாரத்தில் ஈடு படுத்தும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. நான் அப்பொழுது ஈரோட்டில் இருந்தேன். சேலம் சென்று திரு T. R. S. ஐச் சந்தித்து "ஏன் அண்ணு, (நான் அவரை அண்ணு என்று தான் கூப்பிடுவது வழக்கம்) இந்த வயதிலேயே நான் வியா பாரத் துறையிலே இறங்க வேண்டுமா?" என்று கேட்டேன். உடனே அவரது பதில் "சரிடா, பட்ரா (படியடா)" என்பது தான். நான் B. A. பாஸ் பண்ணி முடிக்கும் வரையில் கிட்டத்தட்ட 4½ ஆண்டுகளுக்கு மாதம் ரூ. 100 வீதம் கொடுத்து வந்தார். இந்த 4½ ஆண்டுகளில் சுமார் ரூ. 5,000 அல்லது 6,000 வரையில் கொடுத்திருக்கலாம். இது அக் காலத்தில் மிகப்பெரிய தொகை என்பது கவனத்திற்குரியது. (1942 June to 1946 June)

நான் B. A. பரீட்சையில் தேறுவதற்குமுன் எங்கள் குடும் பத்தில் ஒரு நிகழ்ச்சி காரணமாக எங்களுக்கும் அவருக்கும் ஒரு பிணக்கு ஏற்பட்டது. இல்லாவிடில் என்னை அவர் மேல் படிப்புக்கு இங்கிலாந்துக்கும் அனுப்பியிருப்பார். நான் இங்கிலாந்து சென்றிருந்தால் சைவ சித்தாந்தத் தத்துவம் உலகம் முழுமையும் பரவியிருக்கும். எப்படி? நான் ஒன்றுமே செய்திருக்க வேண்டியதில்லை. "SAIVA SIDDHANTA PHILOSOPHY AS A PRACTICAL KNOWLEDGE" என்ற மறைமலையடிகளாரது ஆங்கில நூலில் 100 பிரதிகள் கொண்டு போய் ஆங்கில நாட்டிலும் அமெரிக்காவிலும் உள்ள மெய்ஞ்ஞானிகட்கும் விஞ்ஞானிகட்கும் (ஈன்ஸ்டீன் உள்பட) கொடுத்திருந்தால் சைவ சித்தாந்தம் இன்று உலகத்தில் அறியப்படுகிற அளவைவிட மிகுதியாக அறியப்

பட்டிருக்கும் என்றால் மிகையாகாது. ஆனால் அந்தப் புண்ணியம் எனக்குக் கிடைக்கவில்லை.

1947-ஆம் ஆண்டு ஜூன் 30-ம் தேதி ஒரு விபத்தினால் எனது தோள்பட்டை எலும்பு முறிந்தது. இதைக் கேள்விப் பட்டவர் தினமும் என்னைப் பார்க்க வந்தார்.

1948-ம் ஆண்டு மே மாதம் 27-ம் தேதி நடைபெற்ற என் திருமணத்துக்கு ரூ. 3000/ உதவி செய்தார். தன் அண்ணன் மகன்கள் என்ற பரிவு அவருக்கு எப்போதுமே இருந்தது. 1962 அக்டோபரில் என் தாயாரிடம் ''அண்ணி, என்ன பண்ணியும் இந்த பசங்கள் முன்னுக்கு வருவதாகத் தெரியவில்லையே'' என்று வருத்தப்பட்டுக் கூறியதிலிருந்தே இந்தப் பரிவு புலனாகிறது. அந்த சமயம் என் மனைவி உடல் நலமற்றிருந்த போது ரூ. 50/- கொடுத்து கார் கொடுத்து என் அன்னையை அனுப்பினார்.

நான் எனது நிலம் வீடு முதலியவைகளை விற்றுவிட்டு வியாபாரம் செய்ததில் நஷ்டமேற்பட்டது. கலயம்புத்தூர் விஜயகுமார் மில்ஸில் அலுவலராகப் பணியேற்ற பிறகும் சேலம் போய் அவரைப் பார்க்கும் போதெல்லாம் ரூ. 100, 200 என்று கொடுத்து உதவுவார். இன்னும் பலவுதவிகள் இருப்பினும் விரிவஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

பெருந்தன்மை

அனேகமாக 1945 மார்ச் அல்லது ஏப்ரலில் இருக்கலாம். ஒரு நாள் அவர் வீட்டிற்குச் சென்றிருந்த சமயம் சாப்பிடும் பொழுது சமையற்காரன் ஒரு ''சூப்'' (SOUP) கொண்டு வந்து வைத்தான். அவரது ஆங்கிலேய மனைவி, குழந்தைகள், அவர் எல்லோரும் உடன் உண்ணும் சமயம் அது. நான் அதைச் சாப்பிட எடுத்தேன். உடனே ''டேய், நீ அதைச் சாப்பிடாதே. அது இறைச்சி சூப் (MUTTON SOUP)'' என்று சொன்னது எனக்கு இன்னும் நினைவில்

வருகிறது. தான் எவ்விதமான புலாலுணவு சாப்பிடுபவராக இருந்தாலும் நான் சுத்தமான மரக்கறி உணவே சாப்பிடு பவன் (PURE VEGETARIAN) என்று அறிந்து இருந்தமை யால் என்னைத் தடுத்து நிறுத்திய பெருந்தன்மை என்றும் மறக்க முடியாதது,

உள்ளத்தால் இனியவர்

அவர் முன்கோபக்காரர், முரடர், ஆட்களை அடித்துக்கூட விடுவார் என்று கூறுவார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் Dr. ஜான்சனைப் பற்றி பாஸ்வெல் என்பவர் கூறியது தான். "Dr. Johnson has got the skin of the bear, but not the heart of the bear." டாக்டர் ஜான்ஸன் அவர்களின் தோல் கரடியுடையது போன்றதானாலும், அவரது இதயம் கரடியுடையது அல்ல என்பது இதன் கருத்தாகும். அதாவது பார்வைக்கு முரடன் போலத் தோன்றினாலும் உள்ளத்தால் முரடர் அல்லர் என்பதாம்.

தந்தி வந்தது

1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29-ம் தேதி திரு T.R. சுந்தரம் அவர்கள் காலமானார் என்று தந்தி வந்தது. அந்த சமயம் கையில் ஒரு பைஸா கூட இல்லை. ஒருவரிடம் 2 ரூபாய், இன்னொருவரிடம் 2 ரூபாய், மற்றொருவரிடம் 2 ரூபாய், பிறகு வேறு யாரிடமோ அல்லது என்னிடத்தில் இருந்ததோ ரூ. 2, இவைகளைச் சேர்த்துக் கொண்டு இரவு 2 மணிக்கு ஒரு லாரியின் மூலம் பழநி சென்றேன். பழநிக்கும் என்னிருப்பிடத்துக்கும் சுமார் 3½ மைல். அப்பொழுது சேலத்துக்கு நேர் பஸ் கிடையாது. காலையில் தாராபுரம், ஈரோடு, பிறகு சேலம் பஸ் மாறிப் போனேன். என் மனம் எல்லாம் ஒரே துடிப்பு. ''ஞான தண்டாயுதபாணி! உன்னை நான் இதுவரை ஒழுங்காக வழிபட்டிருந்தால் நான் போகிற வரைக்கும் உடலை எடுக்காமலிருக்க வேண்டும்'' எனப் பிரார்த் தித்துக் கொண்டே சென்றேன். பகல் 11 மணியாயிற்று.

அதுவரையில் காலையிலிருந்து காபிகூடக் குடிக்காது சென்றேன். ஞான தண்டாயுதபாணியிடம் செய்து கொண்ட என் பிரார்த்தனை வீண்போகவில்லை. அதுவரை அவரை எடுக்க வில்லை. கண்ணீர்க் கடலினின்றும் ஒருவாறு கரையேறினேன். ஸ்மசானத்தில் சிதை மூட்டுவதற்கு சீமையெண்ணெய் (Kerosene Oil) வேண்டும் என்று ஒருவர் சொன்னார். அவர் சத்தார் என்ற முஸ்லீம் ஆவார். சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் என் சிற்றப்பாவிடம் (T.R.S. இடம்) பணியாற்றியவர், ஆனால் வறிஞர். ஒரு எட்டு அணா வேண்டும். நான் செய்த புண்ணியம் என்னிடம் எட்டணா இருந்தது. அதற்கு சீமை யெண்ணெய் வாங்கி ஊற்றினார்கள். லட்சாதிபதிகள் எத்தனையோ பேர்கள் நின்றார்கள். ஆனால் என் எட்டணா சீமையெண்ணெயில் தான் அவர் உடல் எரிந்தது.

முடிப்புரை

இங்ஙனமாக எனது சிறிய தந்தையார் திரு T.R. சுந்தரம் B.A., B.Sc., (Leeds) என்ற புகழ் பெற்ற திரைப்பட இயக்குநர் மறைந்து இப்பொழுது 22 ஆண்டுகள் ஆகி விட்டன. ஆயினும் அவரால் முன்னுக்கு வந்த பலர் இன்று தமிழ் நாட்டில் உள்ளனர். அவரால் ஸ்தாபிக்கப்பட்ட மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனமும் அவரை நினைவு படுத்தும் கருவியாக உள்ளது. அவரது பருவுடல் மறைந்தாலும் நுண்ணிய புகழுடலால் இன்றும் அவர் வாழ்ந்து கொண்டிருக் கிறார்.

நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. (திருக்குறள்: 235)

என்ற தெய்வப்புலவரின் திருமொழியே இதற்குப் பிரமாணம். எனது சிறிய தந்தையாரின் நினைவும் அவர் எனக்குச் செய்த உதவிகளும் அவர் எங்கள் குடும்பத்தாரிடம் காட்டிய பேரன்பும் எனது நெஞ்சை விட்டு என்றும் அகலாது. இந்த

நீங்காத நினைவே நன்றிக்கடனாக இந்தத் தமிழ்மாலை வெளியீட்டுக்குக் காரணமாக அமைந்தது. எல்லாப் புண்ணியங்களிலும் சிறந்த புண்ணியமான இந்தச் சிவபுண்ணியம் எனக்கும் மறைந்த அவருக்கும் என்றென்றும் நன்மை பயக்கும் என்ற திடமான உறுதியுடனேயே இந்த புண்ணியத்தில் ஈடுபட்டேன்.

நன்றியுரை

எனது சிற்றப்பா திரு T.R. சுந்தரம் அவர்களின் மறைவு பற்றி தந்தி கொடுத்து அதன் மூலம் அந்தப் பரமோபகாரியின் உடலையாவது கடைசி நேரத்தில் பார்க்க உதவி புரிந்தவர் எனது மற்றொரு சிறிய தந்தையான திரு V. V. C. R. வையாபுரி முதலியாரின் இரண்டாவது மகனான திரு. R. V. கோபால் அவர்களுக்கு இந்த சமயத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி, இந்த 17வது மாலை திரு T. R. S. அவர்களின் நினைவு மாலையாக வர உதவி செய்தவர்களில் எனது பெரிய அப்பா திரு V.V.C.R. கந்தப்ப முதலியாரின் கடைசி மைந்தரான திரு R.K. சித்தையன் அவர்கள் தமது சொந்த செலவில் திரு T. R. S. அவர்களின் உருவப் பட 'பிளாக்' கினைத் தயாரித்து உதவினார். அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் பணிபுரியும் கலயம்புத்தூர் விஜய குமார் மில்ஸ் லிமிடெட், அதன் இணைப்பு நிறுவனங்களான Kongarar spinners (P) Ltd., Kongarar Textiles Ltd., Kongarar Waste Spinners (P) Ltd., V. K. Mills Bleaching & Dyeing Thread Mills ஆகியவற்றின் மானேஜிங் டைரக்டரான திரு. G. வெங்கடராமன் அவர்கள் மாதச்சம்பளம் அல்லாமல் Medical Benefits, Boys Education Benefit, Marriage Ex-Gratia முதலியவைகளை அளித்துவருகிறார். அத்துடனல்லாமல்

எனது மகனுக்கும் வேலை கொடுத்துள்ளார். இத்தகைய அவரது ஆதரவினுல் தான் இந்த தமிழ்மாலைக்கு ஆகும் செலவினை நான் ஏற்று முழுப்பணத்தையும் அனுப்பமுடிந்தது.


கடைசியாகத் தமது மூவர் தமிழ்மாலை வரிசையில் எனது சிறிய தந்தையார் திரு. T.R.S. நினைவாக ஒரு தமிழ் மாலையைப் பிரசுரிக்க இசைந்த திரு. ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா அவர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றிகளைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மேற்கூறிய நால்வரும் நல்லனவெல்லாம் பெற்று நீடூழி வாழ எனது இஷ்ட தெய்வங்களான பழநி தண்டாயுதபாணி யையும் செஞ்சேரி மந்த்ராசலபதி முருகனையும் பாதாரவிந் தங்களில் பணிந்து பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

எல்லாம் அரன் நாமமே சூழ்க!

வையகமும் துயர் தீர்கவே!!

சிவம்.



உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

செய்ந்நன்றி மறவாக் கதிர்வேலர்

பதிப்பாசிரியர்

ஆங்கீரஸ சர்மா எழுதியது

செய்ந்நன்றி மறத்தல் என்பது பெருங்குற்றம். உய்தி யில் குற்றம் என்று திருக்குறளும் புறநானூறும் கூறுகின்றன. ஆயினும் இவ்வுலகில் செய்ந்நன்றி மறவாதவர்களைவிட மறந் தவர்களே அதிகம் எனக்கூறலாம். இந்த உலகியல் நிலையில் தனக்குச் செய்த உதவிகளை நினைந்து மனம் உருகி, உதவி செய்த சிறிய தந்தையார் திரு. T.R. சுந்தரம், B.A., B.Sc., (LEEDS), (திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குனர்) மறைந்து சுமார் 22 ஆண்டுகள் ஆகியும் அவரை மறவாது அவரது நினைவாக ஒரு சிறந்த சிவ புண்ணியத்தைச் செய் துள்ள உயர்திரு R. C. கதிர்வேல் அவர்களைப் பற்றியும் நாம் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

திரு. T. R. சுந்தரம் அவர்களுடைய வரலாற்றில் குறிப் பிடப்பட்ட அவரதுசகோதரர்களில் ஒருவரான திரு. V.V.C.R. சின்னப்பா முதலியாரின் குமாரராக 17—6—1926 ஆண்டுப் பிறந்தவர் நம் திரு. R. C. கதிர்வேல் ஆவர். இவர் பிறந்தது பூர நக்ஷத்திரம் சிம்ம ராசியாகும். சிம்மம் லக்கினம் ஆகும். இப்படி வர்க்கோத்தமம் பெற்றவர் ஆயினும் உலகியலில் செல்வர் அல்லர்.

திரு. R. C. கதிர்வேல் அவர்கள் பெரிய பணக்கார குடும் பத்தில் பிறந்தவர். இவரது சிற்றப்பாவைப் போலவே இவரும் தந்தையார்க்குக் கடைசி மகனவர். சிற்றப்பாவின்

உதவியால் B.A. வரை படித்துத் தேர்ச்சி பெற்றார். காலத்தின் சூழ்நிலையால் வியாபாரத்தில் நஷ்டமேற்பட்டுப் பின் பழநி—கலயம்புத்தூர் விஜயகுமார் மில்லில் அலுவலராகப் பணியேற்றார். இன்று வரை அதே மில்லில் பணியாற்றி வருகிறார்.

இவருக்கு சைவ சித்தாந்தத்திலும் திருமுறைகளிலும் பற்று மிக அதிகம். பற்று மட்டுமல்ல, ஓரளவு தேர்ச்சியும் தெளிவும் பெற்றவர். திருமுறைகளிலும் சித்தாந்த நூல்களிலும் மற்றவருக்குப் புரியாத பல இடங்களை இவர் அறிந்துள்ளார். இவரது குருநாதர் பழநி ஈசான சிவாசாரிய சுவாமிகள் ஆவர். குருநாதர் மறைவுக்குப் பின்னரும் குருபக்தி மாறாது தனது காணிக்கையை குரு பத்தினியாரிடம் ஸமர்ப்பித்து வருகிறார். தமிழ் மொழிப் பற்றும் இவருக்கு உண்டு. எனினும் வடமொழியில் வெறுப்பில்லை. அதனையும் போற்றுவார். ஆதி சங்கரரின் உமாமஹேச்வர ஸ்தோத்ரம் வடமொழியில் அமைந்தது. பொருள் தெரியாவிடினும் அதைப் படிக்கும் போது கண்களில் நீர் பெருகுகிறது என்கிறார். பக்தி எதைத் தான் செய்யாது?

தவத்திரு. மறைமலையடிகளாருடன் பழகும் வாய்ப்பு பெற்று அவரது அன்புக்கு உரியவரானார். மறைமலையடிகளாரது குமாரர் திரு. மறை. திருநாவுக்கரசு அவர்களும் இவருக்கு மிகவும் வேண்டியவர். திரு. வி. க. போன்ற பெரியோர்களிடமும் இளமையிலேயே அன்பு பூண்டு பழகியவர். சித்தாந்த சிகாமணி திரு. வஜ்ரவேல் முதலியாரிடத்தும் நெருங்கிப் பழகியவர். நற்குணங்கள், நற்சிந்தனைகள் ஆகியவற்றுக்கு இருப்பிடமான இவரைப் பெரியோர்கள் அன்புடன் வரவேற்றதில் வியப்பில்லையன்றோ?

திருமுறைகளில் அளவிடமுடியாத, அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்ட இவர் தமது வாழ்க்கையில் திருஞான சம்பந்தப் பெருமான் எப்படிப் பதிந்துள்ளார் என்பதை

அவரது சில அனுபவங்கள் மூலம் விளக்குகின்ருர். தவத்திரு மறைமலேயடிகளாரின் மருகர் காலஞ்சென்ற திரு. குஞ்சிதபாதம் பிள்ளேயவர்கள் 1944-ல் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறினுராம். ஒரு விபத்தின் போது அனேவருக்கும் அடிபட திரு. குஞ்சிதபாதம் பிள்ளேயவர்களுக்கு மட்டும் அடிபடவில்லே யாம். வேயுறு தோளிபங்கன் எனத் தொடங்கும் கோளறு பதிகம் பாடியதே அதற்குக் காரணம் என அவர் கூறினுர். அதே போலத் தமது வாழ்க்கையிலும் திருஞானசம்பந்தப் பெருமானுரது பதிகங்கள் விளேவித்த அற்புதங்களே எண்ணி அகமகிழ்கிருர் திரு. கதிர்வேல் அவர்கள்.

1. 1945 மே மாதம் — அப்பொழுது இவருக்குப் பத்தொன்பது வயது முடியப் போகிறது. சித்தன்னவாசல் பல்லவர் கால ஓவியம் காணச் சென்ற சமயம். புதுக்கோட்டையிலிருந்து இவரும் மற்ருெருவரும் வரும்போது ஒரு ஊர் (பெயர் நினேவு வரவில்லே). 'பஸ்'ஸில் இடமில்லே என்று கண்டக்டர் சொல்லி விட்டான். கூட வந்தவர் ''ஐயா! நாங்கள் ஊருக்குப் புதிது. இங்கே இரவு தங்குவதற்கும் இடமில்லே'' என்று மன்ருடினுர். R.C. கதிர்வேலோ உறுதியாக ''வேயுறு தோளிபங்கன்'' பாடிக் கொண்டு வண்டி ஓட்டுனர் முன்பாக நின்று கொண்டார். ஓட்டுநர் உடனே ''நீங்கள் இருவரும் ஏறிக்கொள்ளுங்கள்'' என்ருர். கண்டக்டர் ஏற்கெனவே இருவருக்கு இடம் கொடுத்தாகி விட்டது என்று கூறியும் ஓட்டுநர் விடாப்பிடியாகப் ''பரவாயில்லேயப்பா! இந்த இரண்டு பேரையும் ஏற்றிக் கொள்'' என்ருர். வேயுறு தோளிபங்கன் பதிக பாராயணமே இதை நிகழ்வித்தது என்றும் இதுவே தமது வாழ்க்கையில் தேவாரம் விளேவித்த முதல் அற்புதம் என்றும் கூறுகிருர்.

2. இவர் எந்தக் காரியம் செய்வதானுலும் திருஞான சம்பந்தர் தேவாரத்தில் கைசாத்து சாற்றியே அதன்படி செய்கிருர். இவரது மனேவியாரது இரண்டாவது பிரசவசமயம். அன்று அமாவாசை. ஒன்றும் சாப்பிடாமலேயே மிகவும்

கஷ்டப்பட்டார். உடனே இவர் தனது மாளிகையின் மாடிக்குச் சென்று திருஞானசம்பந்தர் தேவாரம் கைசாத்துச் சாற்றினர். திருக்கரவீரம் (கழுதை முத்தி பெற்ற தலம்) திருப்பதிகம் வந்தது. படித்தார். மனைவி உயிர் பெற்ருள். இது நடந்தது 6-2-1951. இதன் முதல் பாடல் ''அரியும் நம் வினை'' என்று ஆரம்பம்.

3. உள்ளத்தில் அச்சம் தோன்றியபோது திருத்தேவூர் பதிகம் வந்ததாம். ''தேவூர் அண்ணல் சேவடி அடைந்தனம், அல்லல் ஒன்றும் இலமே'' என்ற பெருமானின் வாக்குப்படி அச்சமும் அல்லலும் ஒருங்கே தீரப் பெற்ருர்.

4. தமது மனைவிக்கு ஏற்பட்ட மற்றெரு ஆபத்தான நிலையிலும் திருப்பாச்சிலாச்சிராமம் என்ற தலத்தில் திருஞான சம்பந்தர் பாடிய திருப்பதிகம் தான் காத்தது என்கிருர். இதனைச் சேக்கிழார் ''தணிவில் பிணி தவிர்க்கும் பதிகம்'' என்று கூறுகிருர்.

5. தமது சிறிய தந்தையார் திரு T.R. சுந்தரம் அவர்கள் 1952-ல் அமெரிக்கா செல்ல வேண்டியிருந்ததாம். அப்பொழுது விமான விபத்துக்கள் அதிகமாக இருந்ததாம். திருஞானசமபந்தர் 3-ம் திருமுறை, திருக்கொள்ளம்பூதூர், ''கொட்டமே கமழும்'' எனத் தொடங்கும் முதற் பாடலை யுடைய திருப்பதிகம் படித்தார். ஒவ்வொரு பாடலிலும் ''செல்லவுந்துக சிந்தையார் தொழ, நல்குமாறு அருள் நம்பனே'' என முடியும் திருப்பதிகம் அது. எவ்விதமான விபத்துமின்றிச் சிறிய தந்தையாரின் அமெரிக்கப் பயணம் நிகழ்ந்தது.

6. புயலுக்கும் இதே பாடலைத்தான் படித்தேன். புயல் சென்னையைத் தாண்டியது.'' ''செல்லவுந்துக'' என்ற சொல் என்கிருர்.

7. இந்த 17 வது தமிழ் மாலைக்குப் பணம் உதவ Bank Draft எடுப்பதற்கும் திருஞானசம்பந்தர் தேவாரம் கைசாத்து சாற்றியே முடிவு செய்தார். இப்படிப் பல சம்பவங்கள்.

இங்ஙனம் திருஞானசம்பந்தப் பெருமானிடம் அளவு கடந்த பக்தி பூண்ட இவர், முதன் முதலில் எனது தமிழ் மாலைகள் வெளியீடு பற்றி 'கலைமகள்' பத்திரிகையில் வெளியான மதிப்புரை மூலம் அறிந்தாராம். ஸ்மார்த்த பிராமணருக்கும் (எனக்கும்) திருமுறைகளுக்கும் என்ன சம்பந்தம்? நாம் முப்பொருள் உண்மை (பதி, பசு, பாசம்) கொள்கைக் காரர்கள். ஸ்மார்த்தர்களோ ஒரே பொருள் கொள்கைக் காரர்கள் என்று வாளாவிருந்து விட்டாராம். பின்னர் தவத் திரு. மறைமலையடிகளாரின் தவப்புதல்வர் திரு. மறை திருநாவுக்கரசு மூலம் நான் இவரை அறிந்து கடிதமும் எனது தமிழ்மாலைகளையும் அனுப்பினேன். அப்பொழுதும் இவர் ''சைவ சித்தாந்தக் கொள்கைக்கு முரண்பாடில்லாது உரை எழுதுவீர்களா?'' எனக்கேட்டு எழுதினர். சைவசித்தாந்தத்தில் அத்துணைப்பற்று இவருக்கு. ''உரைகளைப் படித்துப் பாருங்கள். திருமுறை ஆசிரியர்களது திருவுள்ளத்துக்கு மாருக என் உரை அமையாது'' என்று உறுதி கூறினேன். இங்ஙனம் எங்கள் நட்பு வளர்ந்தது.

திரு. மறை. திருநாவுக்கரசு அவர்களும் என்பால் பேரன்பு பூண்டவர்கள். மூவர் தமிழ் மாலைக்கு ரூ. 100/- அன்பளிப்பு அளித்து அத்துடன் ஒரு பரிந்துரையும் வழங்கிய போது அதில் ஆங்கீரஸன் அடிமை என்றே கையெழுத்திட்டார். இதுவும் திரு. R.C. கதிர்வேல் அவர்கள் என் மீது அன்பு பூண்டதற்கு ஒரு காரணம்.

நிற்க, ஸ்மார்த்த பிராமணர் ஒருவர் திருமுறைகளை வெளியிடுகிருர். நாம் அதற்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இவருக்குத் தோன்றியது. அதே நேரத்தில் தமக்குப் பேருதவி செய்த தம் சிறிய தந்தையின் நினைவாக

ஒரு நற்செயல் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் தோன்றியது. இரண்டும் சேர்ந்து இந்தத் தமிழ்மாலை—17-ஐ உருவாக்குகிறது. உயிருடன் இருக்கும் ஒருவரைப் புகழ்ந்து எழுதினால் அவரால் மேலும் நன்மைகள் கிடைக்கலாம். இருபத்திரண்டு ஆண்டுகட்கு முன் மறைந்த சிறிய தகப்பனாரின் நினைவாகப் பொருள் செலவு செய்து இதை வெளியிடுவதில் இவர் அடையக் கூடிய உலகியல் பயன் யாதேனும் உளதோ? எனவே நன்றி உணர்வும் திருவருள் நம்பிக்கையுமே இதற்குக் காரணம். இந்தப் புத்தகத்தில் ''திரு T.R. சுந்தரம் அவர்களது உருவப்படம் Blockஐ ART காகிதத்தில் அச்சிட்டால் செலவு அதிகமாகும், சாதாரண வெள்ளைத் தாளில் போடலாம்'' என்றேன். ''அள்ளிக் கொடுத்த வள்ளலின் படத்தை சாதாரணத் தாளில் போடச் சம்மதிக்க மாட்டேன். என்ன செலவானாலும் சரி, ART காகிதத்தில் தான் போடவேண்டும்'' என்று உறுதியாகக் கூறினார். என்னே இவரது நன்றி மறவாத் தன்மை!

Dr. Johnson (டாக்டர் ஜான்ஸன்) என்னும் ஆங்கிலக் கவிஞன் ''ஒரு நாயை ஹென்றி என்று பெயரிட்டு அழைத்தால் அதையும்கூட நான் நேசிப்பேன்'' என்று கூறினானும். ஹென்றி என்பவன் ஜான்ஸனுக்கு இளமையில் ஆக்ஸ்போர்டில் படித்துக் கொண்டிருந்த போது செய்த உதவியே இதற்குக் காரணம். நமது R. C. கதிர்வேல் அவர்களும் ''சுந்தரம்'' என்று பெயரிட்டால் அம்மாதிரி பெயரிடப்பட்ட யாரையும், எதையும் நேசிப்பார் என்றே கொள்ள வேண்டும்.

பெற்று, வளர்த்து, கல்வி பயிற்றுவித்து ஆளாக்கிவிட்ட பெற்றோர்களையே மகன்கள் மறந்துவிடுகிற இக்காலத்தில், தமக்குப் படிக்கவும் திருமணத்திற்கும் உதவி செய்தார் என்ற காரணத்தால் 22 ஆண்டுகட்கு முன் மறைந்த சிறிய தந்தையார் திரு. T.R. சுந்தரம் அவர்களை மறவாது நன்றி பாராட்டும் திரு. R.C. கதிர்வேல் அவர்களின் செய்ந்நன்றி மறவாப் பண்பாட்டை என்னென்று புகழ்வேன்?

இந்தத் தமிழ்மாலே வெளியீட்டுக்கு ரூ. 1500/- செலவு ஆகும் என்றதும், சிறிதும் தயங்காது ரூ. 1500/- அனுப்பியதுடன் நில்லாமல் மேற்கொண்டு என்ன செலவானலும் கொடுக்கிறேன் என்று கூறும் திரு. R.C. கதிர்வேல் அவர்களின் வள்ளன்மையை என்னவென்று புகழ்வேன்?

வேறு வகைகளிலும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளல் கூடுமெனினும் திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிக வெளியீட்டுக்கு அந்த உதவியைச் செய்த திரு. R.C. கதிர்வேல் அவர்களின் திருஞானசம்பந்தர் பக்தியை என்னவென்று போற்றுவேன்?

வேறு அன்பர்கள் மூலமாகவும் இந்தத் தேவாரப் பணியைச் செய்து கொள்ளக்கூடுமாயினும், இந்த நன்கொடையை எனக்களித்த திரு. R.C. கதிர்வேல் அவர்களின் நட்புணர்ச்சியையும் என்னென்று பாராட்டுவேன்?

நான் சமயப்பணி தொடங்கிய நாள் முதல் இன்று வரை எவரும் ரூ. 1500/- ஒரே சமயத்தில் எனக்கு நன்கொடை அளித்ததில்லே என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இந்தப் பெருங்கொடை வழங்கிய திரு. R.C. கதிர்வேல் அவர்கட்கு யான் செய்யக்கூடிய கைம்மாறும் ஒன்று உளதோ? இல்லே என்றே கூறலாம். எனினும் ஒன்று உளது என்றும் கூறலாம். அஃது, திரு. R.C. கதிர்வேல் அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் நீடு வாழ்ந்து, அலுவலகப் பணிகளில் மேலும் உயர்வும் ஊதியமும் பெற்றுச் சிறந்து விளங்கவும், அவரது குடும்பத்தினரும் நல்லனவெல்லாம் பெற்றுச் சிறக்கவும், அவரது குமாரத்தியின் திருமணம் விரைவில் நடைபெறவும், மகன்களும் ஊதியம் மிக்க உயர் பதவிகளேப் பெறவும் திருவருள் புரியுமாறு கண்ணில் நல்லஃதுறும் கழுமலவளநகர்ப் பெண்ணின் நலலாளொடும் இருந்த பெருந்தகையாம் அம்மையப்பரின் இணையடிகளே இறைஞ்சுதலேயாம். நமது வாசக அன்பர்களும் அங்ஙனமே இறைஞ்சுமாறு கோருகிறேம்.

சிவம்.

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

உரையாசிரியர் பணிவுரை

திருச்சிற்றம்பலம்

கவிக்குத் தகுவன கண்ணுக் கினியன கேட்கில் இன்பம்
செவிக்குத் தகுவன சிந்தைக் குரியன பைந்தரளம்
நவிக்கண் சிறுமியர் முற்றில் முகந்துதம் சிற்றில்தொறும்
குவிக்கத் திரைபரக் கும்கொச்சை நாதன் குரைகழலே.

—ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி—32
(நம்பியாண்டார் நம்பிகளருளியது—11-ம் திருமுறை)

மானின் கண் போன்ற கண்களையுடைய சிறுமியர்கள் சிறு முறங்களில் முகந்து தாமிழைக்கும் சிற்றில்கள்தொறும் குவிக்குமளவுக்கு பசிய முத்துக்களைக் கொண்டுவந்து தள்ளும் கடலலைகள் பரவுதலையுடைய திருக்கொச்சைவயம் என்னும் சீகாழியின் தலைவனாகிய திருஞானசம்பந்தப் பெருமானின் ஒலிக்குங்கழலணிந்த திருவடிகள் கவிகள் புகழ்ந்து பாடுதற்குத் தக்கனவாம், தரிசிப்பதற்கு இனியனவாம், புகழ்மாலைகளின் இன்பம் காதுகளுக்குத் தக்கனவாம், மேலும் சிந்தையுள்ளே தியானித்தற்குரியனவாம் என்பது மேற்கூறிய பாடலின் கருத்தாகும். இத்தகைய பெருமை படைத்த திருஞானசம்பந்தப் பெருமானிள் திருப்பாடல்களை உரையுடன் வெளியிடுதலாகிய சிவஞானபூசைப் பணியில் நமது 17-வது தமிழ் மாலை தற்பொழுது வெளிவருகிறது.

சென்ற மாலைகளைப் போல இம்மாலையிலும் சீகாழியில் பாடியருளிய வரலாறு மற்றும் காலந்தெரியாத திருப்பதிகங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. இப்பதிகங்கள்

முடிவுற்றதும் பெருமானின் அடுத்த தலயாத்திரைப் பதிகங்கள் வெளியிடப்படும்.

இந்தத் தமிழ் மாலைக்கும் வழக்கம் போலத் தம் அரிய கருத்துக்களை வழங்கியுதவிய இராணிப்பேட்டைப் பெரும் புலவர் நக்கீரன் வழியடிமை திரு. பி. மா. சோமசுந்தரனார் அவர்களுக்கும், சென்னைப் பைந்தமிழ்ப்பாவலவர், மகா வித்துவான், மணிதீபம். திரு நாகராசனார் (புலவர் தமிழ் நாகனார்) அவர்கட்கும் நமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த மலருக்கு ஆகும் முழுச்செலவான ரூபாய் 1500/- ஐயும் நன்கொடையாக வழங்கித் தம் சிறிய தந்தையார் காலஞ்சென்ற திரு T.R. சுந்தரம் B.A. B.Sc. (LEEDS) அவர்களின் நினைவாக இதனை வெளியிட முன்வந்த பழநி—கலயம்புத்தூர் விஜயகுமார் மில்ஸில் அலுவலராகப் பணி புரியும் நண்பர் திரு ரா. சி. கதிர்வேல் முதலியாரவர்கட்கும் நமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது நன்றியுணர்வையும், திருமுறைப் பற்றினையும், திருஞானசம்பந்தர் மீது கொண்டுள்ள பக்தியையும், உதாரகுணத்தையும், நம்மீது கொண்ட அன்பையும் பெரிதும் பாராட்டிப் போற்றுகிறோம். திரு. கதிர்வேல் அவர்கள் நீடுழி வாழ்க எனப் பிரார்த்திக்கிறோம். மேலும் சில மாலைகளை வேறு அன்பர்கள் தமது நன்கொடைப் பதிப்புகளாக வெளிவர உதவுவார்கள் என்று நம்புகிறோம்.

நேயர்கள், இந்த மாலையினையும் ஏற்றுப் பயின்று சிவானந்த வாரிதியில் திளைக்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்
சங்கரனடிமை
ஆங்கிரஸ சு. வேங்கடேச சர்மா
உரையாசிரியர்—பதிப்பாசிரியர்.

சென்னை-33
27-1-1985

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்



மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை —17

திருஞானசம்பந்தர் அருளியவை

(தொடர்ச்சி)

திருக்கழுமலம்—4

(சீகாழி)

பதிகவரலாறு — பன்னிரு திருப்பெயர்களால் இப்பார் மண்டலத்தே விளங்குகின்ற சீகாழியின் பன்னிரண்டாவது திருநாமமான திருக்கழுமலம் என்ற பெயரில் பாடியருளிய திருப்பதிகங்களில் நான்கினைப் பிரசுரிக்க எடுத்துக் கொண்டு சென்ற தமிழ்மாலையில் மூன்று திருப்பதிகங்களைப் பிரசுரித்தோம். நான்காவதான திருப்பதிகம் இந்த பதினேழாவது

தமிழ்மாலையில் பிரசுரிக்கப்படுகிறது. மழை வேட்டல் பதிகங்களுள் இதுவும் ஒன்ருகும். மேலும் விவரங்கள் தமிழ்மாலை 6, பக்கம் 64 ல் காண்க.

பண்: மேகராகக் திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை
குறிஞ்சி]

சேவுயருந் திண்கொடியான் திருவடியே
சரணென்று சிறந்தஅன்பால்
நாவியலும் மங்கையொடு நான்முகன்ருன்
வழிபட்ட நலங்கொள்கோயில்
வாவிதொறும் வண்கமலம் முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே. 1

பதிகப்பொழிப்புரை 1. இடபத்தினைத் தன்பால் கொண்டு உயரும் திண்ணிய கொடியையுடையவனுகிய சிவபிரானின் திருவடிகளே புகலிடம் என்று சிறந்த அன்பினேடு தனது நாவிலே பொருந்திய தன் தேவியாகிய நாமகளோடு கூடி நான்முகன் வழிபட்ட நன்மை பொருந்திய கோயில் (எது வெனில்) நீர்நிலைகள்தோறும் மலர்ந்துள்ளஅழகிய தாமரை மலர்கள் பெண்களின் முகங்களைக் காட்டவும், சிவந்த குமுத மலர்கள் வாய்களைக் காட்டவும், கள்ளால் (தேன்) பெருமை கொண்ட கருங்குவளையும் கருநெய்தலும் கண்களைக் காட்டு தலைச் செய்கின்ற திருக்கழுமலம் ஆகும்.

சே — இடபம் (எருது) இடபத்தின் திண்மையை (வலிமை) கொடிக்கு ஏற்றி திண்கொடியென்றும் அதனை யுடைய பெருமானைத் திண்கொடியான் என்றுங் கூறியருளினர். அல்லது திண்மையை எருதுக்கே சேர்த்து திண்ணிய எருது உயர்ந்து விளங்கும் கொடியுடையவன் எனக் கொள்ளலுமாம்.

அன்பால் — அன்போடு; அன்போடு வழிபடுவார்க்கே இறைவன் அருள் கிடைக்கும் என்பதை "என்பே விறகா இறைச்சியறுத்திட்டுப் பொன்போற் கனலிற்பொரிய வறுப்பினும் அன்போடுருகி அகங்குழைவார்க்கன்றி என்பொன் மணியினை எய்தவொண்ணாதே" என்ற திருமூலர் திருமந்திரப் பகுதியாலுமறிக.

காவி — செங்கழுநீர்ப்பூ என்றும் பொருள்படும். 'கள்' என்ற பொருளுமிருத்தலாலும் மலரிலுள்ள தேன் 'கள்' எனப் படுதலாலும், கள்ளால் பெருமையுடைய கருங்குவளை எனப் பொருளுரைத்தோம்.

திருக்கழுமலம் பிரமதேவன் தனது மனைவியோடு சிறந்த அன்போடு வழிபட்டுப் பெருமான் அருள்பெற்ற தலம் என்பது இப்பாடலிற் போந்த செய்தியாம்.

பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய
மலைச்செல்வி பிரியாமேனி
அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தான்
அமரர்தொழ அமருங்கோயில்
தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறும்
இறைவனது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்
பாட்டயரும் கழுமலமே. 2

2. பெருமையுடையவையும், அகன்றவையுமான திரு விழிகளையும், சிவந்த பவளம் போன்ற திருவாயினையுமுடைய பெருமையுடைய மலையரசன் மகளான உமாதேவியார் பிரியாத (என்றும் ஒரு பாகமாகப் பொருந்தியிருக்கும்) திரு மேனியை பொடியான திருவெண்ணீற்றினால் அழகு செய்த வனாகிய சிவபிரான் விரும்பி எழுந்தருளும் கோயில் (எது வெனில்), இரப்போர்க்கு வாரி வழங்குதலையுடைய விசால மான கரங்களையுடைய முத்தழலோம்பும் அந்தணர்களது வீடுகள் தோறும் கரிய அகன்ற கண்களையுடைய மகளிர்

சிவபிரானது பொருள் சேர் புகழ்களைப் பாடி அம்மானை, பந்து, கழங்கு முதலிய ஆடல்களைப் பாட்டுடன் ஆடுகின்ற திருக்கழுமலம் ஆகும்.

தருந்தடக்கை-வழங்குவதற்கு வழங்குவோனின் உள்ளம் விசாலமானதாதல் வேண்டும். அவனது உள்ளத்தின் விசாலம் கைகளின் மீது ஏற்றிச் சொல்லப்பட்டது. அகன்ற கைகள் என்றமையால் நிறைய வாரி வழங்குவார்கள் என்றும் கொள்க.

பெரியநாயகிப் பிராட்டியார் என்றும் பிரியாததும் திருவெண்ணீற்று அலங்காரம் உடையதுமான திருமேனியை உடையவன் சிவபெருமான். அவன் கோயில் கொண்ட திருக்கழுமலம் வள்ளற்றன்மையுடைய அந்தணர்கள் நிறைந்தது என்பதும், அவ்வந்தணர்களது இல்லங்களில் மாதர்கள் விளையாடும் போதும் கூட இறைவனது புகழ்களையே பாடியாடுவரேயன்றி வெற்றுரைகளில் ஈடுபடார் என்பதும் இப்பாடலிற் பிள்ளையார் கூறியருளிய செய்திகளாகும். அத்தலத்து அந்தணர்களே வாரி வழங்குவர் எனின் அறவாழியந்தணனாகிய சிவபெருமான் தன்னடியண்டினோர்க்கு வாரி வழங்குதலைச் சொல்லவும் வேண்டுமோ?

அலங்கல்மலி வானவருந் தானவரும்
அலைகடலைக் கடையப்பூதம்
கலங்கவெழு கடுவிடமுண் டிருண்டமணி
கண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர் புயல்மறந்து மீன்சனிபுக்(கு)
ஊன்சலிக்குங் காலந்தானும்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே. 3

3. பூமாலைகளை மிகுதியாக அணிந்த தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைய அதனின்றும் உயிர்க்கூட்டமனைத்தும் அச்சத்தால் கலங்கும்படி எழுந்த கொடிய

விஷத்தையுண்டருளி, அதனால் இருள் நிறமடைந்த மணி கண்டனாகிய சிவபிரான் (தனது உறைவிடமாகக்) கருதுங் கோயில் (எதுவெனில்) மலைகளில் அமரும் மேகம் மழை பொழிதலை ஒழிந்தும், ஒன்பது கோள்களில் ஒன்றான சனி மீன ராசியையடைந்தும் அதனால் ஏற்பட்ட பஞ்சத்தால் மக்கள் கூட்டம் உடல் வாடிவருந்துங்காலத்தும் சிறிதுங் கலக்கமில்லாது வழங்கும் பெரிய மனத்தையும் வள்ளன்மை பொருந்திய கைகளையுமுடைய உண்மையான வள்ளல்கள் வாழ்கின்ற திருக்கழுமலம் ஆகும்.

அலங்கல் — மாலை; விலங்கல் — மலை; புயல் — மேகம் கருதுதல் — எண்ணுதல், மதித்தல், விரும்புதல் முதலிய பொருள்கள். மழையின்மையால் நிலங்கள் விளையாவாக அதனால் உணவுப் பஞ்சம் ஏற்படுகிறது. கோள்நிலைகளில் ஏற்படும் திரிபும் மழையின்மைக்குக் காரணமாகும். ''கோள் நிலை திரியில் மாரிவறங்கூறும்'' என்றார் பிறரும். இத்தகைய கோள்நிலைதிரிவுகளில் சனியென்னுங் கோள் மீன் எனப்படும் மீனவிராசியில் புகுதலும் ஒன்றாகும். சனி மீனம் புகும்போது நாட்டில் மழையின்றி அதனால் துயர் ஏற்படும் என்பதைப் புறநானூறு-117-ம் பாடலின் முதலடி குறிப்பிடுவது காண்க. அதன் சிறு விளக்கமும் ஈண்டுக் கொடுத்துள்ளோம்.

''மைம்மீன் புகையினும்............பெயல் பிழைப்பறியாப் புன் புலத்ததுவே'' என்ற அப் புறப்பாட்டுப் பகுதியால் மைம் மீன் புகையின் பெயல் (மழை) பிழைக்கும் (தவறும்) என்பதை அறியலாயிற்று. இனி, மைம்மீன் புகைதல் என்பதற்குப் பொருள்கூறுமிடத்து, புறநானூறு பதிப்பாசிரியர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் எழுதியுள்ள உரைக்குறிப் பாவது:

''சனி கரிய நிறமுடையனாதலின் மைம்மீன் என்றார். சனி புகைதலாவது, இடபம் சிங்கம் மீனம் இவற்றோடு மாறு படுதல். இவற்றுள், சனி தனக்குப் பகை வீடாகிய சிங்க ராசியிற்புகின் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிப்பனென்பதை,

''மகத்திற்புக்க சனியெனக்காணுய்'' (தேவாரம்)............... என்பவற்ருலுணர்க.''

மேற்காட்டிய உரைக்குறிப்பினுல் மைம்மீனுகிய சனி புகைதல் என்பது இடபம், சிங்கம், மீனம் இவற்றில் புகுதல் என்பதைக் குறிப்பதாக அறிகிருேம். இத்திருப்பாடலில் பிள்ளையார் இம்மூன்றனுள் சனி மீனம் புகுதல் ஒன்றை மட்டுமே குறிப்பிட்டருளினர் எனக் கொள்க.

இவ்வாறின்றி, மீன் சனி புக்கு என்பதற்கு ''மகர ராசியில் சனி புகுந்து'' என்ற பிறரது உரைக் குறிப்பும் பொருந்துமோ? என்னை? மகரம் சனியின் சொந்த வீடாகலானும், கோள்கள் தமது சொந்த வீடுகளில் இருக்கும்போது அத்துணைத் தீங்குகளைச் செய்யார் என்பது சோதிடப் பொது விதியாகலானுமென்க.

வளமையான காலத்தில் வழங்குதலைவிடப் பஞ்ச காலத்து வழங்குதல் அருமையாகலின், அக்காலத்தும் மனங்கலங்காது வழங்கும் உண்மையான வள்ளல்கள் வாழுமூர் என்று குறிப்பிட்டருளியதாகக் கொள்க. அங்ஙனம் வழங்குவதற்கு அவர்களது மனமே காரணமாகலின், கலங்கலிலாப் பெருமனம் எனக் கூறினர். கலங்கலிலாப் பெருமனமும், வளமுடைய கைகளும் உடையவரே உண்மையான வள்ளல்கள் என்பதை மெய்யர் என்ற சொல்லால் புலப்படுத்தியருளினர் பிள்ளையார் எனக் கொள்க.

பாரிதனை நலிந்தமரர் பயமெய்தச்
சயமெய்தும் பரிசுவெம்மைப்
போரிசையும் புரமூன்றும் பொன்றவொரு
சிலைவளைத்தோன் பொருந்துங்கோயில்
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின்
சூளிகைமேல் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு
மகிழ்வெய்துங் கழுமலமே. 4

4. இந்தப் பூவுலகத்தினைத் துன்புறுத்தித் தேவர்களை யும் அச்சமடையும்படிச் செய்து எங்கும் வெற்றியையேயடை யும் தன்மையில் போர் செய்த முப்புரங்களும் அழியும்படி ஒரு வில்லை வளைத்தவனாகிய சிவபெருமான் பொருந்தியிருக்கும் கோயில் (எதுவெனில்) கச்சணிந்த மெல்லிய கொங்கைகளை யுடைய பெண்கள் தங்களது மாளிகைகளின் உச்சியில் தங் களது குழந்தைகளைப் பாராட்டித் தாலாட்ட, மேகங்கள் பொருந்திய ஆகாயத்திலே இயங்கும் தேவர்களின் கூட்டம் அதனைக் கேட்டு மகிழ்ச்சியடையும் திருக்கழுமலம் ஆகும்.

இத்திருப்பாடலின் முற்பகுதி புரம் எரிய மேருவை வில் லாகச் செய்த வீரத்தைக் கூறுகிறது.

"வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற"

என்ற திருவாசகம்-திருவுந்தியார் 1வது திருப்பாடல் காண்க.

பாடலின் பிற்பகுதியில் தேவர்களும் கேட்கும் அளவுக்கு உயர்ந்த மாளிகைகள் நிரம்பிய திருக்கழுமலம் என்று மாளிகைகளின் உயர்வால் நகரின் செல்வச் சிறப்புக் கூறி யருளியதாகக் கொள்க.

ஊர்கின்ற அரவமொளி விடுதிங்க
ளொடுவன்னி மத்தமன்னும்
நீர்நின்ற கங்கைநகு வெண்டலைசேர்
செஞ்சடையான் நிகழுங்கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி
மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின்பெருகு
சுதைமாடக் கழுமலமே. 5

5. மார்பினால் ஊர்ந்து செல்லுதலையுடைய பாம்பு, ஒளி விடும் சந்திரன் இவற்றோடு வன்னியிலை, ஊமத்தம்பூ,

நிலையாக நின்ற நீராகிய கங்கை, நகுவெண்டலை இவைகள் சேர்கின்ற செஞ்சடையானாகிய சிவபிரானின் கோயில் (எது வெனில்) அழகு நிலவிய மலர்களால் விளங்கிப் புகழுடைய திருக்கயிலாயமலையே என்று கூறும்படி விளங்கி, கார்வண்டு களின் கூட்டம் எப்போதும் சூழ்ந்திருத்தலால் அழகு பெருகும் சுதையின் வண்ணம் சேர்ந்த மாடங்கள் நிறைந்த திருக்கழு மலம் ஆகும்.

நகுவெண்டலை—தாருகாவனத்து இருடியர் தமது யாகாக் னியினின்றும் தோற்றுவித்து இறைவன் மீது ஏவியதாகும். இது உலகமெல்லாம் நடுங்கும்படி பெருத்தகுரலில் நகைத்துக் கொண்டே வந்தமையால் நகுவெண்டலை எனப் பெயர் பெற்றது. இறைவர் அதனைத் தமது திருக்கரத்திற் பற்றித் தம் சடையில் ஒரு புறத்தே வைத்து அதன் ஆற்றலைப் போக் கினார். விரிவு கந்தபுராணம், தக்ஷகாண்டம், ததீசி உத்தரப் படலத்தில் கண்டு கொள்க.

ஏர்—அழகு; கவின்—அழகு;

திருக்கயிலாயமே என்று சொல்லும்படி வெண்சுதையின் வண்ணம் சேர்ந்த மாடங்களையுடைய திருக்கழுமலம் என்று கொள்க.

தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து
தழலணைந்து தவங்கள்செய்த
பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோ
ழமையளித்த பெருமான்கோயில்
அரிந்தவயல் அரவிந்த மதுவுகுப்ப
அதுகுடித்துக் களித்துவாளை
கருஞ்சகடம் இளகவளர் கரும்பிரிய
அகம்பாயுங் கழுமலமே. 6

6. இத்திருப்பாடலுக்கு உரையெழுதும்முன் சில பாட மாறுபாடுகளையும் குறிப்பிட வேண்டியுளது. நாம் மேலே பதிப்பித்துள்ளது திருப்பனந்தாள் காசிமடம், தருமை ஆதீனம்

ஆகிய திருமடங்களின் தற்பொழுதைய பதிப்புகளில் உள்ள பாடமேயாகும். இப்பாடத்தின் படி உரைகாணும் போது பாடலின் முற்பகுதியில் உள்ளதில் ''பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார் தோழமையளித்த பெருமான் கோயில்'' என்பதில் உள்ள வரலாறு சரியாகப் புலப்படவில்லை. நாமறிந்தவரையில் இறைவனார் தோழமையளித்தது குபேரனுக்கும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குமேயாகும். சுந்தரமூர்த்திகள் திருஞானசம்பந்தருக்குக் காலத்தாற்பிற்பட்டவராகலின் அவரைப் பிள்ளையார் குறிப்பிட்டிருக்க இயலாது. எனவே குபேரனையே குறிப்பிட்டாராயிற்று. பூர்ணபத்திரன் என்ற யக்ஷனின் மகனான ஹரிகேசன் என்பவன் தந்தையோடு மாறுபட்ட கருத்துடையவனாகி, வீட்டினின்றும் துரத்தப்பட்டுப் பின் காசி மாநகரடைந்து, தன் மேல் புற்று மூடுமளவுக்கு உடலை மறந்து மகாதேவனையே நினைந்து கடுந்தவம் செய்தான். அவன் தவத்தை மெச்சிய ஈசன் உமையுடன் காட்சியளித்து அவனுக்கு குபேர பதவி, க்ஷேத்ரபாலத்துவம், மரணமின்மை முதலிய பல வரங்களையும் தந்தருளினார். தனதன் என்றொரு பெயரையும் பெற்றான். இவ்வரலாறு மச்சபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இது தோழமையளித்ததாகக் கூறவில்லை. தமிழில் உள்ள உபதேச காண்டப்படி குபேரன் சித்தவடம் என்னுமிடத்தில் சித்தேசுவரரைப் பக்தியுடன் பூசித்துத் தோழமை பெற்றான் எனக் கூறப்பட்டுள்ளது.

''சித்த வடச்சித் தேசுரர் பொற்சே வடியெண்ணிப்
பத்தி பயக்கச் சென்றுகு பேரன் பணிதந்தான்
அத்தனை ஒக்குந் தோழமை கொண்டா னருள்பெற்றான்
நத்த முதற்கோ மாநிதி யெல்லாம் நனிபெற்றான்.

(நத்த முதற்கோ மாநிதி—சங்கநிதி முதலிய பெருநிதிகள்)

நாரத புராணம், கூர்ம புராணம் ஆகியவற்றிலும் குபேரனைப் பற்றிய வரலாறுகள் உள. ஆயினும் தழல் அணைந்து (தீ நடுவில் நின்று) தவஞ் செய்ததாகக் கூறவில்லை. மேலும் பெருஞ் சதுரர் பெயலர்க்கும் என்பதில் உள்ள பெயலர்

என்ற சொல்லின் விளக்கமும் கிடைக்கவில்லை. பெயலர்க்கும் என்பதில் உள்ள 'உம்'மையால் மற்றுமொருவர்க்கும் தோழமையளித்ததாக உணர்த்தப்படுவதால் அந்த மற்றொருவர் யார் என்பதற்கும் விடை கிடைக்கவில்லை. இந்த 'உம்' மையை இழிவும்மையாகக் கொண்டு, சதுரராகிய பெயலர்க்கும் எனக் கொள்ளுமிடத்து பெயலர் என்பதை குபேரனுக்கு எப்படிப் பொருத்துவது என்ற சிக்கலும் எழுந்தது. நமது அரிய நண்பர், சென்னைப் புலவர், திரு கே. ஆர். நாகராஜன் அவர்கள் தம் சிந்தனையில் விளைந்த ஒரு கருத்தினைக் கூறி இச் சிக்கலைத் தீர்க்க ஒருவாறு உதவினர். அஃதாவது, 'பெயலர்' என்பதை 'பெய்+அலர்' எனப் பிரித்துப் பெய்—தருதல் அலர்—அது அல்லாதவர் அதாவது தருதலில்லார், கருமி, உலோபி என்பன போன்ற பொருள்களைத் தருஞ் சொல்லாகக் கொள்ளலாம் என்பதேயாம். இது அவரது ஆராய்ச்சியேயன்றி நூல்களில் கண்டதன்று என்றும் கூறுகிறார். பெருஞ்செல்வம் படைத்தவன் கருமியாக, ஈயாதவனாக இருத்தலும் கண்கூடேயன்றோ? எனவே இக்கருத்துப்படி பெயலர்க்கும் என்பது குபேரனையும், அதில் உள்ள இழிவும்மை அவன் கருமியாயிருந்தும் இறைவர் தம் தோழமையையளித்தார் என்பதையும் குறிப்பிடுகிறது என ஒருவாறு அமைதி காணலாம். அவனைப் பெருஞ்சதுரன் என்றது என்னையோவெனின் கருமியாயிருந்தும் கழலணைந்து தவஞ் செய்து பெருமை பொருந்திய இறைவரது தோழமையைப் பெற்றனாகலின் என்க. இறைவனார் குபேரனைத் தோழமை கொண்டதை "பனிவளர் மாமலைக்கு மருகன் குபேரனொடு தோழமை கொள் பகவன்..." எனத் திருக்கோச்சைவயம், நீலநன்மாமிடற்றன் எனத் தொடங்கும் பதிகத்தில் 5-வது திருப்பாடலிலும் குறிப்பிட்டுள்ளார் (தமிழ் மாலை — 13, பக்கம் 34 காண்க).

இத்துணை இடர்ப்பட்டுப் பொருள் காணாது பழைய பதிப்புகளில் உள்ள பாடங்களின் படி பொருள் கொண்டால் பாடலின் இப்பகுதி உபமன்னியு முனிவர் பாற்கடலை இறைவனாரால் அருளப் பெற்றதைக் குறிக்கும் என நமது மற்றொரு

அரிய நண்பர் இராணிப்பேட்டைப் புலவர் திரு பி. மா. சோம சுந்தரனார் அவர்கள் கருதுகிறார். அவர் காட்டியுள்ள பாட வேறுபாடுகளாவன :—

1. தேவாரம், பண்முறைப் பதிப்பு, 1907 ம் ஆண்டு நவம்பர் முதல் நாள், பங்காளம் அப்புப் பிள்ளை என்பவரால் பதிப்பிக்கப் பட்டது, பக்கம் 171.

''தருஞ்சாதம் தந்தருளென் றடிநினைந்து
கழலணைந்து தவங்கள் செய்த
பெருஞ்சதுரர் பெயலாக்கும் பீடார்தோ
ழமையளித்த பெருமான் கோயில்''

2. காஞ்சி சபாபதி முதலியார் பதிப்பு, பண் முறை, பக்கம் 200.

இதில் மேற்காட்டிய பாடமே உள்ளது.

3. திருப்பனந்தாள் அப்போதைய காசிமடாதி பதி அவர்களுடைய விருப்பப்படி திருமயிலை செந்தில் வேலு முதலியார் பதிப்பித்த தேவாரப் பதிப்பு குரோதி (1905) ஆண்டு தை மாதம். தலமுறைப் பதிப்பு, பக்கம் 127.

''தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து
தழலணைந்து தவங்கள் செய்த
பெருஞ்சதுரர் பெயலாக்கும் பீடார்தோ
ழமையளித்த பெருமான் கோயில்''

இதில் சாதம் என்பது சரதம் எனவும், கழலணைந்து என்பது தழலணைந்து எனவும் மாற்றப்பட்டிருப்பினும், பெயலாக்கும் என்பது மாற்றமுறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. எனவே பெரும்பான்மையான பழைய பாடங்களின்

படி கழலணைந்து என்பதும் பெயலாக்கும் என்பதுமே சரியான பாடமாயிருத்தல் கூடும் என்பது தெளிவாகிறது. சாதம் என்பது சரதம் என்று மாறினும் பொருளில் பெரிய மாற்ற மில்லை. (சாதம்-மேன்மை, உண்மை). ஆயினும் பெயலாக்கும் என்ற சொல்லோடு தோழமையளித்த என்ற சொல் இங்குப் பொருள் பயக்கவில்லையே! என் செய்வது? இச்சிக்கலைத் தீர்க்க, தோழமதளித்த என்பது ஏடெழுதுவோரால், தோழம் என்ற சொல் கடல் என்ற பொருளைத் தருவது மிக அருமை யாக வழங்குவதால், தோழமையளித்த என்று மாற்றப் பட்டிருக்கக் கூடும் என்று புலவர் திரு. பி. மா. சோ. கருது கிறார். தோழமதளித்த என்ற பாடங் கொண்டால் பொருள் மிகப் பொருத்தமாகிறது. இப்பாடப்படி தவங்கள் செய்த பெருஞ்சதுரர் உபமன்னியு முனிவர் ஆவர். அவருக்கு இறைவனார் அளித்தது பீடார்தோழம் (பெருமையுடைய பாற் கடல்) ஆகும். இங்குப் பெயலாக்கும் என்பது மழையால் வளம் பலவும் ஆக்கப்படும் என்ற பொருளைத் தரும். (பெயல்-மழை) பெயலாக்குங் கடல் என்பதன் கருத்து,

> ''நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
> தானல்கா தாகி விடின்'' (திருக்குறள்—17)

என்ற திருக்குறட்கண் கூறப்பட்டிருத்தல் காண்க. அல்லது மேகங்களுக்கு நீரையளித்து மழையை உண்டாக்கும் பீடார் தோழம் என்று பொருள் கொள்ளினும் அமையும். ஆயின் பாற்கடலுக்குப் பெயலாக்கும் தன்மை பொருந்துமோவெனின் கடல் என்ற பொதுமை பற்றி இங்ஙனம் உரைத்தருளியது பொருந்துமென்க. பெருஞ்சதுரர் என்றவிடத்து பெருஞ் சதுரர்க்கு என வேற்றுமையுருபு இல்லையே என்னும் ஐயம் எழலாம். பெருஞ்சதுரராகிய உபமன்னியு முனிவர் கொள்ளு மாறு எனச் சொற்களை வருவித்துப் பொருள் கொண்டால் இத் தடையும் நீங்குதல் காண்க. எனவே, பாட மாறுபாடுகளின் படி, இப்பாடலுக்குப் பொழிப்புரை பின்வருமாறு கொள்ளல் அமையும். ஆயினும் பிள்ளையார் திருவுள்ளம் யாதோ அறி கிலோம்.

(பொழிப்புரை) உறுதியாகத் தரும் (என்ற எண்ணத்துடன்) அருள் தருவாய் என்று இறைவரது திருவடிகளைச் சிந்தித்து, அவரது திருவடிகளை அணைந்து தவங்கள் செய்த பெரிய திறமுடைய (கருமியாகிய) குபேரனுக்கும் தமது பெருமை பொருந்திய தோழமையை அளித்தருளிய சிவபெருமானது கோயில் (அல்லது வேறு பாடப்படி) பெரிய சதுரராகிய உபமன்னியு முனிவர் கொள்ளுமாறு மழையால் வளம் பலவும் ஆக்கப்படும் பெருமை பொருந்திய பாற்கடலையளித்த பெருமானது கோயில் (எதுவெனில்), நெற்பயிர்கள் அறுக்கப்பட்ட வயல்களிலே மலர்ந்த தாமரை மலர்கள் தேனைச்சொரிய அந்தத் தேனைக் குடித்துக்களித்து வாளை மீன்கள், பெரிய வண்டி பாரம் தாங்க முடியாத அளவுக்கு வளருகின்ற கரும்புகள் சாயுமாறு அவற்றினூடே, பாய்கின்ற திருக்கழுமலம் ஆகும்.

சரதம் — துணிவு, உறுதி, உண்மை; சதுரர்—திறமுடையவர், அறிஞர், பீடு — பெருமை; தோழம் — கடல் (இப்பொருள் சில அகராதிகளில் உள்ளது. மிக அருமையாக உபயோகிக்கப்படுவது)

அரவிந்தம் — தாமரை; வாளை — மீன்களில் ஓர் வகை; சகடம் — வண்டி; இளகுதல் — கரைதல், குழைதல், தளர்தல் நெகிழ்தல், மிருதுவாதல் முதலிய பொருள்களைத் தரும் இச்சொல் இங்கு வண்டிகள் பாரம் தாங்காது முறிதலைக் குறித்ததாகக் கொள்க; அகம்பாய்தல் — ஊடே பாய்தல்.

புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
நிலனைந்தாய்க் கரணநான்காய்
அவையவைசேர் பயனுருவா யல்லவுரு
வாய்நின்றான் அமருங்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவணெறிகற் போற்சுனையிற் கரைசேரப்
புள்ளிரியுங் கழுமலமே. 7

7. நிலம் முதல் ஆகாயமீருகிய ஐந்து பூதங்களாய், ஐந்து புலன்களாய், ஐந்து நிலங்களாய், நான்கு அந்தக் கரணங்களாய், அவை அவைகளைச் சேர்ந்த பயன்களை அளிக்கும் பொருளாய், அவையல்லாத உருவமாய் (இங்ஙனம் பல திறமாய்) நின்றவனுகிய சிவபெருமானது கோயில் (எதுவெனில்) தவஞ்செய்தலில் முயற்சியுடையோர் மரங்களினின்றும் மலர்களைப் பறிப்பதற்காக மரங்களின் கிளைகளைத் தாழச்செய்து, (மலர்களைப் பறித்தபின் அக்கிளைகளை மீண்டும்) விட, அக்கிளைகள் (விசையுடன் சென்று) தாக்குதலால் (அருகிலுள்ள) மாமரங்களின் காய்கள் கவண்களினின்றும் எறியப்பட்ட கற்களைப் போலச் சுனைகளின் கரைகளில் விழ, அதனுல் பறவைகள் அஞ்சி விரைந்து அங்கு நின்றும் அகலும் திருக்கழுமலம் ஆகும்.

புவி முதல் ஐம்பூதம் — நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்

ஐம்புலன் — நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஒலி.

ஐந்நிலம் — குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

நாற்கரணம் — மனது, புத்தி, சித்தம், அகங்காரம்.

அவையவைசேர் பயன் உருவாய் என்றது ஐம்பூதங்களின் பயனுகிய நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஒலி ஆகிய ஐந்து தன்மாத்திரைகளும், புலனைந்தின் பயனுகிய பொறியின்பம் ஐந்தும் (மெய். வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளால் நுகரப்படும் இன்பம்), நிலனைந்தின் பயனுகிய, புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்ற ஒழுக்கம் ஐந்தும், கரணங்கள் நான்கின் பயனுகிய நினைத்தல், புத்தியால் நிச்சயித்தல், சிந்தித்தல், இது செய்வேன் என அகங்கரித்து எழுதல் ஆகிய நான்கும் கொள்ளப்பெறும்.

அல்லவுருவாய் என்றது மேற்கூறிய இவையனைத்தும் இல்லாத பொருளாகி என்பதைக் குறிக்கும். இதனை அருவாகிய ஞானம் எனக் கொள்க.

பூப்பறிப்போர் மரங்களின் கொம்புகளைக் கீழேதாழ்த்திப் பூக்களைப் பறித்துக் கொண்டு விட்டு விடுதலும், அவை விசையுடன் சென்று அயலிலுள்ள மாங்காய்கள் நிறைந்த மாமரக் கிளைகளைத் தாக்குதலும், அங்ஙனம் தாக்கப்பட்ட மாங்கிளைகளில் உள்ள மாங்காய்கள் நீர்நிலைகளின் கரையோரங்களில் விழுதலும், அக்காய்களைக் கவண்களினின்றும் எறியப்பட்ட கற்களாகக் கருதி பறவைக் கூட்டம் அஞ்சி அங்கிருந்து விரைவாகப் பறந்து வேறிடம் செல்லுதலும் இப்பாடற் பிற்பகுதியிற் காணும் அழகிய கற்பனைக் காட்சியாகும். இதனால் மரங்களின் செழுமை, நீர் நிலைகளின் நிரம்பிய நீர்வளம், கரையோரங்களில் வசிக்கும் பறவைக் கூட்ட மிகுதி ஆகிய அனைத்தையும் ஒருங்கே குறிப்பாலுணர்த்தியருளிய நயங் கண்டு இன்புறுக.

அடல்வந்த வானவரை யழித்துலகு
தெழித்துழலு மரக்கர்கோமான்
மிடல்வந்த இருபதுதோள் நெரியவிரற்
பணிகொண்டோன் மேவுங்கோயில்
நடவந்த வுழவரிது நடவொணா
வகைபரலாய்த் தென்றுதுன்று
கடல்வந்த சங்கீன்ற முத்துவயற்
கரைகுவிக்குங் கழுமலமே. 8

8. வலிமை பொருந்திய தேவர்களை அழித்தும், உலகத்து மக்களை வருத்தியும் திரிபவனாகிய இராவணனது வலிமை மிகுந்த இருபது தோள்களும் நெரியும்படி கால்விரலினால் ஊன்றி அக்காரியத்தைச் செய்து முடித்த சிவபிரான் விரும்பி உறையுங் கோயில் (எதுவெனில்), வயல்களில் நாற்றுக்களை நட வந்த உழவர்கள் நடுதலைச் செய்ய இயலாதபடி இவ்வயல் பருக்கைக் கற்கள் நிரம்பியதாகி விட்டதென்று எண்ணிக் கடலினின்றும் வந்த சங்குகள் ஈன்ற நெருங்கிய முத்துக்களை வயற்கரையில் குவிக்கின்ற திருக்கழுமலம் ஆகும்.

அடல் — வலிமை; தெழித்தல்—அதட்டுதல், துவைத்தல் முதலிய பொருள்கள். வருத்துதல் எனப் பொருள் கொண் டோம். உழலல் — திரிதல்; மிடல் — வலிமை.

விரல் பணி கொண்டோன் — விரலை யூன்றி அரக்கன் ஆற்றலையழித்ததைக் குறித்தது. பரல் — பருக்கைக் கற்கள்.

கடலின்றும் வயல்களுள் சேர்ந்த சங்குகள் ஈன்ற முத்துக் கள் பருக்கைக் கற்கள் போல வயல்களில் நிறைந்தமையால், அவைகளைக் கரைகளில் குவித்தனர் எனக் கொள்க.

பூமகள்தன் கோனயனும் புள்ளினொடு
கேழலுரு வாகிப்புக்கிட்(டு)
ஆமளவுஞ் சென்றுமுடி யடிகாணு
வகைநின்ருன் அமருங்கோயில்
பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள்
கொண்டணிந்து பரிசினலே
காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து
நின்றேத்துங் கழுமலமே. 9

9. திருமாலும் பிரமதேவனும் பன்றியாயும் அன்னமா யும் உருவெடுத்துப் போய் தங்களால் இயன்றவரையும் (தங்கள் ஆற்றல் இடங் கொடுத்த அளவும்) சென்றும் முறையே திருவடியையும் திருமுடியையும் அவர்கள் காணுத வண்ணம் தழலுருவாய் நின்றவனுகிய சிவபிரான் விரும்பி யெழுந்தருளும் கோயில் (எதுவெனில்), பாக்களைப் பொருந்து கின்ற கலைப்புலவர்கள் பலவகையான மலர்களைக் கொண்டு அருச்சித்து அத்தன்மையாலே தங்களது விருப்பங்கள் யாவும் நிறைவேறி அதனுல் மகிழ்ச்சியுற்று (மீண்டும்) இறைவன் திருமுன்பு நின்று துதித்து வணங்கும் திருக்கழுமலம் ஆகும்.

புள் — அன்னம்; கேழல் — பன்றி. இறைவனை வழி பட்டுத் தங்கள் விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொண்ட புலவர்கள், மீண்டும் இறைவனைத் துதித்தது அவர்களது

நன்றி மறவா இயல்பினைக் காட்டுகிறது. அத்தகைய நல்லோர்கள் வாழுங் கழுமலமே நமது இறைவனது ஊர் எனக் குறிப்பிட்டருளினர் எனக் கொள்க.

குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை
மெய்த்தவமாய் நின்றுகையில்
உணல்மருவுஞ் சமணர்களும் உணராத
வகைநின்றான் உறையுங்கோயில்
மணமருவும் வதுவையொலி விழவினொலி
இவையிசைய மண்மேல்தேவர்
கணமருவு மறையினொலி கீழ்ப்படுக்க
மேற்படுக்குங் கழுமலமே. 10

10. குணமொன்றில்லாத புத்தர்களும், பொய்த் தவத்தை மெய்த்தவமாக்கிக் காட்டி நின்றுகொண்டே கையினில் உணவையேற்று உண்ணுதலையுடைய சமணர்களுமாகிய புறப்புறச் சமயிகள் தனது உண்மைத் தன்மையை உணராத வண்ணம் நின்றவனாகிய சிவபெருமான் உறைகின்ற கோயில் (எதுவெனில்), திருமணங்களின் ஒலியும், திருவிழாக்களின் ஒலியும் தம்முள் கலந்து பேரொலியாக, பூமியில் தேவர்கள் என்று சொல்லப் படுகின்ற அந்தணர் கூட்டத்தைப் பொருந்திய வேதங்களின் ஒலி, முன் கூறிய ஒலியை கீழ்ப்படுத்தி மேற்பட்ட ஒலியாக ஒலிக்கும் திருக் கழுமலம் ஆகும்.

குணம் — பண்பு, மேன்மை; வதுவை — திருமணம். மண்மேல்தேவர் — பூசுரர் அதாவது அந்தணர்கள். தரைத் தேவர், நிலத்தேவர் என்பதும் இப்பொருளையே குறிக்கும். நிலவுலகில் தேவர்கள் போன்றவர்கள் என்று கூறியதாம். இவர்களைப் பொருந்திய வேதவொலியானது திருமணஒலி, விழாக்களின் ஒலி இவற்றின் சேர்க்கையாய பேரொலியையும் அடக்கித் தான் மேம்பட்டு நின்றது எனக் கூறியருளியதாகக் கொள்க. மறையொலி மிக்கு விளங்கிய திருக்கழுமலமே இறைவனது ஊர் என்று கொள்க.

கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்துள்
ஈசன்தன் கழல்மேனல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்றான் நயந்துசொன்ன
சொற்றுணையோ ரைந்தினொடைந் திவைவல்லார்
தூமலராள் துணைவராகி
முற்றுலகம் அதுவாண்டு முக்கணான்
அடிசேர முயல்கின்றாரே. 11

திருச்சிற்றம்பலம்.

11. கற்றவர்களாகிய பெரியோர்கள் பணிந்து துதிக்கும் திருக்கழுமலத்து ஈசனது திருவடிகளின் மீது நல்லவர்களது நல்லதுணையாகிய பெருந்தன்மையுடைய திருஞானசம்பந்தன் பாராட்டிச் சொன்ன சொற்றுணையாகிய இப்பத்துப் பாடல்களும் வல்லவர் திருமகள் கணவராகி இவ்வுலகமுழுமையையும் அரசாண்டுப் பின்னர் முக்கண்ணனாகிய சிவபிரானது திருவடிகளையடைய தவஞ் செய்தலையுடையவர்களாவார்கள்.

கற்றவர்கள் — பெரியோர்கள்; "கற்றல் கேட்டல் உடையோர் பெரியோர்" என முன்னரும் அருளிச்செய்தது காண்க. (த. மாலை. 1, பக்கம் 2 காண்க)

நல்லோர் — இதுவும் மேற்கூறிய பெரியோர்களையே குறிக்குமெனக் கொள்க.

நற்றுணை — நல்லதுணை, நன்மையைத் தரவல்ல துணை. சொற்றுணை என்பதற்கு ஓதுவார்க்குத் துணையான சொல் எனப் பொருள் கொள்க. இப்பதிகத்தை ஓதுபவர்கள் இம்மை மறுமை ஆகிய இரு பயன்களையுமடைவர் என்று கூறியதாகக் கொள்க.

சிவமும்

உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவஜயம்

சீகாழியில் பாடியருளிய

மிறைக்கவிகள் என்னும் சித்திரக் கவிகள்

இதுவரையில் சீகாழியின் பன்னிரு திருநாமங்களில் திருஞானசம்பந்தர் அருளிய வரலாறும் காலமும் தெரியாத பதிகங்களைப் பிரசுரித்தோம். இனி "மூல இலக்கியமாக எல்லாப் பொருள்கோளுமுற்ற ஞாலத்துயர் காழியாரைப் பாடினார் ஞான சம்பந்தர்" என்ற பெரியபுராண வாக்குப்படி மூல இலக்கியமாகப் பாடியவைகளைப் பிரசுரிக்க முற்படுகிறோம். இவை மொழிமாற்று, மாலைமாற்று, வழிமொழித் திருவிராகம், திருஏகபாதம், திருவிருக்குக்குறள், திருவெழுகூற்றிருக்கை, ஈரடி, ஈரடிமேல்வைப்பு, நாலடிமேல்வைப்பு, திருவிராகம், திருச்சக்கரமாற்று, பல்பெயர்ப்பத்து, கோமூத்திரி இவை முதலாயின பதிகங்களாம். முதலாயின என்றதால் மூவடிமுக்கால், திருத்தாளச்சதி ஆகியவும் கொள்ளப்படும். இவைகளில் நாலடிமேல்வைப்பு, ஈரடிமேல்வைப்பு, திருவிருக்குக்குறள், திருவிராகம், மூவடிமுக்கால் முதலியவற்றில் சில பதிகங்கள் வரலாறும் காலமுந்தெரிந்தவை, அம்முறையிலேயே முன்னும் பிரசுரிக்கப்பட்டன. இனியும் பிரசுரிக்கப்படும். காலமும் வரலாறும் தெரியாத பதிகங்கள் மட்டுமே இந்தத் தமிழ்மாலையிலும் தொடர்ந்து இரண்டொரு தமிழ்மாலைகளிலும் பிரசுரிக்கப்படும். சிவநேயர்கள் தொடர்ந்து படித்துப் பயன் பெறுவார்களாக.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

திருத்தாளச்சதி

பதிக வரலாறு: சீகாழியில் திருக்கழுமலம் என்ற பெயரில் பாடியருளியவற்றுள் ஒரு பதிகமாயினும், திருத்தாளச்சதி என்ற தனித்தலைப்பு என்பது பற்றி மிறைக்கவிகளுள் ஒன்ருக வைத்துப் பிரசுரிக்கப்படுகிறது. ஆடரங்குகளில் மகளிர் பாடிக்கொண்டு நடிப்பதற்குப் பொருந்திய தாளச்சொற் கட்டுகளாக இப்பதிகம் அமைந்தமையால் இது திருத்தாளச்சதி என்னும் பெயர்த்தாயிற்று. தாளச்சதி எனினும் தாளவொத்து எனினும் ஒன்றே.

தந்தத்தா தந்தத்தா தனந்தனந்த தந்தனத்
தானதான தானன தனதன தனன தன,

என்பது இதற்குரிய கட்டளை ஓசையாகும். 'செற்றிட்டே வெற்றிச் சேர்' (6ம்பாடல்) என்பது போன்று வல்லொற்றுப் பயின்று வருவதில் ''தந்தத்தா'' என்பது ''தத்தத்தா'' என அமையும்.

பண்—வியாழக்குறிஞ்சி] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாள்நாள் நீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கள்நின்று தங்கணால்
தாமேகாண வாழ்வாரத் தகவுசெய் தவனதிடங்
கந்தத்தால் எண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே. 1

பதிகப்பொழிப்புரை: 1. பந்தத்தோடு வந்து எல்லாப் பக்கங்களிலும் பயின்று வணங்கி நிற்கும் தேவர்கள் அப்பாலே ஒரு புறம் சேர்ந்து இருக்கவும், மற்றவர்களும் கானகத்தில் தவஞ்செய்யும் முனிவர்களும் தியானித்து வணங்கவும், மலையரசன் மகளான உமாதேவியாரொடுஞ் சேர்ந்து இருப்பவராகிய சிவபெருமான் நாளுக்கு நாள் நீளுதலையுடைய திருக்கயிலையில் விளக்கமாக எழுந்தருளியிருக்கும் திருக்காட்சிச் சிறப்பையெல்லாம் இந்த நிலவுலகத்து மக்களும் தங்களது கண்களால் தாமே கண்டு தரிசித்து நல்வாழ்வு பெற அருள் செய்தவனது (சிவபிரானது) இடம், நறிய மணத்தினால் எட்டுத்திக்குகளிலும் பரந்து விளங்கும் சந்தனக் காடுகளும் பூம்பொழில்களும் பெருமையுடன் பொருந்துதலையுடைய திருக்கழுமலம் என்னும் வளநகராகும்.

பந்தம்—உறவு, அதாவது இறைவன் பதி, நாம் பசுக்கள் என்ற உறவு. பந்தம் என்பதற்குப் பாசம் எனப் பொருள் கொண்டால் பாசத்தோடு அதாவது அன்போடு என்பதும் பொருந்தும். பந்தத்தால் என்பதில் உள்ள ஆல் உருபு ஒடு என்ற உடநிகழ்வுப் பொருளில் கொள்ளப்பட்டது.

ஏனோர் — வானவரையும் கான்பயில் முனிவர் கணத்தையும் தவிர மற்றவர்.

நாள் நாள் நீள் கயிலை — "ஊழிதோறூழி முற்றும் உயர் பொடித்தான் மலை" (சுந்தரர் தேவாரம், 7ம் திருமுறை 100ம் பதிகம்) என்பது போலக் கொள்க.

பூ ஆகு பெயராய்ப் பூம்பொழில்களைக் குறித்ததாம். பூ என்பதற்குப் பூவுலகு எனக் கொண்டு பூவார்சீர் என்பதற்கு "பூவுலகில் நிறைந்த சிறப்புப் பொருந்திய" எனினுமாம்.

சந்தித்தல் - தரிசித்தல்; வாழ்வார - நல்வாழ்வு பெற.

திருக்கயிலையில் அம்மையுடன் எழுந்தருளியிருப்பது போலத் திருத்தோணியில் தோணிபுரேசர் பெரியநாயகிப் பிராட்டியாராகக் காட்சியளிக்கும் அருமைத் திருக்கோலத்தைப் போற்றிப் பாடியருளியதாகக் கொள்க.

பிச்சைக்கே யிச்சித்துப் பிசைந்தணிந்த வெண்பொடிப்
பீடார்நீடார் மாடாரும் பிறைநுத லரிவையொடும்
உச்சத்தா னச்சிப்போல் தொடர்ந்தடர்ந்த வெங்கணே(று)
ஊராவூரா நீள்வீதிப் பயில்வொடு மொலிசெயிசை
வச்சத்தா னச்சுச்சேர் வடங்கொள்கொங்கை மங்கைமார்
வாராநேரே மாலாகும்வசிவல வவனதிடங்
கச்சத்தான் மெச்சிப்பூக் கலந்திலங்கு வண்டினங்
காரார்காரார் நீள்சோலைக் கழுமல வளநகரே. 2

2. பிச்சையெடுத்தலை விரும்பி, நீரிற் குழைத்த திருநீற்றினையணிந்த தமது பெருமை பொருந்தியதும் நீடிய புகழுடையதுமான (திருமேனியில்) ஒரு பக்கத்தேயமைத்த பிறை போன்ற நெற்றியையுடைய உமாதேவியாரோடும் உச்சி வேளையை பிச்சைக்கு ஏற்ற காலமாக விரும்பி, தொடர்ந்து வரும் வெங்கண் ஏற்றினை ஊர்ந்து ஊர்கள்தோறும் நீண்ட வீதிகளில் பயிலுதலோடு ஒலியுடைய இசையினையும் வைத்தமையால் (இசை பாடிக் கொண்டே சென்றதால்), விடத்தின் தன்மை கொண்ட, வடங்கொண்ட கொங்கைகளையுடைய மங்கையர்கள் வீதியில் வந்து தன்னிடம் மயக்கம் அடையச் செய்யும் வசியத்தில் வல்லவனாகிய சிவபெருமானது இடம், தாமரை மலர்களை விரும்பி அவற்றைக் கலந்து விளங்கும் வண்டினங்கள் நிறைந்த, கருமை நிறம் பொருந்திய மேகங்கள் படிந்த சோலைகளையுடைய திருக்கழுமலம் என்னும் வள நகராகும்.

மாடாரும் - பக்கத்தில் பொருந்திய (மாடு - பக்கம்); நுதல் - நெற்றி; உச்சத்தான்நச்சி - உச்சப் போதினை (நண்பகலை) விரும்பி; போல் - அசைச் சொல்.

ஊரா ஊரா — முதலில் உள்ளது ஊர்ந்து என்ற பொருளையும், அடுத்துள்ளது ஊர்கள்தோறும் என்ற பொருளையும் தரும்.

வீதிப் பயிலுதல் - வீதிகளிலே நடந்து செல்லுதல். இசை வைத்தல் - இசையைப் பாடுதல்.

வச்சத்தான் - இது 'வைத்ததால்' என்பதன் திரிபாகக் கொள்க.

நச்சுச்சேர் கொங்கை, வடங்கொள் கொங்கை என இரு வழியும் கூட்டி மங்கையர்க்கு அடை மொழிகளாகக் கொள்க. மங்கையர் என்பது இங்கு தாருகவனத்து முனிவர்களின் பத்தினிமார்களைக் குறித்தது.

வாரா - வந்து; மால் - மயக்கம், மோகம். வசிவலன் - வசித்துவம் என்னும் சித்தி வல்லவன் எனலுமாம்.

கச்சத்தான் மெச்சிப்பூ - கச்சப்பூத்தான் மெச்சி என மாற்றிப்பொருள் கொள்ளப்பட்டது. தாமரை என்று பொருளுடைய கஞ்சம் என்ற சொல் எதுகை நோக்கி கச்சம் என விகாரப்பட்டது.

காரார் காரார் - முதலில் உள்ள 'கார்' கருமை நிறத்தையும், இரண்டாவது மேகத்தையும் குறிக்கும்.

இரவலனாக இசைபாடிப் பிச்சைக்குச் சென்று முனிவர்களது மனைவியர்களை மால் கொள்ளச் செய்தவனிடம் திருக்கழுமலம் என்பது இப்பாடல் கூறும் செய்தியாம்.

திங்கட்கே தும்பைக்கே திகழ்ந்திலங்கு மத்தையின்
 சேரேசேரே நீராகச் செறிதரு சுரநதியோ(டு)
அங்கைச்சேர் வின்றிக்கே யடைந்துடைந்த வெண்டலைப்
 பாலேமேலே மாலேயப் படர்வுறு மவனிறகும்
பொங்கப்பேர் நஞ்சைச்சேர் புயங்கமங்கள் கொன்றையின்
 போதார்தாரே தாமேவிப் புரிதரு சடையனிடங்
கங்கைக்கே யும்பொற்பார் கலந்துவந்த பொன்னியின்
 காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. 3

3\. திருமுடிக்கண் திகழ்ந்து விளங்கும் பிறைச்சந்திரன், தும்பைப்பூ, ஊமத்தை இவற்றுடன் சேர்ந்து புனலாகப் பெருகிய தேவநதியான கங்கையோடு, அழகிய திருக்கரத்தில் சேர்ந்தது மட்டுமன்றி வலிகெட்டு (தலையில் சூட்டிக்கொள்

ளப்பட்ட) வெண்தலையின் பக்கத்தில் மயங்கிய அறிவால் தன் மீது பொருதற்குப் படர்ந்த குரண்டாசுரன் கொண்ட கொக்கின் உருவத்தையழித்து அதன் இறகையணிந்தும், பொங்கியெழுகின்ற பெருநஞ்சினையுடைய பாம்புகள், கொன்றைப்பூ மாலைகள் இவற்றை மாலைகளாகத் தாம் விரும்பி அணிந்து கொண்ட புரிசடையோனாகிய சிவபிரானது இடம், கங்கையாற்றுக்குப் பொருந்தும் பெருமையெல்லாம் பொருந்திக் கலந்து வந்த காவிரி நதியின் வாய்க்கால் ஓடிவந்து பாய்தலையுடைய திருக்கழுமலம் என்ற வளமை மிக்க நகரமாகும்.

பிறை, தும்பை, இவற்றுடன் கங்கையோடு வெண்டலை கொக்கிறகு இவற்றைத் திருமுடிக்கண் அணிந்தும், கொன்றையையும் பாம்புகளையும் மாலைகளாக அணிந்தும் விளங்குகின்ற இறைவனது இடம் திருக்கழுமலம் என்பதாம்.

குரண்டம் — கொக்கு, அதன் வடிவங் கொண்ட அசுரன் குரண்டாசுரன். இவனையழித்து அதன் சின்னமாக கொக்கிறகை இறைவர் அணிந்து கொண்டதாகப் புராணங்கள் கூறும். கொக்கிறகு அணிந்தமையை திருமுறைகளில் வேறு சில இடங்களிலும் காணலாம்.

புயங்கமங்கள் — பாம்புகள்; பொற்பு — பெருமை;

பொன்னி — காவிரி நதி; கால் — வாய்க்கால்.

அண்டத்தா லெண்டிக்கு மமைந்தடங்கு மண்டலத்(து)
ஆறேவேறே வானுள்வா ரவரவ ரிடமதெலாம்
மண்டிப்போய் வென்றிப்போர் மலைந்தலைந்த வும்பரு
மாறேலாதார் தாமேவும் வலிமிகு புரமெரிய
முண்டத்தே வெந்திட்டே முடிந்திடிந்த இஞ்சிசூழ்
மூவாமூதூர் மூதூரா முனிவுசெய் தவனதிடங்
கண்டிட்டே செஞ்சொற்சேர் கவின்சிறந்த மந்திரக்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. 4

4. இவ்வண்டத்தின் எட்டுத் திசைகளும் அமைந்து அடங்கிய இப்பூமண்டலத்தின் வழியாகச் சென்று, வேருகத் தனித்த தேவர்களின் உலகமெல்லாம் நெருங்கிச்சென்று வெற்றியுடைய போரைச் செய்து அந்தத் தேவர்களாலும் எதிர்க்க இயலாத (வலிமை பொருந்திய) அசுரா மேவி நடத்தும் வலிமை மிக்க மூன்று புரங்களையும் நெற்றிக் கண்ணின் தீயால் வெந்து அழிந்த இடிந்த மதில்களையுடைய (அந்த) புரங்களாகிய மூதூரை மூதூராகும் வண்ணம் முனிவு செய்த சிவபிரானது இடம் (பக்தர்கள்) தரிசித்து (ஓதுகின்ற) செம்மையான சொற்கள் சேர்ந்தவையும் பண்பினுல் சிறந்தவையுமான மந்திர வலிமை நீங்காதவர்கள் விரும்பி வாழும் திருக்கழுமலம் என்னும் வளநகராகும்.

முப்புரம் எரித்தவனது இடம் மந்திரவலிமை நீங்காத வேதியர் வாழும் திருக்கழுமலம் என்று கூறியவாறு.

மண்டிப்போய் — நெருங்கிச்சென்று

உம்பர் — தேவர்கள்; மாறு ஏலாதார் — எதிர்க்க இயலாதவர்கள் (தேவர்களாலும் எதிர்த்துப் போராட இயலாத முப்புரத்தசுரர்கள் என்றதாம்)

முண்டம் — நெற்றி, இங்கு ஆகு பெயராய் நெற்றிக் கண்ணைக் குறித்தது.

மூதூர் மூதூரா முனிவு செய்தவன் — பழைய ஊராகிய முப்புரம் பழைமையாகவே ஆகும்படி கோபித்தவன். இதன் கருத்து அந்த ஊர் இப்பொழுது இல்லையாகும்படி அழிவு செய்தவன் என்பதாம்.

செஞ்சொல்-செம்மையான பொருள் பயக்கும் சொற்கள், கவின் - இங்குப் பண்பு என்ற பொருளில் கொள்க. மந்திரக்கால் - மந்திர வலிமை. கால் என்ற சொல்லுக்கு வலிமை என்ற பொருளும் உண்டு. மந்த்ரபலம் என்பது வடமொழி வழக்கு. மந்திரக்கால் ஓவாதார் என்றது வேத மந்திரங்களை

இடைவிடாது உருவேற்றுவதால் மந்திரவலிமை என்றும் குறையாத வேதியர்கள் என்றதாம்.

திக்கிற்றே வற்றற்றே திகழ்ந்திலங்கு மண்டலச்
சீருர்வீருர் போரார்தா ரகனுட லவனெதிரே
புக்கிட்டே வெட்டிட்டே புகைந்தெழுந்த சண்டத்திப்
போலேபூநீர் தீகான்மீப் புணர்தரு முயிர்கடிறஞ்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்தமங்கை செங்கதத்
தோடேயாமே மாலோகத் துயர்களை பவனதிடங்
கைக்கப்போ யுக்கத்தே கனன்றுமிண்டு தண்டலைக்
காடேயோடா வூரேசேர் கழுமல வளநகரே. 5

5. திக்குகளின் தலைவர்களான திக்பாலகர்கள் அவ்வவ் விடங்களில் விளங்கும் நிலவுலகத்தில் சீறுதலையும் வலிமையையும் பொருந்திய தாரகன் என்னுமசுரனது உடலை அவன் முன்னே சென்று போரிட்டு, வெட்டி (அதனாலுண்டாய செருக்கால்) மிகவும் புகையுடன் எழுந்த சண்டத்தீ போன்று சொர்க்கலோகத்தினின்றும் நடனம் செய்துகொண்டே தொடர்ந்த மங்கையான காளியின் கோபத்துக்கு நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்ற ஐம்பூதங்களின் சேர்க்கையான உலகத்தின் உயிர்கள் வலிமையிழந்து இறவாது (ஊர்த்துவ தாண்டவத்தால் அக்காளியின் செற்றத்தையடக்கி) அவற்றின் துயர்களைக் களைந்தவனாகிய சிவபிரானது இடம், வரிசையாக ஒழுங்குடன் வளர்ந்து பொன்வண்ணங்காட்டி நெருங்கிய குளிர்ந்த காடுகள் அகலாத திருக்கழுமலம் என்ற வளநகராகும்.

திக்கிற்றேவற்றற்றே — 'திக்கில் தேவு அற்று அற்றே' எனப் பிரித்துப் பொருள் காண்க.

சொக்கம் - சொர்க்கம் என்பதன் திரிபு; கதம் - கோபம்;

'கைக்கப்போயுக்கத்தே' என்ற பாடமே பல பழைய பிரதிகளில் உள்ளது. அப்பாடப்படி பொருள் கொள்ளப் பட்டது. கை - வரிசை, ஒழுங்கு; உக்கம் - பொன்.

தருமபுரப் பதிப்பில் 'கைக்கப் பேர் உக்கத்தே' எனப் பாடங்கொண்டு, 'உக்கம்' என்பதற்குத் தீ எனப் பொருள் கொண்டு பெரிய ஊழித்தீயில் கனன்றும் அழியாது மிண்டிய குளிர்ந்த காடுகள் அகலாத கழுமலநகரம் என்ற பொருள் கூறப்பட்டுள்ளது. இது நெருப்பூழியிலும் நிலைத்த நகரம் என்பதறிவித்தது என்றும் வரையப்பட்டுள்ளது.

தண்டலை - குளிர்ந்த சோலை, பூந்தோட்டம்; தாரகனைக் கொன்று அதனால் செருக்குற்றிருந்த காளியின் கோபத்துக்கு உயிர்கள் பலியாகாது காத்த இறைவனது இடம் திருக்கழுமலம் என்பதாம். இது திருவாலங்காட்டுத் தலபுராணத்தைத் தழுவியதாகும். காளியின் செற்றத்தையடக்கியதைப் பின் வரும் திருமுறைப் பிரமாணங்களாலும் அறிக.

1. வென்றிமிகு தாரகன தாருயிர் மடங்கக்
கன்றிவரு கோபமிகு காளிகத மோவ
நின்றுநட மாடியிட நீடுமலர் மேலால்
மன்றன்மலி யும்பொழில்கொள் வண்டிருவை யாறே

(திருஞானசம்பந்தர் 2-ம் திருமுறை, 32-ம் பதிகம் 5-ம் பாடல்)

2. பைதற் பிணக்குழைக் காளிவெங் கோபம்பங்கப்படுப்பான்
செய்தற் கரிய திருநடஞ் செய்தன சீர் மறையோன்
உய்தற் பொருட்டு வெங்கூற்றை உதைத்தன உம்பர்க் கெல்லாம்
எய்தற் கரியன இன்னம்ப ரான்றன் இணையடியே.

(அப்பர், 4ம் திருமுறை 100ம் பதிகம் 2-ம் திருப்பாடல்)

செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்ததும்பி மொய்ம்புறுஞ்
சேரேவாரா நீள்கோதைத் தெரியிழை பிடியதுவாய்
ஒற்றைச்சேர் முற்றற்கொம் புடைத்தடக்கை முக்கண்மிக்
கோவாதேபாய் மாதானத் துறுபுகர் முகவிறையைப்

பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்துமிக்க துக்கமும்
பேராநோய்தா மேயாமைப் பிரிவுசெய் தவனதிடங்
கற்றிட்டே யெட்டெட்டுக் கலைத்துறைக் கரைசெலக்
காணாதாரே சேராமெய்க் கழுமல வளநகரே. 6

6. (முப்புரத்தசுரர், சலந்தரன் மற்றும் பலவசுரர்கள்) கோபித்துச் செய்த போர்களில் வெற்றியுடன் திகழ்ந்த சிவ பிரானாகிய ஆண்யானையின் தோளைப் பொருந்தி நீண்ட மாலையையணிந்த உமாதேவியார் பெண்யானையின் வடிவொடு கூடிய சேர்க்கையில் ஒற்றையாகச் சேர்ந்த முற்றிய தந்தத்தையுடைய துதிக்கையும் மூன்று கண்களையுமுடையதாயும், மிகுந்து ஓயாதே பொழிகின்ற மத நீரோடு கூடியதாயுமுள்ள யானைமுகக் கடவுளைப் பெற்று, இப்பூவுலகம் மிகப்பெரியதான துக்கத்தையும் நீங்காத துன்பத்தையும் பொருந்தாதபடி விலக்கியருளிய சிவபிரானது இடம், அறுபத்துநான்கு கலைகளையும் துறைபோகக் கற்றும் அக்கலைகளால் இறைவனைக் காணாதார் வந்து சேராத உண்மைத்தன்மை கூடிய திருக் கழுமலம் என்ற வளநகராகும். (''கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன், நற்றாள் தொழாஅர் எனின்'' என்ற திருக்குறள் இங்கு சிந்தித்தற்குரியது'')

தும்பி — ஆண்யானை; பிடி — பெண்யானை

மாதானம் — யானையின் மதநீர்; புகர்முகம் — யானை.

இது, சிவபிரான் யானைமுகக்கடவுளைத் தோற்றுவித்து, அவர் மூலம் கயமுகாசுரனைக் கொன்று, இப்பூவுலகத்தையும் விண்ணுலகத்தையும் காத்தருளிய சிவபிரானது இடம் திருக் கழுமலம் என்றதாம். ''பிடியதன் உரு உமை கொள'' எனத் தொடங்கும் பிள்ளையாரின் திருப்பாடலும் இதே வரலாற்றைக் குறிப்பதாகும்.

பத்திப்பேர் வித்திட்டே பரந்தவைம் புலன்கள்வாய்ப்
பாலேபோகா மேகாவாப் பகையறும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்

சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவன் உறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. 7

7. பக்தியென்னும் பெயரிய (அல்லது பெரிய) வித்தினை யிட்டு ஐந்தாகப் பரந்த புலன்களின் வழியே மனதைப் போகாது காத்து, உட்பகையெனப்படும் ஆறினையும் போக்கும் வகையை நினைந்து, முத்தியடைவதற்குத் தடையாகிய முக்குணங்களின்பால் செல்லாது அவற்றினின்றும் பிணங்கி, அந்தக்கரணங்கள் நான்கினையும் ஒரே நெறியின்பாற் செலுத்தி, மெய்ப்பொருளாகத் திகழ்கின்ற சிவபரம் பொருளையே தியானிப்பவர்களைத் தானாகவே (சிவமாகவே) செய்தருளும் இறைவனது இடம், வேதாங்கங்கள் ஆறினையும் ஓதியுணர்ந்தவர்கள் (உலகனைத்திலும்) கலந்து இலங்கும் நற்பொருளாகிய சிவபிரானது திருவடிகளை இடைவிடாது தியானிப்பவர்கள் மேவியிருக்கும் திருக்கழுமலம் என்ற வள நகரமாகும்.

ஐம்புலன்கள்-ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்பன. இவைகளை முறையே சப்த, ஸ்பர்ஸ, ரூப, ரஸ, கந்தம் என உரைப்பது வடநூல் வழக்கு.

உட்பகை ஆறு - காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பனவாம்.

முக்குணம் — சாத்துவிகம், ராஜஸம், தாமஸம்

அந்தக்கரணம் நான்கு — மனது, சித்தம், புத்தி, அஹங் காரம்.

சட்டங்கம்—'சட் + அங்கம்' சடங்கம் — இது சட்டங்கம் எனச் செய்யுள் நோக்கி விரிந்தது. ஆறு வேதாங்கங்கள் எனப் பொருள்படும். இவை சிக்ஷை, வியாகரணம், கற்பம், நிருத்தம், சந்தோவிசிதம், சோதிடம் என்பனவாம். இவை பற்றி முன்னர் வந்த இடங்களில் உரைத்தவையும் கொள்க.

கத்திட்டோர் — கற்றிட்டோர் என்பதன் (எதுகை நோக்கிய) திரிபு, கற்றவர்கள் என்பதாம். கலந்து இலங்கும் நற்பொருள்-ஆறு வேதாங்கங்களின் உட்பொருளாய்க் கலந்து விளங்கும் பொருளாய பெருமான் எனவும் கொள்ளலாம்.

'காலே யோவாதார்' — கால் என்பதற்குத் திருவடியெனப் பொருள் கொண்டு திருவடிகளை இடைவிடாது தியானிப்பவர் எனப்பொருள் கொள்ளப்பட்டது.

வேதாங்கங்கள் ஆறையும் கற்றவர்கள், திருவடிகளை இடைவிடாது தியானிப்பவர்களாவர். அத்தகையோர் விரும்பி வசிக்கும் திருக்கழுமலம் என்பதாம்.

செம்பைச்சே ரிஞ்சிச்சூழ் செறிந்திலங்கு பைம்பொழிற்
சேரேவாரா வாரீசத் திரையெறி நகரிறைவன்
இம்பர்க்கே தஞ்செய்திட் டிருந்தரன் பயின்றவெற்(பு)
ஏரார்பூநே ரோர்பாதத் தெழில்விர லவணிறுவிட்(டு)
அம்பொற்பூண் வென்றித்தோ ளழிந்துவந்தனஞ்செய்தாற்
காரார்கூர்வாள் வாணுளன் றருள்புரி பவனதிடங் 8
கம்பத்தார் தும்பித்திண் கவுட்சொரிந்த மும்மதக்
காரார்சேருர் மாவீதிக் கழுமல வளநகரே.

8. செப்புத்தகடுகள் வேய்ந்த மதில்கள் சூழ்ந்த, மிகவும் அடர்த்தியாக விளங்கும் பசிய பொழில்களைச் சேர்ந்து கடலி னின்றும் வருகின்ற அலைகள் வந்து மோதுகின்ற, இலங்கை நகருக்குத் தலைவனாகிய இராவணன், இவ்வுலக மக்களுக்குத் துன்பம் விளைத்து, அத்துடன் நில்லாமல் சிவபிரானது உறை விடமாகிய திருக்கயிலை மலையையும் எடுத்தலைச் செய்ய, மலருக்கு ஒப்பான தனது திருப்பாதத்து ஒரு விரலால் ஊன்றி, அழகிய பொன்னாபரணங்களைப் பூண்ட அவனது வெற்றித் தோள்களை நெரித்துப், பின் வணக்கம் செய்தவனாகிய அவனுக்குக் கூர்மை பொருந்தியதொரு வாளையும், நிறைய ஆயுளையும் தந்து அன்று அருள் புரிந்தவனாகிய சிவபிரானின்

இடம், கம்பங்களில் கட்டிய யானைகளது திண்ணிய கன்னங் களினின்றும் பொழியும் மதநீரால் ஆகிய கரிய சேறு பொருந் திய பெரிய வீதிகள் நிறைந்த திருக்கழுமலம் என்ற வளநகரா கும்.

வாரிசம் — கடல். திரை என்ற சொல்லுக்குக் கடலலை என்று கொண்டு, வாரிசம் என்ற சொல்லுக்குச் சங்கு எனக் கொண்டு சங்குகளுடன் கூடிய கடலலைகள் என்றும் கொள்ள லாம்.

பன்றிக்கோ லங்கொண்டிப் படித்தடம் பயின்றிடப்
பானுமாரு ஞமேயப் பறவையி னுருவுகொள
ஒன்றிட்டே யம்புச்சே ருயர்ந்தபங் கயத்தவ
ஞேதானேதா ன௃துணரா துருவினதடிமுடியுஞ்
சென்றிட்டே வந்திப்பத் திருக்களங்கொள் பைங்கணின்
தேசால்வேறேர் ஆகாரந் தெரிவுசெய் தவனதிடங்
கன்றுக்கே முன்றிற்கே கலந்திலங் நிறைக்கவுங்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. 9

9. திருமால் பன்றியின் உருவமெடுத்து இப்பூமியைத் தோண்டுவானும். நீரில் மலரும் தாமரையாதனத்தானை பிரமனேவெனில் தான் ஊர்தியாகக் கொண்ட அன்னப் பறவையின் உருவங்கொள்ள இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து சென்றும் அடிமுடியுமாகிய அஃது உணராதே துதிக்க, பின் திருவுள்ளத்திற் கொண்ட கண்ணேட்டத்தின் பெருமையால், (அவர்க்கருள் புரிவான் வேண்டி) அழற்பிழம் பாய் நின்ற நிலை நீங்கி இலிங்கோற்பவமூர்த்தியாய்த் தமது திருவுருவங்காட்டியருளிய சிவபிரானரது இடம் வீடுகளின் முன்றில்களில் க்ன்றுகள் கலந்து வளங்களைப் பெருக்கவும், வாய்க்கால்கள் வந்து மேலேறிப் பாய்ந்து நீர்வளம் பெருக்கு தலையுமுடைய திருக்கழுமலம் என்ற வளநகராகும்.

திருக்களங்கொள் பைங்கணின் தேசால் என்பது கீழ்க் கண்டவாறு பிரித்துப் பொருள் காணப்பட்டது.

திருக்களங்கொள் — திருவுள்ளத்துக் கொண்ட; பைங்கணின் — (பசிய கண் எனவே) அவர் பால் கொண்ட கண்ணோட்டத்தின்; தேசால் — அழகால் அல்லது பெருமையால், அதாவது பிரம விட்டுணுகள் துதிக்க அவர்கள் பால் கொண்ட தயை காரணமாக என்று பொருள் தருவது காண்க.

வேரூர் ஆகாரம் என்பது பிரம விட்டுணுக்கள் அழற்பிழம்பின் அடிமுடி காணாது திரும்பிச் சிவலிங்கம் தாபித்து வழிபட அவர்க்கிரங்கி, இறைவர் இலிங்கோற்பவ மூர்த்தியாய்க் காட்சியளித்ததைக் குறிப்பிடுகிறது. ஆகாரம்-உருவம். (கந்த புராணம் தட்ச காண்டம் அடிமுடி தேடு படலம் காண்க).

தட்டிட்டே முட்டிக்கைத் தடுக்கிடுக்கி நின்றுணுத்
தாமேபேணு தேநாளுஞ் சமணொடு முழல்பவரும்
இட்டத்தா லத்தந்தா னிதன்றதென்று நின்றவர்க்(கு)
ஏயாமேவா யேதுச்சொல் லிலைமலி மருதம்பூப்
புட்டத்தே யட்டிட்டுப் புதைக்குமெய்க்கொள் புத்தரும்
போல்வார்தாமோ ராமேபோய்ப் புணர்வுசெய்
தவனதிடங்
கட்டிக்கால் வெட்டித்தீங் கரும்புதந்த பைம்புனற்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. 10

10. தட்டு சுற்றுக உடையை அரையிலுடுத்தி, கை முட்டிகளில் தடுக்கையிடுக்கி, நின்று கொண்டே உணவை உட்கொண்டு, மெய்ப்பொருளைப் பேணாது நாள் தோறும் சமணக் கொள்கைகளோடு உழல்பவர்களும் (இது சமணர்களைக் குறிப்பது.) தம் விருப்பத்தால் மனம் போனபடி உண்மைப் பொருள் இதுவென்றும், அதுவென்றும் வாயில் வந்தபடி பொருந்தாக் கொள்கைகளைச் சொல்பவர்களும், இலைகள் மலிந்த மருத மரத்துப் பூக்களை (வெள்ளை) ஆடைகளில் சாயமாக ஏற்றி, (அச்சாயமேற்றப்பட்ட ஆடைகளால்) மூடுகின்ற உடலையுடையவர்களுமாகிய பௌத்தர்களும் போன்ற புறப்புறச் சமயிகள், தன்னைப்பற்றிய உண்மையை ஆராய்ந்து

காணா இயலாதபடி மறைத்தலைச் செய்தவனாகிய சிவபிரானது இடம், அடிப்பாகங்களை வெட்டிக் கட்டி, அதனால் இனிய கரும்புகள் தந்த கரும்புச் சாறாகிய பசியநீர் வாய்க்காலாகப் பெருகி வந்து மேலே ஏறிப் பாய்தலையுடைய திருக்கழுமலம் என்ற வளநகராகும்.

இட்டம் — இச்சை, (இஷ்டம் என்பது இட்டமென வாயிற்று என்றும் கொள்ளலாம்)

அத்தம் — அரிய நெறி, அதிவிடயம், சொற்பொருள் போன்றவை ஈண்டுப் பொருந்தும் பொருள்களாகும். உண்மைப் பொருள் என்று இப்பாடலின் இயைபுக்கேற்ற வாறு கொள்ளப்பட்டது.

இலைமலி மருதம்பூப்புட்டத்தே அட்டிட்டுப்புதைக்கும் மெய்க் கொள் புத்தர் என்பதன் விளக்கமாவது:

இலைமலி — இலைகள் நிறைந்த; மருதம் — மருத மரத்தின் பூ — பூக்களை, புட்டத்தே — வெள்ளை ஆடையில், அட்டிட்டு— சாயமாக ஏற்றி, புதைக்கும் — போர்த்து மூடிக் கொள்ளும் மெய்க்கொள் — உடம்பையுடைய, புத்தர் — புத்த சமயத் துறவிகள்.

மருத மரப்பூக்களால் சாயம் ஏற்றும் முறை

மருத மலர் சிவப்பு நிறமானது. இம்மலர்களை அம்மி யில் வைத்து நன்றாய் அரைத்துக் கொதிக்கின்ற தண்ணீரில் போட வேண்டும். அதனுடன் குறிப்பிட்ட அளவு சோற்று உப்பையும் போட வேண்டும். இக்கலவை கொதிக்கும் போது நன்கு துவைத்து வெள்ளையாக்கப்பட்ட துணிகளை அதில் போட்டு நன்றாகக் கொதிக்க வைக்க வேண்டும். அவ் வெள்ளைத் துணியில் பிரகாசமான சிவப்பு நிறம் பிடித்துக் கொள்ளும். அதன் பின்னர் நிழலில் உலர்த்தி எடுத்தால் காவித்துணி கிடைக்கும். குணபாடம் என்ற தமிழ் மருத்துவ

நூலில் கண்ட இம் முறையைக் குறிப்பெடுத்து நமக்குதவியவர் புலவர் திரு. கே. ஆர். நாகராசனுர் அவர்கள். இந்த முறையில் தான் பழங்காலத்திய புத்தத் துறவிகள் காவியாடைகளைத் தயாரித்திருக்க வேண்டுமென்று உய்த்துணரப் படுகிறது.

இவ்வாறின்றி, புட்டத்தே என்பதற்கு உடலின் பின்புறம் எனப் 'பொருள்கொண்டு மருதோன்றி இலையை அரைத்து பின் பக்கத்தே பூசி உடலை மறைக்கும் புத்தர்கள் எனப் பொருளுரைத்தனர் திருத்தருமையாதீனக் குறிப்புரை ஆசிரியர். இது பொருந்துமோ?

புணர்வு — சூழ்ச்சி, புறச்சமயிகள் தம்மையறியாதவாறு இறைவர் தம்மை மறைப்பித்தமையைக் குறிப்பிட்டதாகக் கொள்க.

கஞ்சத்தே னுண்டிட்டே களித்துவண்டு சண்பகக்
காேனதேனே போராருங் கழுமல நகரிறையைத்
தஞ்சைச்சார் சண்பைக்கோன் சமைத்தநற் கலைத்துறை
தாமேபோல்வார் தேனேரார் தமிழ்விர கனமொழிகள்
எஞ்சத்தேய் வின்றிக்கே இமைத்திசைத்த மைத்தகொண்டு
ஏழேயேழே நாலேமூன் றியலிசை யிசையியல்பா
வஞ்சத்தேய் வின்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர்
மார்பேசேர்வாள் வானோர்சீர் மதிநுதல் மடவரலே. 11

திருச்சிற்றம்பலம்.

11. தாமரை மலரில் உள்ள தேனைக் குடித்துக் களித்த வண்டு சண்பகக் காட்டில் உள்ள வண்டோடு போர் செய்யும் திருக்கழுமல நகரில் கோயில்கொண்டுள்ள இறையாம் பரமசிவனை அடைக்கலமாகச் சாருகின்ற சண்பையர்கோனும், நல்ல கலைத்துறைகளைச் சமைத்தவர்களைப் போன்றவர்கள் விரும்பும் தேனுக்கு ஒப்பான தமிழ் விரகனுமான திருஞான சம்பந்தனது மொழிகளாகிய இப்பாடல்களை எவ்வகையான

குறைபாடுமில்லாது அமைத்து இசைத்தவற்றைக் கொண்டு இருபத்தொரு வகையாக இயலுகின்ற இசையின் தன்மையினுல் மனதில் சிறிதும் வஞ்சனையின்றிப் பயில்பவரது மார்பினைத் தேவர்கள் போற்றுகின்ற திருமகள் வந்து அடைவாள். (அதாவது திருமாலின் செல்வத்தை அடைவார்கள் என்பதாம்.)

ஏழே ஏழே நாலே மூன்று — $7+7+4+3=21$ இதற்குத் தேவாரப்பண் 21 என்று தருமையாதீனக் குறிப்புரை கூறுகிறது. இது சரியல்ல என்று கருதுகிருேம். என்னை? பண்களாவன பாலையாழ் முதலிய நூற்றுமூன்று. இவற்றுள் தேவாரத் திருப்பதிகங்களில் அமைந்தவை இருபத்து மூன்று. திருஞானசம்பந்தப் பெருமானது பதிகங்கள் வரையும் பார்த்தாலும் கூட இருபத்திரண்டு பண்கள் வருகின்றன. எனவே தேவாரப் பண்கள் 21 என்பது பொருந்தாது.

எனவே ஏழேயேழே நாலே மூன்று இயலிசையியல்பால் என்பதற்குப் பண்கள் எனக் கொள்ளாது இயலும் இசைமுறை எனக்கொள்ளப்பட்டது. இதன் விளக்கம் : — ஒவ்வொரு பண்ணையும் இருபத்தொரு இசைத் துறைகளில் பாடி முடிக்கும் வழக்கத்தையே இது குறிக்கின்றது. இருபத்தியொரு துறைகள் என்பன ஒவ்வொரு பண்ணையும் ஏழு சுரங்களுள் மெலிவு, சமன், வலிவு என்னும் மூன்று தானங்களிலும் அமைத்துப்பாடும்பொழுது இருபத்தொரு இசைத்துறைகளாக விளங்கித் தோன்றும். 'வல்வில் ஓரி' என்பானை வன்பரணர் பாடியதாகவுள்ள புறநானூறு 152ம் பாடலில் ''மூவேழ் துறையும் முறையுளிக் கழிப்பி'' என்ற தொடரையும் இதற்கு ''இருபத்தொரு பாடற்றுறையையும் முறையிற்பாடி முடித்து'' என்று பொருளுரைத்த உரையாசிரியர் ''மூவேழ் துறையுமென்றது வலிவு, மெலிவு, சமம் என்னும் மூன்று தானத்திலும் ஒவ்வொன்றில் ஏழு தானம் முடித்துப்பாடும் பாடற்றுறையை; அன்றி, இருபத்தொரு நரம்பாற்ருெடுக்கப் படும்பேரியாழ் எனினும் அமையும்' என விளக்கியிருத்தலையுங்

காண்க. புறநானூறு மூலமும் உரையும் பதிப்பாசிரியர் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் இவ்வுரைப் பகுதியில் கீழ்க்குறிப்பாக ''ஏழேயேழே நாலே மூன்றியலிசை யிசை யியல்பா வஞ்சத் தேய்வின்றிக்கே மனங்கொளப் பயிற்று வோர்'' என்ற இத்தேவாரப் பகுதியையும் ''பண்களுக்கு இன்றியமையாத மூவேழ்திறம்'' (சிலப் 5: 35: 7 அடியார்க்கு நல்லார் உரை) என்பதையும் ''ஈண்டறியத் தக்கன'' எனப் பதிப்பித்துள்ளமையுங் காண்க. (புறநானூறு, 3ம்பதிப்பு, டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களால் பதிப்பிக்கப் பட்டது. பக்கம் 296)

இவ்வாறின்றி, நமது அரிய நண்பர் புலவர் திரு பி. மா. சோமசுந்தரனார் அவர்கள் தமது விளக்கப் குறிப்பில்—''ஈரிரு பண்ணும் எழு மூன்று திறனும் (பிங்கலத்தை 1380) என்ரு ராகலின் நாற்பெரும் பண்ணுக்கும் இருபத்தொரு திறங்கள் அமைந்துள்ளன. இவற்றினுள் பாலையாழ்த்திறன் 5, குறிஞ்சி யாழ்த்திறன் 8, மருதயாழ்த்திறன் 4, செவ்வழி யாழ்த்திறன் 4, ஆக 21 என்பது யாழ்நூல் (சுவாமி விபுலானந்தர்)'' எனக் குறிப்பிட்டுள்ளார். மற்றும், திருப்பனந்தாள் காசிமடம் திருஞானசம்பந்தர் தேவாரம் தலமுறைப் பதிப்பில் தேவாரப் பண்கள் என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ள விளக்கத்தில் ''பகற்பண் பத்தும், இராப்பண் எட்டும், பொதுபண் மூன்றும் ஆக இருபத்தொன்று தேவாரப்பண்களாம்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது திருத்தருமபுர உரைக் குறிப்புக்கு அமைதி கூறுவதாயமைந்துள்ளது.

மேற்கூறிய விளக்கங்களுள் ஏதேனுமொன்று திருஞான சம்பந்தப் பெருமானின் திருவுள்ளக்கிடைக்கு ஒத்ததாயிருக்கக் கூடும் என்று நம்புகிருேம்.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

திருவிருக்குக்குறள்

பதிகவரலாறு: திருவிருக்குக்குறள் என்பது இரண்டு சீர்களால் யாக்கப் பெற்றதும் இருக்கு மந்திரம் போன்றது மான பாடல் என்பதாம். இருக்கு வேதம் அல்லது வேதப் பொதுமை கொள்க. வேதமந்திரம் போன்று, சொற் சுருக்க முடையதாயினும், எண்ணுவார் எண்ணத்தை நிறைவேற்ற வல்லதாமென்க. இப்பதிகம் சீகாழியின் பன்னிரு திருப் பெயர்களையும் குறிப்பிட்டுப் பாடப் பெற்றதாயினும் காலமோ வரலாறோ பெரியபுராணத்தில் கூறப்படவில்லை. எனவே வரலாறு தெரியாத பதிகங்களுள் ஒன்றாகப் பிரசுரிக்கப் படுகிறது.

பண் – குறிஞ்சி] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

அரனை யுள்குவீர், பிரம னூருளெம்
பரனை யேமனம், பரவி யுய்ம்மினே. 1

பதிகப்பொழிப்புரை: 1. சிவபிரானைச் சிந்திப்பவர்களே! திருப்பிரமபுரத்தில் உள்ள எமது பரமனையே மனத்தால் துதித்து உய்வீர்களாக.

இத்திருப்பாடலும் இப்பதிகத்தின் மற்றைய திருப்பாடல் களும் உலகத்தவரை முன்னிலைப்படுத்தி உபதேசிப்பதாக அமைந்துள்ளன. திருப்பிரமபுரம் — சீகாழியின் முதலாவது திருப்பெயர்,

உள்குதல் — எண்ணுதல், நினைத்தல், தியானித்தல்

உய்தல் — பிழைத்தல், உயிர்வாழ்தல், இங்கு நற்பேறு பெற்று நிலைத்துவாழ்தல், நல்லகதி பெறுதல் ஆகியவற்றின் மேனின்றது.

காண வுள்குவீர், வேணு நற்புரத்
தாணு வின்கழல், பேணி யுய்ம்மினே. 2

2. சிவபிரானைத் தரிசிக்க நினைப்பவர்களே! நன்மை மிக்க திருவேணுபுரத்து எழுந்தருளியுள்ள தாணுவாகிய சிவபிரானின் திருவடிகளை வழிபட்டு உய்வீர்களாக.

வேணு நற்புரம் — நல்வேணுபுரம் என மாற்றிக் கொள்க. வேணுபுரம் என்பது சீகாழியின் இரண்டாவது திருப்பெயர்.

தாணு — சிவபெருமான். 'ஸ்தாணு' என்ற வடமொழிப் பெயரின் தமிழ்வடிவம். 'தாணு' என்ற சொல் மலை, தூண், நிலைபெறல் முதலிய பொருள்களையுடையதாகி உலகைத் தூண் போலத் தாங்குதலாலும், தான் என்றும் ஒரேபடித்தாய் நிலைபெற்றிருத்தலாலும் சிவபெருமானுக்கு ஆயிற்று. 'ஸ்தாணு' என்ற பெயர் சிவபெருமானின் ஆயிரந்திருநாமங்களிலும் (சிவஸஹஸ்ரநாமம்) 108 திருநாமங்களிலும் (அஷ்டோத்தரசதநாமம்) ஒன்ருக உள்ளது.

பேணுதல் — 'என்றும் இடைவிடாது சிந்தித்தல்,' 'உவப்பன செய்து வழிபடுதல்' ஆகிய பொருளில் வந்தது. ''பேணலால் எம்மைப் பெற்ருர்...'' (தடுத்தாட் கொண்ட புராணம்:196)

''வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண்'' (காரைக் காலம்மையார் புராணம்-56) ''பெரியாரைப் பேணி...'' (திருக்குறள் — 443 பரிமேலழகர்உரை) முதலிய அருமை வாக்குகள் காண்க.

நாத னென்பிர்காள், காத லொண்புகல்
ஆதி பாதமே, ஓதி யுய்ம்மினே. 3

3. எம் தலைவன் என்று வழிபடுபவர்களே! அழகிய திருப்புகலியில் அன்புடன் எழுந்தருளியுள்ள முதல்வனுகிய சிவபெருமானின் திருவடிப் பெருமையையே எப்பொழுதும் ஓதி உய்வீர்களாக.

'காதல்' என்பதை 'ஓதி' யுடன் கூட்டி காதலுடன் ஓதி உய்ம்மின் என்றும் பொருள் கொள்ளலாம்.

பாதம் — திருவடி, இங்குத் திருவடிப் பெருமையைக் குறித்தது. ஓதுதல் — பாடுதல், துதித்தல்.

ஒண்புகலி— ஒள்புகலி; ஒள் என்னும் சொல், ஒளி, அழகு, நல்ல, மேன்மை ஆகிய பொருள்களையுடையது. இவை யனைத்தும் 'புகலி' க்குப் பொருந்துவனவாம். புகலி — சீகாழி யின் மூன்ருவது திருப்பெயர்.

'ஒள்' என்பதை 'ஆதி'யுடன் கூட்டி ஒளியுடைய முதல்வன் அழகிய முதல்வன், நல்ல முதல்வன், மேன்மையுடைய முதல்வன் என்றிவ்வாருகக் கொள்ளலும் சிறப்புடைத்தே.

அங்க மாதுசேர், பங்க மாயவன்
வெங்குரு மன்னும், எங்க ளீசனே. 4

4. திருமேனியில் உமாதேவியார் சேர்ந்த பாதியாயான வன் (மாதியலும் பாதியன்) திருவெங்குருவில் நிலையாக எழுந் தருளியுள்ள எமது ஈசனேயாவான்.

அங்கம் — மேனி; பங்கம் — பாதி
வெங்குரு — சீகாழியின் நான்காவது திருப்பெயர்.
மன்னுதல் — என்றும் நிலையாக இருத்தல்.

வாணி லாச்சடைத், தோணி வண்புரத்(து)
ஆணி நற்பொனைக், காணு மின்களே, 5

5. ஒளிவீசும் நிலவினையணிந்த சடையையுடையவனும், வளமை மிக்க திருத்தோணிபுரத்தில் எழுந்தருளியுள்ளவனுமாகிய நல்ல ஆணிப்பொன்னாகிய சிவபிரானைத் தரிசிப்பீர்களாக.

வாள்நிலா — ஒளி பொருந்திய நிலவு,

தோணிவண்புரம் — வண் தோணிபுரம் என மாற்றிக் கொள்க. தோணிபுரம் என்பது சீகாழியின் ஐந்தாவது திருப்பெயர்.

ஆணிநற்பொன் — நல்ல மாற்றுயர்ந்த பொன். பொன்னை உரையிட்டளக்கும் உரையாணி போன்றவர் (உயிர்களது பக்குவங்களை அளந்து ஏற்றவாறு அருள்புரிபவர் என்பது குறிப்பு — சிவக்கவிமணி திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் உரைக்குறிப்பில் கண்டது)

பாந்த ளார்சடைப், பூந்த ராய்மன்னும்
ஏந்து கொங்கையாள், வேந்த னென்பரே. 6

6. (எங்கள் பெருமான்) பாம்பு பொருந்திய சடையையுடைய வேந்தன், திருபூந்தராயில் நிலை பெற்றிருக்கும் வேந்தன், உமாதேவியாரின் வேந்தன் (கணவன்) என்று (அடியவர்கள்) போற்றிப் புகழ்வார்கள்.

வேந்தன் என்னுஞ் சொல்லை மூவிடத்துங் கூட்டுக.

வேந்தன் — அரசன், தலைவன், இறைவன். பூந்தராய் — சீகாழியின் ஆறுவது திருப்பெயர்.

ஏந்துகொங்கையாள் — ஏந்துதல் — தாங்குதல். ஏந்திழையாள் என்னுஞ் சொல் போல இச்சொல்லும் பெண்ணைக் குறிக்கும். அல்லது 'ஏந்தெழில்' என்பது மிக்க அழகு என்று பொருள் படுதல் போல 'மிக்க' அதாவது 'உன்னதமான' அல்லது '-ழகிய' கொங்கைகளையுடையவள் எனக்கொள்ளலுமாம். (''குசோன்னதே குங்குமராகசோணே'' என்பது

மஹாகவி காளிதாஸன் வாக்கு. குசம்—கொங்கை) கீழ்க் கண்ட தலங்களின் அம்பாள் திருநாமங்களும் இங்கு கருதற் குரியனவாம்.

திருநாகேச்சரம்	—	குன்றமுலைநாயகி
திருவிடைமருதூர்	—	நன்முலைநாயகி
திருவாவடுதுறை	—	ஒப்பிலாமுலையம்மை
திருநள்ளாறு	—	போகமார்த்த பூண்முலையாள்
திருவீழிமிழலை	—	சுந்தரகுசாம்பிகை
திருக்கீழ்வேளூர்	—	வனமுலைநாயகி
திருவண்ணாமலை	—	உண்ணாமுலையம்மை
திருவோத்தூர்	—	இளமுலைநாயகி

கரிய கண்டனைச், சிரபு ரத்துளெம்
அரசை நாடொறும், பரவி யுய்ம்மினே. 7

7. கரிய கழுத்தையுடையவனை (திருநீலகண்டப் பெருமானை), திருச்சிரபுரத்தில் உள்ள எமது அரசனை நாள் தோறும் துதித்து உய்வீர்களாக.

திருச்சிரபுரம் — சீகாழியின் ஏழாவது பெயர்.

பரவுதல் — துதித்தல், புகழ்தல்; அரசு — அரசன் (எப் பொருட்குமிறைவன். இங்குச் சிவபிரான்)

நறவ மார்பொழிற், புறவ நற்பதி
இறைவன் நாமமே, மறவல் நெஞ்சமே. 8

8. தேன் நிறைந்த பூம்பொழில்களையுடைய திருப்புறவம் என்னும் நல்லதலத்து இறைவனது திருநாமத்தை என்றும் மறவாதிருப்பீர்களாக.

நறவம் — தேன்; திருப்புறவம் — சீகாழியின் எட்டாவது பெயர்.

நெஞ்சமே மறவல் — நெஞ்சம் மறவல், நெஞ்சத்தில் மறவாதீர்கள். ஏ—அசை.

தென்றி லரக்கனைக் குன்றிற் சண்பைமன்
அன்று நெரித்தவா, நின்று நினைமினே. 9

9. தென்திசையில் உள்ள இலங்கையரசனாகிய அரக்கனை (இராவணனை) திருச்சண்பையில் கட்டுமலையில் வீற்றிருக்கின்ற மன்னனாகிய சிவபெருமான் (கயிலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற) அன்று (தன் கால் திருவிரலொன்றினால்) நெரித்ததை எப்பொழுதும் உள்ளத்தே நிறுத்தி நினைவீர்களாக.

தென்றில் — தென்திசை; சண்பை — சீகாழியின் ஒன்பதாவது பெயர். மன் — அரசன்; குன்று — சீகாழிக் கோயிலில் உள்ள கட்டுமலை (கயிலாயமெனவுங் கொள்ளலாம்) அன்று — பண்டறி சுட்டு. திருக்கயிலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற அக்காலத்து.

நின்று நினைதல் — உள்ளத்தே என்றும் மறவாது நினைத்தல், விடாப்பிடியாக நினைத்தல்.

அயனு மாலுமாய், முயலுங் காழிபான்
பெயல்வை யெய்திநின்(று), இயலு முள்ளமே. 10

10. பிரமதேவனும் திருமாலுமாய் இருவரும் (முறையே திருமுடியையும் திருவடியையும்) தேட முயற்சிக்கும் சீகாழிப் பெருமானின் திருவருள் பொழிவை அடைந்து நின்று உள்ளத்தை இயலச் செய்வீர்களாக.

பெயல்வு — மழை பொழிதல், இங்கு இறைவனின் அருளாகிய மழை பொழிதலைக் குறித்தது.

இயலும் உள்ளமே — உள்ளம் இயலுமே என்று மாற்றி உள்ளத்தை இயலச் செய்வீர் என்று முன்னிலையாக்கிப் பொருள் கொள்ளப்பட்டது. உள்ளத்தை இயலச் செய்தலாவது என்றும் இறைவனிடம் பொருந்தியிருக்கச் செய்தலாம். இயலல் — பொருந்தல்.

தேர ரமணரைச், சேர்வில் கொச்சைமன்
நேரில் கழனினைந்(து), ஒரு முள்ளமே. 11

11. பௌத்தர்களையும் சமணர்களையும் சேர்தல் இல்லாத திருக்கொச்சைவயத்துப் பெருமானது ஒப்பற்ற திருவடிகளை நினைந்து உள்ளம் தெளிவீர்களாக.

கொச்சை — கொச்சைவயம், சீகாழியின் பதினோராவது பெயர். மன் — அரசன். நேர் இல் — ஒப்பில்லாத. ஓர்தல் — தெளிதல் அதாவது சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்றும், சிவநெறியே முத்திநெறி என்றும், மற்றைய நெறிகள் யாவும் பிறவிக்கே ஏதுவாவன என்றும் தெளிதல்.

தொழும னத்தவர், கழும லத்துறை
பழுதில் சம்பந்தன், மொழிகள் பத்துமே. 12

12. தொழுகின்ற நன்மனத்தவர் வாழும் திருக்கழுமல நகரில் உறைகின்ற குற்றமற்ற (நெறியைப் போதித்திடும்) திருஞானசம்பந்தன் பாடிய பாடல்களாகிய பத்துமே அனைவருக்கும் பற்றுக்கோடாவன. (எனவே அவற்றை ஓதுவீர்களாக என்று உபதேசித்தருளியதாம்)

'அனைவருக்கும் பற்றுக்கோடாவன' என்பவை பொருள் முடிவு கருதி வருவித்து உரைக்கப்பட்டன.

திருக்கழுமலம் — சீகாழியின் பன்னிரண்டாவது பெயர். மொழிகள் பத்து — பத்துப் பாடல்கள். பத்துக்கு மேற்பட்ட பாடல்கள் இருப்பினும் மரபு பற்றி 'பத்து' என்றே கூறினர்.

"கழுமலத்துறை மனத்தவரே! பழுது இல் சம்பந்தன் மொழிகள் பத்துமே தொழும்" என்று கொண்டு கூட்டி "கழுமலத்துறை நன்மனத்தவர்களே! குற்றமற்ற சம்பந்தன் பாடல்கள் பத்தினையும் வணங்கி ஓதுவீர்களாக" என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால் திருக்கடைக்காப்புப் பாடல் பதிகப்பயன் கூறும் மரபுபற்றி பத்துமே பற்றுக்கோடாவன என்றுரைத்தலே சிறப்புடைத்து.

சிவம்

உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவஜயம்

தனித்திருவிருக்குக்குறள்

பதிகவரலாறு — எந்த ஒரு தலத்துக்கும் உரிமையாகாது பொதுவாகப் பாடியவைகளில் இந்தத் தனித்திருவிருக்குக் குறளும் ஒன்ருகும். இதற்கும் பாடிய காலமோ வரலாருே பெரியபுராணத்தில் கூறப்படாமையால் இப்பதிகத்தையும் ஈண்டுப் பிரசுரித்துள்ளோம். சிவபிரானே 'தனிமுதலாம் பரன்' என்று விளக்கப்பட்டதால் இப்பதிகம் தனித்திருவிருக் குக்குறள் என்ற பெயர் பெற்றது போலும்!

பண் : கொல்லி] திருச்சிற்றம்பலம் [3-ம் திருமுறை

கல்லால்நிழல், அல்லாத்தேவை
நல்லார்பேணுர், அல்லோம்நாமே. 1

பதிகப்பொழிப்புரை : 1. கல்லாலமர நீழலில் இருக்கும் தட்சிணுமூர்த்தியாகிய சிவபெருமான் அல்லாத பிறிதொரு தெய்வத்தை நல்லவர்கள் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார் கள். அங்ஙனமே நாமும் (பிறிதொரு தெய்வத்தை) மதிக்க மாட்டோம்.

தேவு - தெய்வம்; நல்லார் - உத்தமர், அறிஞர், ஞானிகள் பேணுதல்-விரும்புதல், மதித்தல். ''சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோமல்வோம்'' - (அப்பர் சுவாமிகள்-மறுமாற்றத் திருத் தாண்டகம் 5-ம் பாடல்).

''அற்பமான பலன்களைக் கொடுக்கும் தேவர்கள் ஆயிரக் கணக்கில் உள்ளனர். அவர்களை வழிபடுதலையும் அதனுல் ஏற்படும் பலன்களையும் கனவிலும் கூடக் கருதமாட்டேன்.

சம்புவே! பிரம்ம விஷ்ணுக்களுக்கும் அரிய நினது திருவடித் தாமரைகளைச் சேவித்தலையே என்றும் வேண்டுவேன்.''

— (ஆதிசங்கரரின் சிவானந்தலஹரீ 4 ம் பாடல் கருத்து)

கொன்றைசூடி, நின்றதேவை
அன்றியொன்று, நன்றிலோமே. 2

2. கொன்றைப் பூமாலையைச் சூடிநின்ற தெய்வமாகிய சிவபெருமானைத் தவிர வேறு ஒரு தெய்வத்தை நன்மை தரும் பொருளாகக் கொள்ள மாட்டோம்.

''கைச்சிறு மறியவன் கழலலாற்பேணுக் கருத்துடை ஞான சம்பந்தன்'' என்று பிறிதோரிடத்தும் பிள்ளையார் அருளிச் செய்திருத்தல் காண்க. இவைகளை ஆதாரமாகக் கொண்டே சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத் தொகையில்

''வம்பரு வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற்பேணு
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்''

என்றருளிச் செய்ததாகக் கொள்க.

நன்று இலோம் - நன்மை தரும் பொருளாகக் கொள்ளு தலில்லோம். அல்லது நன்மைதரும் பொருள் வேறு ஒன்று உடையோமல்லோம் என்றும் கொள்ளலாம்.

கல்லாநெஞ்சின், நில்லானீசன்
சொல்லாதாரோ(டு), அல்லோம்நாமே. 3

3. (கடவுள் உண்மையை நம்புகின்ற நம்பிக்கையை) கற்று உணராதவர்களின் உள்ளத்தில் ஈசன் நிற்கமாட்டான். (அவ்வாறு நம்பி) அவனது திருநாமம் சொல்லாதாரோடு நாம் உறவு அல்லோம்.

கல்லா நெஞ்சின் — 'கல் ஆம் நெஞ்சின்' எனப் பிரித்துக் 'கல்போன்ற நெஞ்சில் நில்லான்' எனவும் பொருள் கொள்ள லாம். ''திணியான மனோசிலை மீதுனதாள், அணியாரரவிந்தம்

அரும்புமதோ'' என்று அருணகிரியார் கூறுதல் காண்க. (கந்தரனுபூதி — 6-ம் பாடல்)

கூற்றுதைத்த, நீற்றினனைப்
போற்றுவார்கள், தோற்றினரே. 4

4. இயமனை உதைத்தருளிய திருநீற்றுத் திருமேனியனை சிவபெருமானைப் போற்றுபவர்களே உண்மையில் பிறந்தவர்களாவர். (ஏனையோர் பிறந்தும் பிறவாதவரே யாவர் என்று கொள்க)

''பெரும்பற்றப்புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்று அப்பரடிகளும் அருளியது காண்க. (6ம் திருமுறை பெரியதிருத்தாண்டகம், ஒவ்வொரு திருப்பாடலும் இவ்வாறே முடிதல் காண்க). தோன்றினரே என வர வேண்டியது தோற்றினரே என வந்தது வலித்தல் விகாரம். பிறவா நாள் என்றது பிறவிப் பயனின்றி ஒழிந்த நாளாதல் பற்றி எனக் கொள்க.

காட்டுளாடும், பாட்டுளானை
நாட்டுளாரும், தேட்டுளாரே. 5

5. காட்டில் நடமாடுதலையுடைய, அடியார்கள் பாடும் பாமாலைகளையுடைய, சிவபெருமானை உள்ளத்தில் நாட்டுதலையுடையவர்களே அருட்செல்வம், பொருட்செல்வம் ஆகிய இருவகைச் செல்வமும் உடையவர்களாவார்கள்.

காடு — சுடுகாடு; பாட்டு — பாமாலை, பெருமை, புகழ்

நாட்டுள்ளார் — இறைவனை உள்ளத்தே நிலைபெறச் செய்பவர். நாட்டுதல் — நிலைநிறுத்தல், ஸ்தாபித்தல்.

தேட்டு - செல்வம். (தேடப்படுவதால் காரணப் பெயர்) இங்கு பொருட்செல்வம், அருட்செல்வம் ஆகிய இருவகைச் செல்வமும் குறித்தது.

தக்கன்வேள்விப், பொக்கந்தீர்த்த
மிக்கதேவர், பக்கத்தோமே. 6

6. தக்கனது பொய்யான வேள்வியை அழித்த உயர்ந்த தெய்வமான சிவபெருமானது நெருங்கிய தொண்டராக நாம் உள்ளோம்.

பொக்கம் - பொய்; வேள்விப் பொக்கம் - போலியாகிய வேள்வி. ''ஆவோ ராஜானம் அத்வரஸ்ய ஹோதாரம் ருத்ரம் ஸத்ய யஜம் ரோதஸ்யோ:'' சுவர்க்கம், பூமி இவ்வெல்லா இடங்களிலும் யாகம் செய்தல் ஹவிர்ப்பாகத்தைப் பெற்றுக் கொள்ளுதல் எல்லாவற்றுக்கும் அரசர் பரமேச்வரனேயாகும். யாகத்தினுல் பூஜிக்கப் படுகிறவர் முக்காலத்திலும் உண்மை யான இவரேயாவர்) என்ற வேதவாக்கியத்துக்கு (ருக்வேதம் யஜுர்வேதம் இரண்டிலுமுள்ளது) முரணுகப் பரமேச்வரரை நிந்தித்தும் நீக்கியும் யாகம் செய்தமையால் தக்கனது வேள்வி பொக்கம் ஆயிற்று.

தீர்த்தல் - ஒழித்தல், அழித்தல் என்ற பொருளில் வந்தது.

பெண்ணாணுய, விண்ணோர்கோவை
நண்ணுதாரை, எண்ணோம்நாமே. 7

7. சக்தியும் சிவமுமாய் ஒருங்கிணைந்த தேவதேவனை நண்ணுதாரை நாம் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டோம்.

பெண் — சக்தி — அம்மை
ஆண் — சிவம் — அப்பன்

எனவே இத்திருப்பாடல் அம்மையப்பராய் ஒருங்கிணைந்த திருக்கோலத்தைக் குறித்தது.

நண்ணுதல் - கிட்டுதல், சேர்தல், அடைதல். எனவே நண்ணுதார் என்பதற்கு அவனைச் சேராதவர்கள் அதாவது அடியாரல்லாதவர்கள் என்று பொருள் கொள்க.

எண்ணுதல் - மதித்தல்.

"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்க மெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே.

என்ற அப்பரடிகளின் தனித்திருத்தாண்டகம் 10 வது திருப் பாடலும்,

"கண்ணாவா ரேனுமுனைக் கைகுவியா ராயினந்த
மண்ணாவார் நட்பை மதியேன் பராபரமே."

என்ற தாயுமானவ சுவாமிகளின் பராபரக்கண்ணி 53-ம் பாடலும் இங்கு கருதற்குரியன.

தூர்த்தன்வீரம், தீர்த்தகோவை
ஆத்தமாக, ஏத்தினோமே. 8

௮. தூர்த்தனான இராவணனது வீரத்தை அழித்த 'கோ' வாகிய சிவபிரானை நமக்கு மிகவும் நெருங்கிய கடவுளாகத் துதித்து வணங்கினோம்.

தூர்த்தன் — காமுகன், வஞ்சகன், கொடியவன். இவை அனைத்தும் இராவணனுக்குப் பொருந்துதல் காண்க. கோ —அரசன், இங்குச் சிவபிரானைக் குறித்தது.

ஆத்தம் — ஆப்தம் அதாவது நெருக்கமான உறவு, தோழமை, நம்பிக்கைகுரியதன்மை. ஆப்தநண்பன், ஆப்த வசனம் முதலிய சொல் வழக்குகள் காண்க.

பூவினானும், தாவினானும்
நாவினாலும், நோவினாரே. 9

9. தாமரைமலரை இருப்பிடமாகக் கொண்ட பிரமதேவனும், உலகைத் தாவி (ஈரடியால் மூவுலகை) அளந்தவனாகிய திருமாலும் தமது நாவாலும் (வாயாரப் புகழும் திறமை) இல்லாதவர்களானார்கள்.

நாவினாலும் என்பதில் உள்ள 'உம்'மையால் பிரமனும் திருமாலும் சிவபிரானது திருமுடியையும் திருவடியையும் கண்களால் காணும் திறமையற்றவர்களானது மட்டுமின்றி அப் பெருமானது பெருமையை வாயாரப் புகழும் ஆற்றலும் இல்லாதவர்களாயினர் என்பது பெறப்பட்டது. நோ-இன்மை, இல்லாமை. நோவினர் - இல்லாதவர். இன்மை இங்கு ஆற்றலின்மையைக்குறித்தது.

இவ்வாறின்றி, தம்மை நோக்கித் தம் செயலுக்காக இரங்கி நாவினாலும் சிறுமை கூறி துன்பப்படுவாராயினர் என்றும் கொள்ளலாம்.

மொட்டமணர், கட்டர்தேரர்
பிட்டர்சொல்லை, விட்டுளோமே. 10

10. மொட்டைத் தலையையுடைய சமணர்களும், பொய்யர்களாகிய பௌத்தர்களும் ஆகிய (வேதநெறிக்கும் சைவத் துறைக்கும்) புறம்பானவர்களின் சொற்களைக் கேளாது நாம் விலகியுள்ளோம். (புறச்சமயிகளின் சொற்களை நாம் கேட்க மாட்டோம் என்பது கருத்து).

மொட்டமணர் - மொட்டையமணர், தலைமயிரை ஒவ்வொன்றாகப் பறித்து எடுத்துத் தலை மொட்டையானவர்கள் அல்லது மோட்டமணர் என்பதன் குறுக்கமாகக் கொள்ளலுமாம். இதற்கு மிக இறுமாப்பு அல்லது தற்பெருமையுடைய சமணர்கள் என்று பொருள் கொள்க. கட்டு - பொய், கட்டர்-பொய்யர், பிட்டர் - 'பிரஷ்டர்' என்ற வடமொழிச் சொல்லின் திரிபு. தள்ளப்பட்டவர், விலக்கப்பட்டவர் என்பது பொருள். வேதநெறிக்கும் சைவத்துறைக்கும் புறம்பாகையால் நம்மால் விலக்கப்பட்டவர்,

அந்தண்காழிப், பந்தன்சொல்லைச்
சிந்தைசெய்வோர், உய்ந்துளோரே. 11

திருச்சிற்றம்பலம்

11. அழகியதும் குளிர்ச்சியுடையதுமான சீகாழியைச் சேர்ந்த திருஞானசம்பந்தனது சொற்களாகிய திருப்பாடல்களைச் சிந்தை செய்பவர்களே நற்கதி பெற்றவராவார்.

பந்தன் - சம்பந்தன் என்ற பெயரின் குறுக்கம்.

சிந்தை செய்தல் - பாடல்களின் கருத்தைச் சிந்தித்தலும் பாடல்களைப் பயிலலுமாம். அம்மாதிரி செய்பவர்களே நல் வாழ்வு பெற்றவராவர் என்பது கருத்து.

சிவம்

நெஞ்சே நினை!

பழியொன்றும் ஓராதே பாயிடுக்கி வாளா
கழியும் சமண்கையர் தம்மை — அழியத்
துரந்தரங்கச் செற்ருன் சுரும்பரற்றும் பாதம்
நிரந்தரம்போய் நெஞ்சே நினை.

—ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை - 8
(நம்பியாண்டார் நம்பிகளருளியது : 11-ம் திருமுறை)

தமக்குப் பழி வருமே என்பதொன்றையும் ஆராய்ந்து தெளியாமல் பாயினையிடுக்கித் தம் வாழ்நாளை வீணே கழித்த சமணர்களை அழியும்படியும் அவர்கள் வருந்தும்படியும் செற்ற வனாகிய திருஞானசம்பந்தரது வண்டுகள் அரற்றும் திருவடிகளை எப்பொழுதும் நெஞ்சமே! நீ நினைப்பாயாக, என்பது இப் பாடல் கூறும் செய்தியாம்.

சிவம்.

உ
சிவமயம்
ஸ்ரீமஹாதேவஜயம்

திருமொழிமாற்று

பதிகவரலாறு: சீகாழியில் பாடியருளிய சித்திரகவிகளில் மொழிமாற்று என்னும் இப்பதிகமும் ஒன்ருகும். சொற்களை பொருளுக்கு ஏற்ப முன் பின்ருக மாற்றிக்கூட்டிப் பொருள் கொள்ள வைக்கும் மிறைக்கவி மொழிமாற்று எனப்படும். உதாரணம்: 'காடதணிகலம், காரரவம் பதி' என்பதை 'காடது பதி, காரரவம் அணிகலம்' என்றிவ்வாறு மொழிகளை மாற்றுவது.

இப்பதிகத்திலும்சீகாழியின் பன்னிரண்டு திருப்பெயர்கள் போற்றப்பட்டுள்ளது கண்டு கொள்க.

பண்—வியாழக்குறிஞ்சி] திருச்சிற்றம்பலம் [1–ம் திருமுறை

காட தணிகலங் காரர வம்பதி காலதனில்
தோட தணிகுவர் சுந்தரக் காதினில் தூச்சிலம்பர்
வேட தணிகுவர் விசயற் குருவம் வில்லுங் கொடுப்பர்
பீட தணிமணி மாடப் பிரம புரத்தரரே. 1

பதிகப்பொழிப்புரை: 1 மிகுந்த புகழுடையவையும் அழகியவையும் செம்மாணிக்கக் கற்கள் பதித்தவையுமான மாடங்களையுடைய திருப்பிரமபுரத்து அரனுர் காட்டினைப் பதியாகக் கொள்வர்; கரியபாம்புகளை அணிகலன்களாகப் பூண்பர்; அழகிய காதில் தோடு அணிவர்; காலில் தூயசிலம்பினை உடையவர்; வேட உருவத்தைத் தாங்குவர்; அருச்சுனனுக்குப் பாசுபதம் என்னும் அஸ்திரத்தைத் கொடுப்பர். (இத்தகைய பெருமைகள் வாய்ந்தவர் என்பதாம்).

காடதுபதி, காரரவம் அணிகலம், காலதனில் தூச் சிலம்பர், சுந்தரக் காதினில் தோடதணிகுவர், வேடஉருவமது அணிவர், விசயற்கு வில்லுங் கொடுப்பர் எனமொழிகளை மாற்றிக் கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது.

பீடு —மிகு புகழ்; மாடம் — இங்கு மாடங்களையுடைய மாளிகைகளைக் குறித்தது.

கற்றைச் சடையது கங்கண முன்கையில் திங்கள்கங்கை
பற்றித்து முப்புரம் பார்படைத் தோன்தலை சுட்டதுபண்(டு)
எற்றித்துப் பாம்பை யணிந்தது கூற்றை யெழில்விளங்கும்
வெற்றிச் சிலைமதில் வேணு புரத்தெங்கள் வேதியரே. 2

2. அழகு விளங்குவதும் வெற்றியுடையதும், மலை போன்றதுமான மதில்களையுடைய திருவேணுபுரத்துக் கோயில் கொண்ட எங்கள் வேதியராகிய சிவபெருமானின் கற்றை யாக அமைந்த சடையில் உள்ளது திங்களும் கங்கையும்; அவர் முன்கையில் உள்ளது கங்கணம்; கையிலே பற்றியது உலகைப் படைக்கும் தொழிலையுடையவனான பிரம்ம தேவனின் தலை; அவர் எரித்தது மூன்று புரங்கள்; முன்பு உதைத்தது கூற்றினை; மாலையாக அணிந்து கொண்டது பாம்பினையாகும். (இத்தகைய பெருமைகள் வாய்ந்தவர் என்பதாம். ஒவ்வொருபாடலுக்கும் இவ்வாறே கொள்க).

கற்றைச் சடையது திங்கள் கங்கை, முன்கையிற் கங்கணம், பற்றித்து பார்படைத்தோன்தலை, முப்புரம் சுட்டது, பண்டு கூற்றை எற்றித்து, பாம்பை அணிந்தது எனப் பொருளின் வழியே சொற்களைப் பிரித்துக் கூட்டப்பட்டது.

பற்றித்து - பற்றியது; எற்றித்து-எற்றியது (உதைத்தது)

கூவிளங் கையது பேரி சடைமுடிக் கூட்டத்தது
தூவிளங் கும்பொடிப் பூண்டது பூசிற்றுத் துத்திநாகம்
ஏவிளங் குந்துத லாளையும் பாகம் உரித்தனரின்
பூவிளஞ் சோலைப் புகலியுள் மேவிய புண்ணியரே. 3

3. இனிமையான இளம்பூஞ்சோலைகள் விளங்கும் திருப்புகலியுள் விரும்பியெழுந்தருளிய புண்ணியப் பொருளானவராகிய சிவபிரானார் தமது சடைமுடிக் கூட்டத்தில் கொண்டது வில்வ இதழ்கள்; கையிலே கொண்டது உடுக்கை; திருமேனியில் தூய்மையின் சின்னமாக விளங்கும் திருநீற்றைப் பூசியுள்ளார்; படப் பொறியையுடைய பாம்பினை அணிகலனாகப் பூண்டுள்ளார்; அம்பு போல் கூர்மையான கண்களையுடைய நெற்றியினையுடைய உமாதேவியாரை ஒரு பாகமாகக் கொண்டனர்; யானையை உரித்தனர்.

கூவிளம் சடைமுடிக் கூட்டத்தது, பேரி கையது, தூவிளங்கும் பொடி பூசிற்று, பூண்டது துத்தி, ஏ விளங்கும் நுதலாளையும் பாகம், நாகம் உரித்தனர் எனக் கூட்டிப் பொருள் காணப்பட்டது.

கூவிளம் - வில்வம்; பேரி - உடுக்கை; தூ - தூய்மை; துத்தி - பாம்பின் படம், இங்கு ஆகுபெயராய் அதனையுடைய பாம்பைக் குறித்தது. (சினையாகுபெயர்) ஏ - அம்பு, இங்கு அம்பு போன்ற கூர்மையான பார்வையுடைய கண்ணைக் குறித்தது. நாகம் - யானை.

உரித்தது பாம்பை உடல்மிசை இட்டதோர் ஒண்களிற்றை
எரித்ததொ ராமையை யின்புறப் பூண்டது முப்புரத்தைச்
செருத்தது சூலத்தை யேந்திற்றுத் தக்கனை வேள்விபன்னூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குரு வில்வீற் றிருந்தவரே. 4

4. பல நூல்களையும் விரித்து அவற்றின் மெய்ப்பொருளுணர்ந்தவர்கள் வாழ்கின்ற திருவெங்குருவில் பெருமையுடன் மகிழ்ந்திருக்கும் சிவபிரானார் ஒரு ஒண்களிற்றை உரித்தனர்; பாம்பினை உடலின் மேல் அணியாக இட்டனர்; முப்புரத்தை எரித்தனர்; ஒரு ஆமையின் ஓட்டை இன்புறப் பூண்டனர்; தக்ஷனது யாகத்தை அழித்தனர்; சூலத்தைக் கையில் ஏந்தினர்.

உரித்தது ஒண் களிற்றை. பாம்பை உடல் மிசை இட்டது, எரித்தது முப்புரத்தை, ஒராமையை இன்புறப் பூண்டது, செருத்தது தக்கன் வேள்வியை, சூலத்தை ஏந்திற்று என்றிவ்வாருக மொழிகளை மாற்றிப் பொருள் கொள்ளப் பட்டது.

ஒண்களிறு - ஒள்ளிய யானை. ஒண்மை இங்கு வலிமை யைக் குறித்தது.

ஒரு ஆமை - ஆமை இங்கு அதன் ஓட்டைக் குறித்தது. 'ஒரு' என்றது திருமாலின் கூர்மாவதாரத்தின் ஓட்டை என்ப தைக் குறித்தது. (கூர்மம் - ஆமை).

இன்புறப் பூண்டது - செருக்கடங்கிய திருமாலின் மனம் மகிழுமாறு அந்த ஓட்டை இறைவர் பூண்டார் எனக் கொள்க. ஆமை உருவம் நீங்கிய திருமால் தனது உண்மை உருவுடன் சிவனைத் துதித்தனர் என்க. இவ்வரலாறு கந்தபுராணம், தட்ச காண்டம், ததீசி உத்தரப் படலத்தில் காண்க.

தக்கனை வேள்வி - தக்கன் வேள்வியை என 'ஐ' உருபை மாற்றிப் பொருள் கொள்க.

செருத்தது - அழித்தது. செரு - பொர், எனவே போரிட்டு அழித்தது எனப் பொருள் கொண்டோம்.

பன்னூல் விரித்தவர் - வேதம், வேதாங்கம், புராணம், இதிஹாஸம் போன்ற பல நூல்களையும் விரிவாக் கற்று அவற் றின் மெய்ப் பொருள் சிவனே எனத் தெளிந்தவர். அவ்வாறு தாம் உணர்ந்ததை உலகினர்க்கு விரித்து உரைத்தலைச் செய்பவர் எனவும் கொள்க.

கொட்டுவ ரக்கரை யார்ப்பது தக்கை குறுந்தாளன
விட்டுவர் பூதங் கலப்பில ரின்புக ழென்புலவின்
மட்டுவ ருந்தழல் சூடுவர் மத்தமு மேந்துவர்வான்
தொட்டுவ ருங்கொடித் தோணி புரத்துறை சுந்தரரே.

5. வான்தொட்டு வரும் கொடிகளையுடைய திருத்தோணி புரத்து உறைகின்ற அழகராகிய சிவபிரான் தக்கை என்னும் வாத்தியத்தைக் கொட்டுவர். அவர் இடையில் கட்டிக் கொள் வது அக்கு மாலையாகும். அவரைச் சூழ்ந்து நிற்கும் பூதங்கள் குறிய கால்களையுடையனவாகும். புலியைக் கொல்லுவர்; இனியப் புகழைத் தாம் கலத்தல் இல்லாதவர், உலகத்தை அழிக்கும் அளவுக்கு வரும் காலாக்கினியை ஏந்துவர், ஊமத்தம்பூவினைச் சூடுவர்.

கொட்டுவர் தக்கை, அக்கரை ஆர்ப்பது, குறுந்தாளன பூதம், விட்டுவர் (வீட்டுவர் என்பது குறுகியது) என்பு, கலப் பிலர் இன்புகழ், உலவின் மட்டு வருந்தழல் ஏந்துவர், சூடுவர் மத்தம் என்றிவ்வாறு கூட்டுக.

தக்கை - ஒரு வகை வாத்தியம். அக்கு - சங்குமணி, எலும்பினால் ஆன மணி மாலையுமாம்.

வீட்டுவர் – வீட்டுதல் என்பது கொல்லுதல் என்ற பொருளைத் தரும். என்பு வீட்டுவர் எனக்கூட்டி புலியைக் கொல்பவர் என்றோம். வீட்டுவர் என்பது விட்டுவர் எனக் குறுக்கம் பெற்றது.

என்பு–இச்சொல்லுக்கு புல் என்ற பொருள் உள்ளது. புல் என்ற சொல் புலி என்ற பொருளையும் தரும். எனவே என்பு வீட்டுவர் என்பதற்குப் புலியைக் கொல்லுவர் என்று பொருள் கூறினோம். புல் என்ற சொற்குப் புலி என்ற பொருள் உளதா தலை ''புல் புலி புணர்ச்சி புன்மை, புதல், பனை, அனுட நாளாம்'' என்ற சூடாமணி நிகண்டு லகரவெதுகை 10ம் பாடல் பகுதியால் அறிக. தாருகவனத்து இருடியர் வேள்வித்தீயினின்றும் இறைவர் மீது ஏவிய புலியை இறைவர் கொன்று அதன் தோலை உடையாகக் கொண்டனர் என்பது கந்த புராணம், தட்சகாண்டம், ததீசியுத்தரப்படலம் கூறும் வரலாறு.

கலப்பிலர் இன்புகழ் — இறைவர் வேண்டுதல் வேண்டாமையில்லாதவர் ஆகையால் அவர் புகழைக் கலப்பது இல்லை என்றதாம். ஆயின் புகழ் சென்று அவரைக் கலக்கும் என்று கொள்க.

உலத்தல் — குறைதல், சாதல், அழிதல். எனவே உலவின் மட்டு வருந்தழல் என்பதற்கு அழிக்குமளவுக்கு வரும் தீ எனக் கொண்டோம். மட்டு — அளவு; ''அங்கியிலே சங்காரம்'' என்ற உண்மைவிளக்கம் 35 வது பாடற்பகுதியையும் இங்குக் கருதுக.

வான் தொட்டு வருங்கொடி என்பது வானளவு உயர்ந்த கொடியை உணர்த்தியது.

சாத்துவர் பாசந் தடக்கையி லேந்துவர் கோவணந்தங்
கூத்தவர் கச்சுக் குலவிநின் ருடுவர் கொக்கிறகும்
பேர்த்தவர் பல்படை பேயவை சூடுவர் பேரெழிலார்
பூத்தவர் கைதொழு பூந்தராய் மேவிய புண்ணியரே. 6

6. தவமுடைய நல்லோர்கள் பூக்களைக் கொண்டு கைதொழும் பேரெழில் பொருந்திய திருபூந்தராய் மேவிய புண்ணியராம் சிவபெருமானர் கோவணத்தை (அரையில்) சாத்துவர், தமது அகன்ற திருக்கரத்தில் பாசத்தினை ஏந்துவர், தமது திருநடனத்தையுடையவர், அரையில் கச்சு விளங்க நின்று ஆடுவர், கொக்கின் இறகினையும் சூடுவர், பலபடைகளாக விளங்கும் பேய்க்கணங்களோடு அடி பெயர்த்து ஆடல் செய்வர்.

சாத்துவர் கோவணம், பாசந்தடக்கையில் ஏந்துவர், தங்கூத்தவர், கச்சுக்குலவி நின்ருடுவர், கொக்கிறகும் சூடுவர், பேர்த்தவர் பல்படை பேயவை எனக் கூட்டி பொருள் காணப்பட்டது.

கொக்கிறகு — குரண்டாசுரனின் கொக்கு உருவத்தை அழித்து அதன் இறகை அணிந்தது. கொக்கிறகு என்பது கொக்கு மந்தாரை மலரையும் குறிக்கும்.

பேர்த்தவர் — அடி பெயர்த்து ஆடுபவர். பேய்களுடன் ஆடுதலால் இறைவருக்குப் பேயோடாடி என்ற பெயர் உன்மையும் கருதுக.

போர்த்தவர் என்ற பாடம் பழைய பிரதிகளில் உள்ளது. இப்பாடத்தினைக் கொண்டால் பலவகையான கணங்களும் பேய்களும் சூழ உள்ளனர் என்று பொருள் கொள்க.

பேரெழிலார் — பேர் எழில் ஆர் எனப் பிரித்துப் பேரழகு பொருந்திய எனப் பொருள் கொண்டு பூந்தராய்த் தலத்துக்கு அடையாகக் கொள்ளப் பட்டது. அல்லது பேரெழிலார் புண்ணியர் என்று இறைவருக்கும் அடை மொழியாக்கலாம். பேர் எழிலார் எனப் பிரித்து பேரெழிலையுடைய இறைவர் என்று பெயராகவே கொள்ளலாம். முன் பாடலில் சுந்தரரே என்று வந்துள்ளது காண்க.

காலது கங்கை கற்றைச் சடையுள்ளாற் கழல் சிலம்பு
மாலது ஏந்தல் மழுவது பாகம் வளர்கொழுங்கோட் (டு)
ஆலது ஊர்வர் அடலேற் றிருப்பர் அணிமணி நீர்ச்
சேலது கண்ணியொர் பங்கர் சிரபுர மேயவரே. 7

7. அழகிய நீரில் வரிசையாகத் துள்ளும் மீன் போன்ற கண்களையுடைய உமாதேவியாரை ஓர் பங்கிலே உடையவரான திருச்சிரபுரம் மேவிய சிவபிரானுருடைய காலில் உள்ளவை கழலும் சிலம்பும்; அவருடைய கற்றைச்சடையினுள்ளாக இருப்பது கங்கை: அவர் ஏந்துவது மழு; அவருடைய ஒரு பாகம் திருமாலுடையதாகும்; வளர்கின்ற கொழுமையான கிளைகளையுடைய ஆலமரத்தின் நீழலில் வீற்றிருப்பர்; வலிமையுடைய ஏற்றினை ஊர்வர்,

காலது கழல் சிலம்பு, கங்கை கற்றைச்சடை உள்ளால், மாலது பாகம், மழுவது ஏந்தல், வளர் கொழுங்கோட்டு ஆலது இருப்பர், அடல் ஏறு ஊர்வர், என மொழிகளை மாற்றிப் பொருள் கொள்ளப்பட்டது.

கழல்— ஆடவர் கொடையாலும் வீரத்தாலும் அணியும் பூண். சிலம்பு -பெண்களின் காலணி, எனவே வலதுகாலில் வீரக்கழலும், இடதுகாலில் சிலம்பும் அணிந்த அம்மையப்ப ராய் மருவுங்காட்சியையுங் குறித்ததாகக்கொள்க.

கற்றைச்சடை—சடையின் தொகுதி

கொழுங்கோடு—செழுமையுடைய மரக்கிளை; கோடு என்பதற்கு மலையினுச்சி எனவுங்கொண்டு திருக்கயிலை மலையுச்சியில் உள்ள கொழுவிய ஆலமரத்து நிழலில் இருப்பர் என்றுங் கொள்ளலாம்.

ஏறு — எருது; ஊர்தல் — வாகனமாகக் கொள்ளுதல்

சேல் — மீன்; கன்னி —கண்ணையுடைய உமாதேவியார்

நெருப்புறு வெள்விடை மேனிய ரேறுவர் நெற்றியின்கண்
மருப்புரு வன்கண்ணர் தாதையைக் காட்டுவர் மாமுருகன்
விருப்புறு பாம்புக்கு மெய்த்தந்தை யார்விறல் மாதவர்வாழ்
பொருப்புறு மாளிகைத் தென்புற வத்தணி புண்ணியரே. 8

8. பெருமையுடைய மாதவர்கள் வாழ்கின்றதும் மலை போன்ற மாளிகைகளையுடையதுமான அழகிய திருப்புறவத்து அணியாக எழுந்தருளியிருக்கும் சிவபிரானுர் தழல்வண்ணம் பொருந்திய திருமேனியர் ஆவர்; வெள்ளை எருதின்மீது ஏறுவர்; நெற்றியில் ஒரு கண்ணுடையவர்; யானைமுகப்பெருமானின் தந்தை; அழகிய முருகப்பெருமானுடைய விருப்புறு தந்தையார் ஆவர்; பாம்புக்குத் தங்குமிடமாகத் தமது திருமேனியைக் காட்டுவர்.

நெருப்புறு மேனியர், வெள்விடையேறுவர், நெற்றியின் கண் கண்ணர், மருப்புருவன் தாதை, மாமுருகன் விருப்புறு

தந்தையார், பாம்புக்கு மெய்யைக்காட்டுவர் என்றிவ்வாறு பிரித்துப் பொருள் கொள்ளப்பட்டது.

நெருப்புறுமேனியர் — நெருப்புப்போன்ற நிறமுடையவர், தீவண்ணர் என்று கொள்வதல்லாமல் நெருப்பைத் தமது திருமேனியாகக் கொண்டவர் எனலுமாம். இறைவனாது எட்டுத் திருமூர்த்தங்களுள் தீ ஒன்றாகும். திருமுறைப் பாடல்கள் பலவற்றில் எட்டு மூர்த்தங்கள் கூறப்பட்டுள்ளவை வருமிடங்களில் கண்டு கொள்க. உதாரணமாக ஒரு பாடலைத் தருகிறோம். இதில் முதல் இரண்டு அடிகள் எட்டு மூர்த்தங்களைக் குறிப்பது அறிக.

> நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
> புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
> உலகேழெனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே
> பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ.
>
> —திருவாசகம், திருத்தோணோக்கம், 5.

மருப்பு—தந்தம்; மருப்புருவன்—தந்தத்தையுடைய யானை உருவுடைய விநாயகப்பெருமான்.

பாம்புக்கு மெய்யைக் காட்டுவர் — பாம்புகள் அணிகலன்களாகத் தம் திருமேனியின் மிசை தங்க இடந்தந்தவர் என்றதாம். கருடனுக்கு அஞ்சிய பாம்புகள் இறைவனாரைச் சரணடைய, அவைகட்குப் புகலிடமாகத் தம் திருமேனியைக் காட்டியவர் என்பதன் குறிப்புமாம். மருப்புருவன்தாதையை என்பதில் உள்ள 'ஐ' உருபைப் பிரித்து 'மெய்' என்பதோடு கூட்டி மெய்யைக் காட்டுவர் எனக்கொள்க.

விறல் — பெருமை; வலிமை என்னும் பொருளும் இயைபுடையதே, தவவலிமை எனக்கொள்க.

மாதவர் — பெரிய தவத்தினையுடையவர், முனிவர்

பொறுப்புறு மாளிகை — மலை போன்றுயர்ந்த மாளிகை

இலங்கைத் தலைவனை ஏந்திற் றிறுத்த திரலையின்னாள்
கலங்கிய கூற்றுயிர் பெற்றது மாணி குமைபெற்றது
கலங்கிளர் மொந்தையி னாடுவர் கொட்டுவர் காட்டகத்துச்
சலங்கிளர் வாழ்வயற் சண்பையுள் மேவிய தத்துவரே. 9

9. நீரின் பெருக்கத்தால் வளமார்ந்த வயல்களையுடைய திருச்சண்பையுள் விரும்பியெழுந்தருளிய மெய்ப்பொருளாகிய சிவபிரானார் இலங்கைத் தலைவனாகிய இராவணனை இறுத்தனர். அவர் கையினில் ஏந்தியது மான். (மார்க்கண்டேயரின் உயிரைக் கவரமுடியாது) கலங்கிய இயமனை அழித்தனர். இல் நாள் மார்க்கண்டேயர் எந்நாளும் இறவா வண்ணம் உயிர் பெற்றனர். அப்பெருமான் இனிய ஓசை விளங்கும் மொந்தை என்னும் வாத்தியத்தை இசைப்பர்; காட்டகத்து நடனம் ஆடுவர்.

இலங்கைத் தலைவனை இறுத்தது, இரலை ஏந்திற்று; கலங்கிய கூற்று குமை பெற்றது, இன்னாள் மாணி உயிர் பெற்றது, கலங்கிளர் மொந்தை கொட்டுவர், காட்டகத்து ஆடுவர் என்றிவ்வாறு கூட்டுக.

இறுத்தல் — ஒடித்தல், முடித்தல், முரித்தல், அழித்தல், இராவணனது சிரங்களையும் தோள்களையும் நெரித்ததைக் குறித்தது.

இரலை—மான்; இல்நாள் மாணி - 16 வயதுடன் வாழ்நாள் முடிந்ததாகக் கருதப்பட்ட மார்க்கண்டேயர்.

கலங்கிளர்—கலம் என்னும் சொல் யாழ் என்ற பொருளும் உடையதால் இங்கு அதன் இனிய ஓசையைக் குறித்தது. அல்லது கலங்கிளர் மொந்தை என்பதற்கு மண்பாண்டத்தின் வாய் மூடப்பட்ட ஒருகண் பறை என்ற வாத்தியம் எனவும் பொருள் கொள்ளலாம். அதாவது மண்பாண்டத்தின் வாய் முழுவதும் தோலால் மூடப்பட்டு விளங்குகின்ற சிறு தம்பட்டம்

அதன் மேல்புறம் ஒரு மெல்லிய குச்சியினால் பன்முறை அடிக்கப்பட்ட காரணத்தால் கண்ணின் கருமணி போல நடுவில் வட்டமாகக் கருப்பாக இருப்பது.

கொட்டுதல் — வாத்தியத்தை இசைத்தல் (ஒலிஉண்டாக்குதல்)

சலங்கிளர் வாழ்வயல் — வாழ்வு வளத்தைக் குறிப்பதால் வளமார்ந்த வயல் எனக் கொள்ளப்பட்டது. அல்லது நீர் நிரம்பி நிலைபெற்ற வயல்கள் எனினும் ஆம்.

அடியிணை கண்டிலன் தாமரை யோன்மால் முடிகண்டிலன்
கொடியணி யும்புலி யேறுகந் தேறுவர் தோலுடுப்பர்
பிடியணி யுந்நடை யாள்வெற் பிருப்பதோர் கூறுடையர்
கடியணி யும்பொழில் காழியுள் மேய கறைக்கண்டரே. 10

10. நறுமணத்தை அணியாகக் கொண்ட பொழில்களையுடைய திருக்காழி (சீகாழி) யில் விரும்பியெழுந்தருளியுள்ள கறுப்புக்கறையுடைய கழுத்தினையுடைய (நீலகண்டப்பெருமான்) சிவபெருமானது இருதிருவடிகளையும் திருமால் கண்டானில்லை; பிரமதேவன் திருமுடியைக்கண்டானில்லை. கொடியை அலங்கரிக்கும் எருதின் மீது பெருமான் விருப்புடன் ஏறுவர். புலியின் தோலை உடுப்பர், பெண்யானையின் நடையையுடைய உமாதேவியாரை ஒரு கூருகத் திருமேனியில் உடையவர். அவர் இருப்பது திருக்கயிலாய மலையாகும்.

அடியிணை கண்டிலன்மால், தாமரையோன் முடிகண்டிலன் கொடியணியும் ஏறு உகந்தேறுவர், புலித்தோல் உடுப்பர், பிடியணியும் நடையாள் ஓர் கூறுடையர், வெற்பு இருப்பது எனக் கூட்டிக் கொள்க.

பிடியணியும் நடை — பிடி தனக்கு அணியாகக் கொண்ட நடையாள் என்றும் கொள்ளலாம்.

கடியணியும் பொழில் — மணம்அணியும்பொழில் அல்லது புதுமை வாய்ந்த பொழில்.

கறைக்கண்டன் — விடத்திஞல் கறை (கறுப்பு) உண்டாகிய கழுத்தையுடையவன். கறையென்ற சொல்லுக்கு நஞ்சு என்ற பொருளும் உண்மையால் நஞ்சு தங்கிய கண்டன் எனலுமாம்.

கையது வெண்குழை காதது சூலம் அமணர்புத்தர்
எய்துவர் தம்மை யடியவ ரெய்தாரொ ரேனக்கொம்பு
மெய்திகழ் கோவணம் பூண்ப துடுப்பது மேதகைய
கொய்தலர் பூம்பொழிற் கொச்சையுள் மேவிய கொற்றவரே.

11. கொய்து அலரும் பூக்களையுடைய பொழில்களையுடைய பெருமை வாய்ந்த திருக்கொச்சைவயத்துள் மேவிய கொற்றவராகிய சிவபெருமானது திருக்கையிலே உள்ளது சூலம்; அவரது திருக்காதினிடமாக உள்ளது வெண்குழை; சமணர் புத்தர் ஆகிய புறப்புறச்சமயிகள் அடைய முடியாதவர்; அடியவர் தம்மை அடைவர்; ஒரு பன்றியின் கொம்பை மெய்யிலே திகழுமாறு பூண்பர்; அவர் உடுப்பது கோவணம் ஆகும்.

கையதுசூலம், வெண்குழை காதது, அமணர் புத்தர் எய்தார், அடியவர் தம்மை எய்துவர், ஒரேனக் கொம்பு மெய்திகழ் பூண்பது, கோவணம் உடுப்பது என்றிவ்வாறு மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க.

வெண்குழை — வெண்சங்கிஞல் ஆன குழை. குழை — ஆண்களின் காதாபரணம்.

ஒரு ஏனம் — திருமாலின் வராகாவதாரத்தைக் குறித்தது. ஏனக்கொம்பு பூண்டருளிய வரலாறு கந்தபுராணம், தட்சகாண்டம், ததீசியுத்தரப்படலத்தில் கண்டு கொள்க.

கொய்தலர் பூம்பொழில் — கொய்தபின் அலர்கின்ற பூக்களைத்தரும் பொழில் என்பதாம். இறைவனார் பூசைக்கு மலர் எடுத்தல் என்பது மலரும் பருவத்திலுள்ளவற்றைக் கொய்தலாகும். மலர்ந்த பூக்கள் வண்டின் எச்சில் பட்டதென்று அவற்றை எடுக்க மாட்டார்கள். கொய்தபின் மலரும் நிலையில் உள்ளவற்றையே எடுப்பர்.

கல்லுயர் கழுமல இஞ்சியுள் மேவிய கடவுள்தன்னை
நல்லுரை ஞானசம் பந்தன் ஞானத் தமிழ்நன்குணரச்
சொல்லிடல் கேட்டல் வல்லோர்தொல்லை வானவர்
தங்களொடும்
செல்குவர் சீரரு ளாற்பெற லாஞ்சிவ லோகமதே' 12

12. மலையைப் போன்ற உயர்ந்த மதில்களையுடைய திருக்கழுமலத்தினுள் விருப்பத்துடன் பொருந்திய கடவுளாகிய சிவபிரானை, திருஞானசம்பந்தனது ஞானத்தமிழ் நல்லுரைகளை நனகு உணருமாறு சொல்லவும் கேட்டலும் வல்லவர்கள் இறைவரது திருவருளால் மட்டுமே பெறக் கூடிய சிவலோகத்துக்குத் தொல்லை வானவர் தங்களோடு செல்குவர்.

கல் — மலை; இஞ்சி — மதில்; நல்லுரை — நல்லஉரை, நன்மையைத்தரும் உரை.

ஞானத்தமிழ் — இறைவரது சொரூப தடத்த இலக்கணங்களையும், அவரையடையும் சாதனங்களையும் அறிவித்தலால் ஞானத்தமிழாயிற்று. இதுபற்றியே:

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோற்ரேணி கண்டீர் — நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.

என்று நம்பியாண்டார் நம்பிகள் கூறுதலுங் காண்க,

நன்குணர்தல் — பொருளை நன்றாக அறிதல். பொருளை நன்குணர்ந்து பிறரும் உணருமாறு சொல்லுதல் வல்லவர்களும், சொன்னவற்றை உளங்கொளக் கேட்டல் வல்லவர்களும் ஆகியோரே சொல்லிடல் கேட்டல் வல்லோர் ஆவர். இவர்களே சிவலோகம் செல்வதற்கு உரியவர் ஆவர் என்பதாம். சீர் அருளால் பெறல் ஆம் சிவலோகம் — இறைவன் திருவருளால் மட்டுமே பெறக் கடவதாகிய சிவலோகம்.

தொல்லை வானவர் தங்களோடும் செல்குவர் — பிரமன், விட்டுணு, இந்திரன் மற்றும் தேவர் எல்லாம் எதிர்கொண்டழைக்க அவர்களுடன் சிவலோகம் சென்று அடைவர் என்று கூறியருளியதாம். ''இந்திரன், மால், பிரமன்னெழிலார் மிகு தேவரெல்லாம் வந்தெதிர் கொள்ள மத்தயானை அருள் புரிந்து ...'' சுந்தரர் பெருமானைத் திருக்கயிலைக்குப் பிரானார் அழைத்துக் கொண்டதையும் இங்குக் கருத்தில் கொள்க.

சிவம்

சிவஞான பூஜா மலர்: 1984 — 85

சென்ற மூன்று ஆண்டுகள் போலவே இவ்வாண்டும் சிவபரத்துவக் கட்டுரைகளைத் தாங்கி சிவஞான பூஜா மலர் வெளிவரவிருக்கிறது. வடமொழி, தென்தமிழ் தோத்திரங்களும் உரையுடன் பிரசுரிக்கப்படும். சென்ற மூன்று ஆண்டு மலர்களை ஆதரித்தது போல இவ்வாண்டு மலருக்கும் தங்களது நன்கொடைகளை வாரி வழங்கியருளுமாறு கோருகிறேன்.

இங்ஙனம்

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா
5, டெலிபோஸ்ட் காலனி, குறுக்குத் தெரு,
மேலமாம்பலம், சென்னை - 600033

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

திருஈரடி

பதிகவரலாறு : இத்திருப்பதிகமும் சீகாழியின் பன்னிரு திருப்பெயர்களையும் போற்றியருளியது ஆகும். இரண்டு அடிகளான் இயன்ற பாடல்களைக் கொண்டமையால் ஈரடி என்னும் பெயர்த்தாயிற்று. சீகாழித் தலத்தைப் பரவும் அடியார்களுடைய பெருமையைப் போற்றியருளியது.

பண் - பழம்பஞ்சுரம்] திருச்சிற்றம்பலம் [3–ம் திருமுறை

வரமதேகொளா உரமதேசெயும்
புரமெரித்தவன் பிரமநற்புரத்(து)
அரனுமமே பரவுவார்கள்சீர்
விரவுநீள் புவியே. 1

பதிகப்பொழிப்புரை:— 1· (தவஞ்செய்து) பெற்ற வரத்தினைக்கொண்டு அதனால் உண்டான வலிமையால் உலகிற்குத் தீங்கையே செய்த அசுரர்களின் முப்புரங்களையும் எரித்தவனும் திருப்பிரமபுரம் என்னும் நன்னகரில் எழுந்தருளியிருப்பவனுமாகிய சிவபெருமானின் புகழையே துதித்துப்போற்றும் அடியார்களின் பெருமை இவ்வகன்ற பூமி முழுவதும் பரவும்.

வரமதே கொளா — வரத்தினைக்கொண்டு; 'கொளா' என்பது 'கொண்டு' என்ற பொருள் தரும். 'செய்யா' என்ற வாய்பாட்டு வினையெச்சம் என்பர் இலக்கண நூலார். (செய்யா - செய்து)

வித்யுன்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்ற மூன்று அசுரர்கள் பிரம்மதேவரைக் குறித்து மிகவும் கடுமையான

தவஞ்செய்தார்கள். அவர்கள் முன் தோன்றிய பிரம்மதேவ ரிடம் தங்களுக்கு நித்தியத்துவத்தை (என்றும் அழியாது நிலைபெற்றிருக்கும் தன்மை) வரமாக வேண்டினர். பிரம தேவனே, தனக்கே நித்தியத்துவமில்லையாகையால், தான் எப்படிப் பிறருக்கு அதனை வழங்க முடியும் எனத்தன் இயலா மையை வெளியிட்டார். பின்னர் மூவரும் தங்களுக்குள் ஆலோசித்துக் கொண்டு நித்தியத்துவத்துக்கு நிகரான மற்றொரு வரத்தைக்கேட்டனர். "ஓ பிரம்மதேவ! மூன்று சகோ தரர்களாகிய எங்களுக்கு முறையே பூமி, ஸ்வர்க்கம், அந்தரி க்ஷம் (பூமிக்கும் ஸ்வர்க்கத்துக்கும் இடைப்பட்டபகுதி) இவை களில் தங்கம், வெள்ளி, இரும்பு இவைகளாலான மூன்று பட்டணங்கள் உண்டாகி அவைகள் ஆயிரம் வருஷங்களுக்குப் பின்பு ஒன்றேடொன்று சேரவேண்டும், அப்பொழுது எவர் தன்னைத்தவிர வேறொன்றில்லாத அரும்பொருள் என்று வேதங்களில் கூறப்படுகின்றாரோ அப்படிப்பட்டவரால் ஒரே க்ஷணத்தில் ஒரே பாணத்தினால் இந்த முப்புரங்களும் ஸம் ஹரிக்கப் பட்டால் அப்பொழுதுதான் எங்களுக்கு மரண முண்டாக வேண்டும். எங்களுக்கு அளவற்ற ஐச்வர்யங்களும் நிகரற்ற பராக்கிரமமும், அப்பட்டணங்களில் எல்லா அசுரர்களும் இருக்க வசதிகளும் உண்டாகவேண்டும். மேலும் எங்களுடைய மூன்று பட்டணங்களுக்கும் இஷ்டப்படி ஸஞ் சரிக்கும்படியான தன்மையும் உண்டாக வேண்டும்" என்று இவ்வாறாக அவர்கள் கேட்ட வரத்தினையெல்லாம் பிரம்ம தேவன் கொடுத்தார். இதுவே முப்புரத்தசுரர்கள் வரம்பெற்ற வரலாறு. (வடமொழி ஸ்காந்த புராணம், உபதேச காண் டம், அத்தியாயம் 70)

உரம் — வலிமை; இங்கு அவ்வலிமையால் அவ்வசுரர்கள் மூவுலகத்துக்கும் செய்த தீங்கினைக் குறித்தது.

பிரமநற்புரம் — நல்பிரமபுரம் என மாற்றிக்கொள்க.

அரனணுமமே—அரனது நல்ல நாமமே; நாமம் — பெயர், புகழ், கீர்த்தி.

விரவும் — பரவும்

சேணுலாமதில் வேணுமண்ணுளோர்
காணமன்றலார் வேணுநற்புரத்
தாணுவின்கழல் பேணுகின்றவர்
ஆணியொத் தவரே. 2

2. ஆகாயத்தை அளாவிய மதில் விண்ணுலகத்தவர் இறங்குவதற்கு வைத்த மூங்கில் (ஏணி) என மண்ணுலகத் தவர் காணும்படி அமைந்த, வாசனை மிகுந்த திருவேணு புரத்துத் தாணுவாகிய சிவபெருமானின் திருவடிகளைப் பாராட்டிப் போற்றுபவர்கள் அனைவரும் ஆணிப்பொன் போன்று சிறந்தவர்கள் ஆவர்.

மன்றல் ஆர் — திருமணம் போன்ற மங்கல விழாக்கள் நிறைந்த என்றுங்கொள்ளலாம்.

தாணு — தூண்; உலகத்தைத் தூண்போன்று தாங்கு தலால் சிவபெருமானுக்குரிய பெயராயிற்று. முன் வந்த விடத்து உரைத்ததுங்கொள்க.

ஆணி — மாற்றுயர்ந்த பொன். பொன்னின் தரத்தை உரைத்து அளவிட்டுப் பார்த்தற்குரிய உரையாணிப் பொன் னுகும். இதுபற்றி முன் வந்தவிடத்து உரைத்ததும் இங்குக் கொள்க.

அகலமார்தரைப் புகலுநான்மறைக்(கு)
இகலியோர்கள்வாழ் புகலிமாநகர்ப்
பகல்செய்வோனெதிர்ச் சகலசேகரன்
அகிலநா யகனே. 3

3. இடமகன்ற பூமியிலுள்ளவர்களால் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற நான்கு மறைகளிலும் வல்லவர்கள் வாழ் கின்ற திருப்புகலியென்னும் பெரிய நகரத்தில் உறைகின்ற வரும், சூரியனுக்கு எதிரான கலையோடு கூடிய சந்திரனை முடியில் அணிந்தவருமான சிவபெருமானே அகில உலகத் துக்கும் தலைவர் ஆவார்.

தரை — பூமி, ஆகு பெயராய்த் தரையில் வாழ்வோரைக் குறித்தது.

நான்மறைக்கு இகலியோர் — இதனை நான்மறையில் இகலியோர் என்று 'கு' உருபை 'இல்' உருபாக மாற்றிக் கொள்க. இகல் - வலிமை, எனவே நான்கு மறைகளிலும் வல்லமை உடையவர்கள் எனப்பொருள் கொள்ளப்பட்டது. இகல் என்ற சொற்கு 'அளவு' என்ற பொருளுமிருப்பதால் 'நான்கு வேதங்களுக்கும் ஒரு சிறந்த அளவுகோலாய் விளங்கு கின்ற வேதியர்கள்' எனவும் கொள்ளலாம்.

பகல் செய்வோன் — 'திவாகரன்' என்ற வடமொழிச் சொல்லின் தமிழாக்கம். திவா - பகல், கரன் - செய்பவன், அதாவது சூரியன்.

சகலசேகரன் — கலையோடு கூடிய சந்திரனைச் சூடிய சிவபெருமான்.

துங்கமாகரி பங்கமாவடுஞ்
செங்கையானிகழ் வெங்குருத்திகழ்
அங்கணனடி தங்கையால்தொழத்
தங்குமோ வினையே. 4

4. உயர்ந்ததும், பெரியதுமான யானை அச்சமடையும் படி பொருது கொன்று அதன் தோலையுரித்த செங்கையானும், புகழுடன் விளங்கும் திருவெங்குருவில் விளங்கும் அங்கணனு மான சிவபெருமானின் திருவடிகளைத் தங்களது கைகளால் தொழ (அவ்வாறு தொழுபவர்களிடம்) வினைகள் தங்குமோ? (தங்கா என்று கூறியருளியதாம்)

துங்கமாகரி — கஜாசுரன் என்னும் யானை வடிவுடைய அசுரன்.

செங்கையான் — சிவந்த கரத்தினையுடையவன்.

அங்கணன் — அழகிய கண்ணையுடையவன்; கண்ணுக்கு அழகு கருணையுள்ள பார்வை, அதாவது கருணா கடாக்ஷம் கிருபா கடாக்ஷம், எனக்கொள்க.

காணியொண்பொருள் கற்றவர்க்கீகை
உடைமையோரவர் காதல்செய்யுநல்
தோணிவண்புரத் தாணியென்பவர்
தூமதி யினரே. 5

5. நிலங்களையும், நல்ல பொருள்களையும், கற்றவர்களுக்குத் தங்கள் கொடையாகக் கொடுக்கும் வள்ளல்தன்மையுடையவர்கள் விரும்பி வாழ்கின்ற வளமையுடைய திருத்தோணிபுரத்து ஆணிப்பொன்னே என்று இறைவனைத் துதிப்பவர்களே நல்ல மதியுடையவர்கள் ஆவர். (மற்றையோர் நன்மதியினர் ஆகார் என்பதாம்)

தோணி வண்புரம் — வண்தோணிபுரம்; ஆணி — இரண்டாவது பாடலில் உரைத்தது கொள்க.

ஏந்தராவெதிர் வாய்ந்தநுண்ணிடைப்
பூந்தணோதியாள் சேர்ந்தபங்கினன்
பூந்தராய்தொழு மாந்தர்மேனிமேல்
சேர்ந்திரா வினையே. 6

6. படத்தினை விரிக்கும் பாம்பிற்கு ஒப்பாகப் பொருந்திய நுண்ணிய இடைப் பிரதேசத்தையுடையவளும், பூவையணிந்த குளிர்ந்த கூந்தலையுடையவளுமான உமாதேவியார் ஒரு பாகமாகச் சேர்ந்த பங்கினையுடையவனான சிவபிரானது தலமான திருப்பூந்தராய்தொழுகின்றமனிதர்கள்மேல் வினைகள் சேர்ந்திரா. (ஓடிவிடும் என்பதாம்)

ஏந்தரா — ஏந்து அரா, அதாவது படத்தினை ஏந்தும் பாம்பு. இடைக்குக் கீழ்ப்பட்ட பகுதியை பாம்பின் படத்துக்கு உவமித்தல் கவி மரபு.

ஓதியாள் — கூந்தலையுடையவள் (அம்பிகை).

வினைகள் — பிணி முதலிய துன்பங்கள்.

மேனிமேல் சேர்ந்திரா — உடம்பைப்பற்றி நில்லாது விலகி விடும்.

சுரபுரத்தினைத் துயர்செய்தாரகன்
துஞ்சவெஞ்சினக் காளியைத்தருஞ்
சிரபுரத்துளா னென்னவல்லவர்
சித்திபெற் றவரே. 7

7. தேவருலகத்தினைத் துன்புறுத்திய தாரகன் மடியும் படி மிகுந்த கோபமுடைய காளியைத் தோற்றுவித்தருளிய திருச்சிரபுரத்துள்ளவனே! என்று துதிக்கவல்லவர்கள் சித்திகள் அனைத்தும் பெற்றவராவர்.

சித்திகள் என்பது அட்டமா சித்திகளைக் குறிக்கும்.

உறவுமாகியற் றவர்களுக்குமா
நெதிகொடுத்துநீள் புவியிலங்குசீர்ப்
புறவமாநகர்க் கிறைவனேயெனத்
தெறகிலா வினையே. 8

8. வறியவர்களுக்கு உறவினராகியும் அவர்களுக்கு மாபெருஞ்செல்வத்தைக் கொடுத்தும் அருள் செய்கின்ற, இந்த நீண்ட புவியிலே விளங்குகின்ற பெருமையுடைய திருப்புறவம் என்னும் மாநகர்க்கு இறைவனாகிய, சிவபெருமானே என்று துதிக்க வினைகள் (அவ்வாறு துதிப்பவரை) வருத்தும் ஆற்றலுடையனவாகா.

அற்றவர்களுக்கு இறைவனே உறவும் மற்று எல்லாமாகி நிற்பன் என்பதைப் பலநூல்களில் காணலாம். மதுரைத் திருவிளையாடற்புராணத்துங் காணலாம்.

தெறகிலா — அழிக்கமாட்டா, துன்புறுத்தமாட்டா. இதில் உள்ள 'கில்' ஆற்றல் பொருளைக் குறிக்கும் இடைச்சொல்.

பண்புசேரிலங் கைக்குநாதனன்
முடிகள்பத்தையுங் கெடநெரித்தவன்
சண்பையாதியைத் தொழுமவர்களைச்
சாதியா வினையே, 9

9. பெருமைகள் பலசேர்ந்த இலங்கைக்கு அரசனாகிய இராவணனனது முடிகள் பத்தினையும் நசுங்கும்படி நெரித்த வனாகிய திருச்சண்பையில் எழுந்தருளிய ஆதியாகிய சிவபிரானைத் தொழுபவர்களை வினைகள் வெல்லமாட்டா. (வினைகள் வலியிழந்து தேய்ந்து போம் என்று கொள்க).

ஆதி — முதற்கடவுள்; சாதித்தல் — வெல்லுதல்.

இலங்கை வால்மீகியாலும், கம்பனாலும் புகழப்பட்ட தாகையால் பண்புசேர் என்பதை இலங்கைக்கேகூட்டிப் பொருள் கொண்டோம். சண்பைக்குச் சேர்த்து பண்புசேர் சண்பை என்று கொள்ளினும் பொருந்துவதே.

ஆழியங்கையிற் கொண்டமாலயன்
அறிவொணாததோர் வடிவுகொண்டவன்
காழிமாநகர்க் கடவுள்நாமமே
கற்றல்நற் றவமே. 10

10, அழகிய கையில் சக்கரப்படையினை ஏந்திய திருமாலும், பிரமதேவனும் அறியவொண்ணாததொரு தீப்பிழம்பாய வடிவு கொண்டவனாகிய, சீகாழியிற் கோயில் கொண்ட கடவுளாகிய சிவபெருமானது புகழ்களையே கற்றல்நல்ல தவமாகும். (மற்றைய கடவுளரது புகழ்களைக் கற்றல் அவமே எனக் கொள்க)

கற்பது உன் நாமம் எனப் பிற்காலத்து அடியவரான அபிராமி பட்டர் பாடியதும் இக்கருத்ததேயாம்,

விச்சையொன்றிலாச் சமணர்சாக்கியப்
பிச்சர்தங்களைக் கரிசறுத்தவன்
கொச்சைமாநகர்க் கன்புசெய்பவர்
குணங்கள் கூறுமினே. 11

11. மெய்யுணர்வு தருங் கல்வியறிவு ஒன்றுமிலாத சமணர்கள், பௌத்தர்கள் ஆகிய புறப்புறச்சமயிகளாகிய

பித்தர்களைத் தீமையாகிய வேரறுத்தவனாகிய சிவபிரானது திருக்கொச்சைவயம் என்னும் அழகிய நகருக்கு அன்பு செய்பவர்களுடைய குணங்களை எடுத்துக் கூறுவீராக.

நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றேயென்றபடி, சிவபிரானது திருத்தலத்துக்குஅன்பு பூண்டொழுகுபவர்களின் குணங்களைக் கூறுதலும் சிவபிரானின் குணங்களைக் கூறுதல் போல நல்ல தவமேயாம் என்று கொள்க.

கழுமலத்தினுட் கடவுள்பாதமே
கருதுஞானசம் பந்தனின்தமிழ்
முழுதும்வல்லவர்க் கின்பமேதரும்
முக்கணெம் மிறையே. 12

திருச்சிற்றம்பலம்.

12. திருக்கழுமலம் என்னும் விழுமியதலத்துள் கோயில் கொண்டருளும் கடவுளாகிய சிவபிரானின் திருவடிகளையே கருதுகின்ற திருஞானசம்பந்தனது இனியதமிழ்மாலை முழுமையும் வல்லவர்க்கு முக்கண் இறையாகிய அச்சிவபெருமானே அனைத்து இன்பங்களையுந் தந்தருளுவர்,

கடவுள்—அனைத்தையும் கடந்தும் உள்ளும் இருப்பவன்.

இன்தமிழ் வல்லவர் — திருஞானசம்பந்தப் பெருமானின் இனிமையான தமிழ்மாலைகளைப் பயின்று, அவற்றைப் பொருளுணர்ந்து ஓதவல்லவர்.

இன்தமிழ் — சொல்லாலும், பொருளாலும், பயனாலும் இனிமை பயக்கும் தமிழ்.

இன்பம்—இருமை, மறுமை இன்பங்கள்; திருஞானசம்பந்தர் உரை இறைவனரது உரையேயாகலின் முக்கணிறையே இன்பந்தரும் என்று கூறியருளினார் பிள்ளையார். அன்பர்கள் பயின்று இறையருளைப் பெறுவார்களாக.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தர் அருளியது

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்



யத்யத்கர்ம கரோமி

தத்ததகிலம்

சம்போ தவாராதனம்

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளான தேவாரத் திருப்பதிகங்களை பொழிப்புரை, விசேடவுரை, பதிக வரலாறு, தலவரலாறு, புராண வரலாறு முதலிய உரை விசேடங்களுடன் 108 தமிழ் மாலைகளாகப் பிரசுரித்துச் சிவ பெருமானின் 108 திருநாமங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தமிழ்மாலையாகச் சமர்ப்பிக்கும் இந்த திட்டத்தில் இத்துடன் 17 தமிழ் மாலைகள் வெளிவந்துள்ளன.

விலை விவரம் :		ரூ. - பை.
முதல் ஆறு மாலைகள் ஒவ்வொன்றும்	...	2-00
ஆறு தமிழ் மாலைகளும் சேர்ந்து	...	10-00
7-வது தமிழ்மாலை முதல் ஒவ்வொரு தமிழ் மாலையும்	...	3-00
ஒவ்வொரு ஆறு தமிழ் மாலைகளும்	...	15-00
1 முதல் 108 மாலைகளுக்கும் முன்பண உதவிச் சலுகை விலை	...	158-00

சலுகை விலை முன்பணமாகச் செலுத்தப்பட வேண்டும். ஒரு ஆண்டுக்குள் தவணைகளாகவும் செலுத்தலாம்.

முன்பணம் கிடைத்தவுடன் இதுவரை பிரசுரமான தமிழ் மாலைகள் உடனடியாக அனுப்பப்பட்டு மற்றவை பிரசுரமானதும் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும்.

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
உரையாசிரியர்—பதிப்பாசிரியர்
5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,
மேலமாம்பலம், சென்னை - 600 033.

Elango Achukoodam. 166, R.H. Road, Madras-4. Phone : 74121